www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu


நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925-2025

மலர் 87 இதழ் 43 | 2025 ஜனவரி 26 - பிப்ரவரி 01 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15

# கூட்டாட்சி தத்துவத்தை மீறும் யுஜிசி வரைவு விதிமுறைகளை திரும்பப்பெறுக!

## ஒன்றிய கல்வியமைச்சருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்

**பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு (யுஜிசி) வெளியிட்டுள்ள வரைவு நெறிமுறைகளுக்கு நாடு முழுவதும் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. "மாநில உரிமைகளுக்கு எதிராக பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு (யுஜிசி) வெளியிட்டுள்ள வரைவு நெறிமுறைகளைத் திரும்பப்பெற வேண்டும்" என தமிழ்நாடு சட்டப்பேரவையில், தமிழ்நாடு அரசின் சார்பில் ஜனவரி 9 ஆம் தேதி சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**



இந்தப் பிரச்சனையில் அனைத்து மாநிலங்களும் ஒன்றுபட்டு நிற்க அழைப்பு விடுத்து ஒன்பது மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அதில், "பல்கலைக்கழக நிதி நல்கைக்குழுவின் வழிகாட்டு நெறிமுறைகள் மாநில அரசுகளின் உரிமைகளை அப்பட்டமாக மீறக்கூடியதாக உள்ளது. இது நமது பல்கலைக்கழகங்களின் சுயாட்சியில் நீண்டகால பாதிப்புகளை ஏற்படுத்தும். அதிகாரத்தை மையப்படுத்தி, நமது நாட்டின் கூட்டாட்சித் தத்துவத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, ஒன்றிய அரசின் இந்த முயற்சிகளுக்கு எதிராக நாம் ஒற்றுமையாக நிற்பது முக்கியம்" என்று கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது போன்று, கேரளா, கர்நாடகா, தெலுங்கானா, மேற்கு வங்கம், பஞ்சாப், டெல்லி, இமாச்சலப்பிரதேசம், ஜம்மு காஷ்மீர், ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களின் சட்டமன்றங்களிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்; அதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்" என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில், யுஜிசியின் புதிய விதிமுறைகளை திரும்பப்பெற வேண்டும் என ஒன்றிய கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அதனுடன் தமிழ்நாடு சட்டப்பேரவையில் 9.1.2025 அன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகலையும் இணைத்துள்ளார். அதில், வரைவு நெறிமுறைகளில் உள்ள பல விதிகள் மாநிலங்களின் கல்விமுறை மற்றும் கல்விக் கொள்கைகளுக்கு முரணாக இருப்பதை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சுட்டிக்காட்டியுள்ளார்.

வரைவு யு.ஜி.சி. (இளங்கலை பட்டம் மற்றும் முதுகலை பட்டம் வழங்குவதற்கான குறைந்தபட்ச தரநிலைகள்) நெறிமுறைகள் 2024 தொடர்பான சில முக்கிய விதிகள் குறித்தும் கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

### 1. இளநிலை மற்றும் முதுநிலை மாணவர் சேர்க்கைக்கான நுழைவுத் தேர்வு நடத்துதல்

பொது நுழைவுத்தேர்வுகளுக்கான முன்மொழிவு மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் பல்வேறு கவலைகளை எழுப்புகிறது. மாநில மற்றும் தேசிய கல்வி

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்






புதிய தொழிலாளர் சட்டங்களை ரத்து செய்!

# பிப்ரவரி நாடாளுமன்ற முற்றுகையில் பங்கேற்க முடிவு

## ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கம் தீர்மானம்

புதிய தொழிலாளர் சட்டங்களை ரத்து செய்ய வலியுறுத்தி பிப்ரவரியில் நடைபெறும் நாடாளுமன்ற முற்றுகைப் போராட்டத்தில் பங்கேற்பது என ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் சிறப்புப் பேரவை தீர்மானித்துள்ளது.

தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் மாநில நிர்வாகக் குழு மற்றும் மாநிலப் பிரதிநிதிகள் சிறப்புப் பேரவைக் கூட்டம் திருச்சியில், மாநிலத் தலைவர் கே.இரவி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தை தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார். சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் என்.செல்வராஜ் செயல்பாட்டு அறிக்கை முன் வைத்தார், துணைப் பொதுச் செயலாளர் எம்.முனுசாமி சங்கத்தின் துணை விதிகளில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பான தீர்மானங்களை முன்வைத்தார். திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் எம்.பி. பிரதிநிதிகள் சிறப்புப் பேரவையை நிறைவு செய்து சிறப்புரையாற்றினார்.

மாநில நிர்வாகிகள் எம்.முனுசாமி, இரா. முருகன், ஆர்.துரைசாமி, மாமன்ற உறுப்பினர் கே.சுரேஷ், ஆர்.பாலகிருஷ்ணன், ஜிபிஎஸ் வடிவேலன், எஸ்.கவிதா, எஸ்.சேது, எஸ்.சின்னசாமி, ஜி.பாலன், ஆர்.தில்லைவனம், சி.நந்தினி, ஏ.எஸ்.சங்கர் மேஸ்திரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். 38 மாவட்டங்களில் இருந்து, கட்டுமானத் தொழிலாளர்களால் தேர்வு செய்யப்பட்ட 300க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சங்கத்தின் திருச்சி மாவட்டச் செயலாளர் சி.செல்வகுமார் நன்றி தெரிவித்தார்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் ஆறாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் நிதியிருப்பு உள்ளது.ஆகவே, நலவாரியத்தில்

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்

---

"சென்னை ஐஐடி இயக்குநர் திரு.காமகோடி, மாட்டு மூத்திரம் நல்ல மருத்துவக் குணம் கொண்டது என்று உறுதி அளித்துள்ளார்!

தினசரி மாட்டு மூத்திரத்தைக் குடித்துக்கொண்டு மாடு மேய்க்க அனுப்பி விடுவது நல்லது!

இதன்மூலம் புதிய ஆய்வுக் கருத்துகள் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும்!"



**கே. சுப்பராயன் எம்.பி**
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

---

### மாநிலச் செயலாளரின் கட்சிக் கடிதம்

ஒவ்வொரு சிறைச்சாலையிலும் உள்ள செங்கற்கள், கம்பிகள், ஜன்னல்கள், கதவுகள் என அனைத்தும் கம்யூனிஸ்ட்டுகளின் தியாகத்தை எடுத்துக் கூறும்.

... பக்கம் 2

### அரசமைப்புக்கு ஆளுநர் அடிபணிய வேண்டும்..

– மே.து.ரா.

மாநில ஆளுநர் அனைத்துச் செயல்பாடுகளிலும் மாநில அமைச்சரவையின் அறிவுறுத்தலுக்கு அடிபணிய வேண்டும் என்றுதான் அரசமைப்புச் சட்டம் வரையறுத்து வழிகாட்டியுள்ளது.

... பக்கம் 5

### வகை மாதிரிப் பாத்திரமும் மரபு மீறிய பாத்திரமும்

ஆ.சிவசுப்பிரமணியன்

இரு சிறுகதைகளிலும் இடம்பெறும் மூன்று கதை மாந்தர்களும் தமிழ்நாட்டுச் சூழலில் இடைநிலை சாதி என்ற பிரிவுக்குள் அடங்குவர். இவர்களின் சாதியப் படிநிலைப்படி மங்கல அமங்கலச் சடங்குகளில் வெறும் பார்வையாளர்களாக பங்கேற்பதே அரிதான செயல்.

... பக்கம் 7

### 'அனுமன்' சீமானின் அவதூறுகள்

வ.மணிமாறன்



தகவல்களின் துல்லியம், உண்மைத் தன்மை குறித்த கவலையின்றி அவதூறுகளை அடுத்தடுத்து பரப்பிக் கொண்டே இருப்பதற்கான பல்கலைக்கழகம்தான் வாட்சாப். இந்தப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் எப்படி இருப்பார்கள்? அவர்களில் ஒருவர் தான் சீமான்.

... பக்கம் 8

கட்சிக் கடிதம்

# ஆற்றல்மிக்க படையைத் திரட்டுவோம்!



போர்க்குணமிக்க தோழர்களே!

**நமது பேரியக்கத்தின் நூற்றாண்டைக் காணும் நாம், கட்சி தொடங்கிய நாள் முதல், நம் உடலில் உள்ள ரத்தமும், சதையும், நம் உயிரும் நாட்டைப் பற்றிக் கவலைப்பட்டதே அன்றி, நம் வாழ்க்கை எப்படி உள்ளது என்பதைப் பற்றிக் கவலைப்பட்டதில்லை.**

நாம் உணவருந்துவது நமது உடல் இயங்க வேண்டும், அதில், உயிர் இருக்க வேண்டும் என்பதற்காக மட்டும் அல்ல; நாட்டுக்கு, நாட்டு மக்களுக்குப் பயன்படும் வகையில் பணிபுரிய வேண்டும் என்பதற்காகவும்தான்.

நம் முன்னோர்கள் அவர்தம் செல்வங்களை இழந்தார்கள், அவர்கள் படித்த படிப்பை, பெற்ற பட்டங்களை அனைத்தையும் நாட்டிற்கே அர்ப்பணித்தார்கள்.

அவர்கள் மீது ஏராளமான வழக்குகள் உண்டு. அவை சிறையில் இருந்து வெளியே வர முடியாத அளவிற்கு, ஏன் ஜாமீனில் கூட வர முடியாத அளவிற்கு வழக்குகள் போடப்பட்டுச் சிறைக்குள் தள்ளி சித்திரவதை செய்தார்கள்.



நாடு முழுவதும் உள்ள லட்சக்கணக்கான கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் எவர் மீதாவது சொத்து சேர்த்தார்கள், வருமானத்திற்கு அதிகமாகச் சொத்து குவித்தார்கள் என்று ஏதாவது வழக்கு உண்டா?

மாறாக அரசாங்கத்திற்கு எதிராகப் போராடினார்கள், சதி செய்தார்கள், மக்களைத் தூண்டினார்கள் என்றுதான் அன்று முதல், இன்று வரை வழக்குகள் போடப்பட்டன, போடப்பட்டும் வருகின்றன.

ஆம்! இத்தகைய நடவடிக்கைகளை நாம் தொடர்வோம்! தொடர்ந்து கொண்டே இருப்போம்!

அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்து அஞ்சப்போவதில்லை, எவரிடத்திலும் கெஞ்சப் போவதுமில்லை.

**சிறை, சித்திரவதைகள் எவ்வளவு அதிகபட்சமாக உண்டோ அவை அனைத்தையும் சந்தித்தாகிவிட்டது. இதற்கு மேலும் ஒரு பெருங்கொடுமையைச் சந்திக்க வேண்டுமா? அது பற்றியும் கவலை இல்லை.**

**நாடு முழுவதும் உள்ள கிளைச் சிறைசாலை முதல் மத்திய சிறைச்சாலைகள், திறந்தவெளிச் சிறைச்சாலைகள் என அனைத்தையும் சந்தித்தாகிவிட்டது.**

**ஒவ்வொரு சிறைச்சாலையிலும் உள்ள அனைத்துச் செங்கற்களும், அதில் உள்ள கம்பிகள், ஜன்னல்கள், கதவுகள் அனைத்தும் கம்யூனிஸ்ட்டுகளின் தியாகத்தை எடுத்துக் கூறும்.**

**தூக்குத் தண்டனைகளைப் பார்த்தாகிவிட்டது. துப்பாக்கித் தோட்டாக்கள் அனைத்தும் கம்யூனிஸ்டுகளின் மார்பில் பாய்ந்தனவே அன்றி, ஒருபோதும் முதுகில் பாய்ந்தது கிடையாது.**

**உன்னைச் சுடப்போகிறேன் ஓடிவிடு! தப்பித்துக் கொள்! என்று அரசின் அடியாட்களான காக்கிகளின் வஞ்சகக் குரல் கேட்டபோது, அட முட்டாளே! நான் ஓடி ஒளிய மாட்டேன்! புறமுதுகு காட்டும் கலையை நான் கற்கவில்லை! இதோ! என் அகண்ட மார்பைப் பார்!! அதை நோக்கிக் குறிவை! உன் துப்பாக்கித் தோட்டாக்களைக் கொண்டு சுடு!! என மார்பைக் காட்டிய மாவீரர்கள் கம்யூனிஸ்டுகள்.**

**சிறையில் அடைத்து சித்திரவதை செய்தும், தாங்கள் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ள முடியாத கோழைகள், உணவோடு சேர்த்து விஷத்தைக் கலந்து உண்ண வைத்து பழி தீர்த்த பாவிகளையும் கண்டாகிவிட்டது.**

இவ்வளவும் ஏன்? எதற்காக? தங்களின் சுய தேவைக்கா? சுயநலத்திற்கா? ஒருபோதும் இல்லை.

நாடு விடுதலை பெற வேண்டும். அந்நியர் ஆட்சி அகற்றப்பட வேண்டும். என் நாட்டு மக்கள் அனைவரும் சுதந்தரக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்ற ஒற்றை இலக்கைத் தவிர வேறு ஏதும் உண்டா?

இரத்தத்தைச் சிந்தி, உயிர்பலி கொடுத்து எண்ணிலடங்கா தியாகத்தின் மூலம் நாடு விடுதலை பெற்றது.

நாடு விடுதலை பெற்று ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15ஆம் நாள், சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டு வருகின்றது.

77 ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையில் ஒருவர் சொல்லுகிறார். நாடு 1947ல் விடுதலை பெறவில்லை. மாறாக, அயோத்தியில் கவிந்த மாடங்களுடன் வரலாற்றை ஏந்திநின்ற பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கி, அங்கே ராமருக்குக் கோவில் கட்டித் திறப்பு விழா நடைபெற்றது. அன்றுதான் நாடு விடுதலை பெற்றது என்று, கொஞ்சம் அச்சமின்றிப் பகிரங்கமாகக் கூறுகின்றார்.

அவ்வாறு கூறியவர் வேறு யாருமில்லை, ஆர்எஸ்எஸ் என்ற கொடிய அமைப்பின் தலைவராகக் கோலோச்சி வருகின்ற மோகன் பகவத் என்ற பெரிய மனிதர். இத்தகைய விஷமத்தனமான ஒரு கருத்தைப் பகிரங்கமாகச் சொல்கிறார் என்றால், அதனை இந்த நாடு அனுமதிக்கிறது என்றால், அதன் பொருள் என்ன?

விடுதலைப் போர்க்களத்தில் அவர்கள் ஒரு குண்டுமணி அளவில் கூட ரத்தம் சிந்தவில்லை என்பது மட்டுமல்ல, வெள்ளை ஏகாதிபத்திய கூட்டத்திற்கு வெண்சாமரம் வீசிய துரோகக் கூட்டம்தான் ஆர்எஸ்எஸ் என்கின்ற அயோக்கியத்தனமான வன்முறைக் கும்பல்.

வெள்ளையர் ஆட்சி ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தைச் சேர்ந்த இருவரை மட்டும் கைது செய்தது.

ஒருவர் இந்த நாட்டின் பிரதமராகப் பொறுப்பு வகித்த அடல் பிகாரி வாஜ்பாய். மற்றொருவர் ஆர்.எஸ்.எஸ், பாஜக கூட்டத்தினரால் வீரர் எனப் போற்றப்படுகின்ற சாவர்க்கர்.

அந்த இருவருமே வெள்ளை அரசாங்கத்திடம் எங்களுக்கும், விடுதலைப் போராட்டத்திற்கும் சம்பந்தமில்லை. நாங்கள் உங்களை எதிர்த்துப் போராடவில்லை எனக் கூறி மன்னிப்புக் கடிதம் எழுதி கொடுத்துவிட்டு, வெளியே வந்த உத்தம புத்திரர்கள் ஆவார்கள்.

பரிபூரணச் சுதந்திரமே எங்கள் லட்சியம் எனச் சமர் புரிந்த கம்யூனிஸ்டுகள், ஒன்றுபட்டுப் போர் புரிந்த நாம், பிளவுபட்ட விபரீதத்தால் எத்தகைய பின்னடைவை நாடு எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டாமா?

கம்யூனிஸ்டுகள் பிளவு பட்டதன் விளைவு, நாட்டில் புல்லுருவிகள் தோன்றி நாட்டையே சீரழிக்க தொடங்கிவிட்டனர்.

ஆட்சி அதிகாரம் யாரிடம் செல்ல கூடாதோ அவரிடத்தில் சென்று விட்டது. அவர்கள் நினைத்ததை எல்லாம் பேசுகிறார்கள் என்பது மட்டுமல்ல, தங்களுக்குக் கிடைத்த அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்தி வருகின்றனர்.

அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பாக, ஜனநாயகத்திற்குப் புறம்பாக, மதச்சார்பின்மை கொள்கைக்கு எதிராகச் செயல்பட்டு வருகின்றனர்.

ஆர்.எஸ்.எஸ் என்கிற அமைப்பின் அரசியல் பிரிவான பா.ஜ.கவின் ஆட்சி, ஆர்எஸ்எஸ் அஜண்டாவைப் படிப்படியாக நிறைவேற்றி வருவது மிகப்பெரும் பேராபத்தாகும்!

நாட்டில் இன்று இடதுசாரிகள் நடத்தி வரும் போராட்டம் இரண்டாவது சுதந்திரப் போராட்டமாகும்!

அந்நியரை எதிர்த்துக் களம் கண்டு வெற்றிவாகை சூடினோம். ஆனால், வெற்றிக்கு உழைத்தவர் கையில் வெற்றிக்குரிய கோப்பை வரவில்லை.

மாறாக, குழிதோண்டிய துரோகிகளின் கைக்குச் சென்று விட்டது. பாசிச அபாயத்திற்கு எதிராக நடைபெற்று வரும் இரண்டாம் சுதந்திரப் போரில், இடதுசாரிகள், மதச் சார்பற்ற ஜனநாயகச் சக்திகள் அனைவரையும் ஒருங்கிணைக்க வேண்டிய பெரும் பொறுப்பும், கடமையும் நம் தோளின் மீது சுமத்தப்பட்டுள்ளது.

1947க்கு முன்பு விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் என அனைத்துத் தரப்பையும் ஒருசேர அணிவகுக்கச் செய்து களம் கண்டதால் வெற்றிவாகை சூடினோம்!

அத்தகைய ஒருங்கிணைப்பு முன்னைக் காட்டிலும் அதிகம் தேவைப்படும் காலமிது!

காலம் நமக்களித்துள்ள கட்டளையை நாம் கணக்கில் கொள்வது மிக முக்கியமாகும்!

ஒரு அபாயம் அல்ல, பல்வேறு அபாயங்களை நாடு எதிர்கொன்டுள்ளது. அவை அனைத்தையும் எதிர்கொள்ளக் கூடிய ஆற்றல்மிக்கப் படையாக, பெரும் படையாக அர்ப்பணித்துக் கொள்ளும் போர்ப்படையாக, எதனையும் எதிர்கொள்ளக்கூடிய பேராற்றல் மிக்கப் படையாக, நம்மை நாம் தயார் செய்து கொள்வது மட்டுமல்ல, நமது நாட்டு மக்களையும் தயார் செய்திட வேண்டிய, விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பும், கடமையும் நம் முன்னே உள்ளது.

நமது கட்சி வெளியிட்டு வருகின்ற நூல்களை, ஜனசக்தி இதழைப் பெருமளவு மக்களிடத்தில் கொண்டு சேர்ப்பது நம் தலையாய கடமையாகும்.

நாட்டில் ஏற்பட்டு வரும் பேராபத்துகளைத் தடுத்து நிறுத்திட முடியும், நம்மால் நிச்சயம் முடியும். சகல சக்திகளையும் கொண்ட வெள்ளை ஏகாதிபத்தியத்தை விரட்டியடித்து நாம், பாஜக அரசை அகற்ற முடியாதா? முடியும். முனைப்போடு செயல்படுவோம்! வெற்றி வாகை சூடுவோம்!

மீண்டும் சந்திப்போம்!

வணக்கம்,

தோழமைமிக்க,



**(இரா.முத்தரசன்)**
மாநிலச் செயலாளர்

# கார்ப்பரேட்களின் ஆணவத்துக்கு ஆணி அறைவோம்!



ப.சேர்முக பாண்டியன்

**லார்சன் அண்ட் டூப்ரோவின் நிறுவனத் தலைவர் எஸ்.என்.சுப்பிரமணியன் எந்த ஒரு விடுப்பும் எடுக்காமல் வாரத்தின் ஏழு நாட்களும் அதாவது விடுமுறை நாளான ஞாயிறும் சேர்த்து தினசரி 13 மணி நேரம் அதாவது வாரத்திற்கு 90 மணி நேரம் ஊழியர்கள் உழைக்க வேண்டும் என்று பேசியது பெரும் பரபரப்பைக் கிளப்பும் பேசுபொருளானது.**

## “பெண்டாட்டி முகத்தை எவ்வளவு நேரம் பார்ப்பாய்!”



எஸ்.என்.சுப்பிரமணியன் | நாராயணமூர்த்தி | கவுதம் அதானி



எஸ்.என்.சுப்பிரமணியன் “ஞாயிற்றுக் கிழமைகளில் உங்களை வேலை பார்க்க வைக்க முடியாததற்கு மிகவும் வருந்துகிறேன். நான் ஞாயிறு அன்றும் காலை வேலை பார்க்கிறேன். நான் தினமும் காலை 6.30 முதல் இரவு 8.30 வரை வேலை செய்கிறேன். ஞாயிற்றுக்கிழமைகளில் வீட்டில் இருந்து என்ன செய்யப் போகிறீர்கள்? எவ்வளவு நேரம்தான் மனைவியின் முகத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருப்பீர்கள். எவ்வளவு நேரம்தான் மனைவியும் கணவனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்க முடியும். அலுவலகத்துக்கு வாருங்கள்; வந்து வேலை பாருங்கள்; உலகில் முதல் இடத்தை அடைய வேண்டுமென்றால் வாரத்துக்கு 90 மணி நேரம் வேலை செய்ய வேண்டும்” என தனது ஊழியர்கள் மத்தியில் பேசியுள்ளார். இதற்குக் கடுமையான கண்டனத்தை எதிர் கொண்டதால் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றும் லட்சியம் கொண்டதாகவே எங்கள் தலைவரின் பேச்சு இருந்தது என்று லார்சன் அண்ட் டூப்ரோ தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இன்போசிஸ் நிறுவனர் நாராயணமூர்த்தி ஊழியர்கள் வாரத்திற்கு 70 மணி நேரம் உழைக்க வேண்டும் என்று சொன்னார். அதானி குழுமத்தின் தலைவர் கவுதம் அதானியுடம் இதுகுறித்து சமீபத்தில் கேட்ட போது வேலை, வாழ்க்கை இரண்டையும் சமநிலையில் கொண்டு செல்வது என்பது ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.

சிலருக்கு வீட்டில் 4 மணி நேரம் செலவிட்டால் போதுமானது. சிலருக்கு 8 மணி நேரம் செலவிட வேண்டும். ஆனால் நீங்கள் குடும்பத்துடன் 8 மணி நேரம் செலவிட்டால், உங்கள் மனைவி வீட்டைவிட்டு ஓடி விடுவார் என்று சொன்னது சமூக வலைதளங்களில் கடும் கண்டனத்துக்கு ஆளானது.

ஏதோ இவர்கள் தேச நலனில் அக்கறை கொண்டவர்கள் போலவும் நாட்டின் வளர்ச்சிக்காக இதுபோன்று நேரம் காலம் பார்க்காமல் உழைப்பது போலவும் வருகின்றனர். உண்மையிலேயே தேசநலனுக்காகப் பேசுகிறார்களா? என்றால் கண்டிப்பாக இல்லை. கார்ப்பரேட் பெருமுதலாளிகளின் செல்வத்தைப் பெருக்க லாபம் மேலும் லாபம் மேன்மேலும் லாபம் என்ற லாபவெறி பித்து தலைக்கேறி நிற்பதுதான் உண்மை. தொழிலாளர்களை ஈவு இரக்கமின்றிக் கசக்கிப் பிழிந்து தங்களது லாபத்தை அதிகரித்துக் கொள்ளவே பேசுகின்றனர்.

எல் அண்ட் டி எஸ்.என்.சுப்பிரமணியனின் சம்பளம் ஆண்டுக்கு 53 கோடியாம். அவரது பங்களாவில் ஒடிஒடி வேலை செய்ய ஏவலாட்களும் பணியாட்களும் இருப்பார்கள். குடும்பம் பற்றிய கவலை ஏதும் இருக்காது. குறைந்த மாதச் சம்பளத்தில் வேலை பார்க்கும் ஊழியர்கள் அவர்கள் வேலைபார்க்கும் இடத்தில் செய்யும் பணிகளோடும் குடும்பத்தைக் கவனிக்க வேண்டும். அதுவும் பெண் ஊழியர்கள் என்றால் குடும்பச்சுமையோடு அலுவலக வேலையைப் பார்க்கவேண்டும். ஞாயிறு அன்று மனைவியின் முகத்தையே எத்தனை மணி நேரம் பார்த்துக்கொண்டிருப்பது என்பது அப்பட்டமான ஆண் மேலாதிக்க அகம்பாவம். பெண்களுக்கு எதிரான மன நிலை கொண்டவர்களும் பாலினச் சமத்துவத்துக்கு எதிரானவர்கள் மட்டுமே இம்மாதிரி பேச முடியும். “குடும்பத்துடன் 8 மணி நேரம் நீங்கள் செலவிட்டால் உங்கள் மனைவி வீட்டைவிட்டு ஓடி விடுவார்கள்” என்று அதானி பேசுவது குடும்ப உறவுகளையே இழிவுபடுத்தும் பேச்சாகும்.

இந்த மூன்று கார்ப்பரேட் முதலைகளின் பேச்சை ஏ.ஐ.டி.யு.சி, சி.ஐ.டி.யு உள்ளிட்ட மத்தியத் தொழிற்சங்கங்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட இடது சாரிக் கட்சிகளும் தங்களது எதிர்ப்பைக் கடுமையாகப் பதிவு செய்துள்ளன.

“தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கம் எட்டு மணி நேர வேலை வாழ்விற்குத் தேவையான சம்பளம் தொழிற்சங்க உரிமைகள் மற்றும் வேலைக்குப் பாதுகாப்பு” என்ற கோரிக்கைகளை முன் வைத்து மார்க்ஸ் 1864 இல் துவங்கிய முதலாம் அகிலத்துக்குப் பின்புதான் போராட்டங்களைத் துவங்கினர். முதலாளித்துவம் ஆடிப்போனது. அரசுகளைத் துணைக்கு அழைத்துக் கொண்டது. போராட்டங்களை அடக்க வன்முறையை ஏவிவிட்டது. ஆனால், உலகம் முழுவதும் தொழிலாளர்களின் போராட்டக் குரல் ஓங்கி ஒலித்தது.

1889 ஆண்டு ஜூலை 14 அன்று தொழிற்சங்கங்களின் சர்வதேச பார்லிமென்ட் பாரிசில் கூடி உலகெங்கும் உள்ள தொழிலாளர்களுக்கு 8 மணி நேர வேலை கொண்டுவரவேண்டும் என்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டது. 8 மணி வேலை நேரத்துக்காகப் போராடிய சிகாகோ தியாகிகளை நினைவில் கொண்டு 1890 மே 1 முதல் உலகெங்கும் தொழிலாளர்களால் மே தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

1919 இல் உருவான சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு 8 மணி நேர வேலை என்பதைத் தனது முதல் தீர்மானமாக நிறைவேற்றியது. பிரிட்டிஷ் இந்திய அரசு அதை ஏற்றுக்கொண்ட போதும் அமல்படுத்தவில்லை. அப்போது 10 மணி நேரம் முதல் 12 மணி நேரம் வரை இந்தியத் தொழிலாளர்கள் வேலைபார்த்து வந்தனர்.

இந்தியாவில் உள்ள தொழிற்சங்கங்களை வர்க்க ரீதியாக திரட்டி ஓரமைப்பாய் 1920 அக்டோபர் 31 இல் உருவான ஏ.ஐ.டி.யு.சி 8 மணி நேர வேலை என்பதை முன்னிறுத்தி அதை எட்டும் வரை பல போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வந்தது.

இந்திய வைஸ்ராயின் தலைமையிலான நிர்வாக கவுன்சிலின் தொழிலாளர் நலத்துறைக்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட சட்ட மேதை பி.ஆர் அம்பேத்கர் டில்லியில் 1942 நவம்பர் 27 அன்று கூடிய ILC இன் ஏழாவது அமர்வில் 8 மணி நேர வேலை, பெண் தொழிலாளர்களுக்குச் சலுகைகள் உள்ளிட்ட பல தொழிலாளர் சீர்திருத்தங்களை முன்மொழிந்தார். பின்னர் 1948 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தொழிற்சாலைகள் சட்டம் மூலம் 8 மணி நேரம் என்பது தொழிலாளர்களின் சட்டப்பூர்வமான உரிமையானது. மேலும் ஏ.ஐ.டி.யு.சி உள்ளிட்ட பல மத்தியச் சங்கங்களின் தொடர் போராட்ட நடவடிக்கைகள் காரணமாக பணிப் பாதுகாப்பு, ஊதிய நிர்ணயம், போனஸ், சமூகப் பாதுகாப்பு, மகப்பேறு விடுப்பு, விடுமுறை உள்ளிட்ட சலுகைகளை இந்தியத் தொழிலாளர்களுக்கு உறுதிப்படுத்தும் சட்டங்களும், சட்டத் திருத்தங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஆனால் இப்போதுள்ள மோடி தலைமையிலான பிஜேபி அரசு இந்தியத் தொழிலாளி வர்க்கம் கண்ணீரும் செந்நீரும் சிந்திப் போராடிப்பெற்ற இம்மாதிரியான 44 சட்டங்களை 4 சட்டத் தொகுப்புகளாக மாற்றியுள்ளது. அவை மூலம் தொழிலாளர்கள் இதுவரை அனுபவித்து வந்த உரிமைகளையும் சலுகைகளையும் பறிக்க முயல்கிறது. சங்கம் வைத்துச் செயல்படுவதற்குப் பல தடைகளை விதித்துள்ளது. அதன் மூலம் இந்தியத் தொழிலாளர்களை கார்ப்பரேட்களின் அடிமைகளாக மாற்ற அனைத்து நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளது.

கார்ப்பரேட்டுகளின் 90 மணி நேர வேலை பேச்சுகளுக்கு மோடியின் அரசு கள்ள மௌனம் சாதிக்கிறது. இந்தியத் தொழிலாளர் வர்க்கத்தின் குரல்வளையை நெரித்து அவர்கள் இது வரை போராடிப் பெற்ற சலுகைகளையும் பறிக்க பாசிச பாஜக அரசும் கார்ப்பரேட்களும் கைகோத்துள்ள சதி தொடர்ந்து அம்பலமாகிக் கொண்டு வருகிறது. இக்கூட்டுச் சதியை முறியடிக்க இன்றைய தேவை தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையே! ஒற்றுமையே நம் பலம். எனவே வர்க்க உணர்வோடு “ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு! ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு” என்ற மகாகவியின் வரிகளை உள்வாங்கிப் போராட வேண்டிய நேரம் இது. “எதிர்காலம் நமதே!” என்ற நம்பிக்கை ஒளி பிறக்கட்டும். இழப்பதற்கு ஏதுமில்லை பொன் விலங்குகளைத் தவிர.

தொடர்புக்கு: 94436 85422

### பணிச்சோர்வை அதிகப்படுத்தும்


ஒரு ஆணோ பெண்ணோ குடும்ப உறுப்பினர்களின் நலன்களான கல்வி ஆரோக்கியம் உள்ளடக்கிய பல விஷயங்களை முன்னிறுத்தியே பணிக்குச் செல்கின்றனர். ஒருவர் தனது குடும்பத்தின் மீது கொண்ட அன்பும் அக்கரையும் காரணமாகவே மனிதச் சமூகம் இயங்குகிறது. குடும்பம் என்ற கட்டமைப்புதான் மனிதனைத் தன்முனைப்புடன் செயல்பட வைக்கிறது. விடுப்பே எடுக்காமல் வாரம் முழுதும் தினமும் 13 நேரம் வேலை பார்த்தால் குடும்பத்தைப் பேணிக்காக்கும் கடமை கடுமையான பாதிப்புக்கு உள்ளாகும். குடும்பங்கள் சிதைந்து விடும். உடல் நலமும் மன நலமும் கடுமையாகப் பாதிக்கப்படும். உலகச் சுகாதார நிறுவனம் தனது ஆய்வறிக்கை ஒன்றில் வாரத்திற்கு 55 மணி நேரமோ அதற்கு மேலோ வேலை பார்ப்பவர்களில் 35 சதவிகிதம் பேருக்கு ஸ்ட்ரோக் வருவதற்கும் 17 சதவிகிதம் பேருக்கு இதய நோய் வரவும் வாய்ப்பு உண்டு என்றும் பணிச் சோர்வை அதிகப்படுத்தும் என்றும் சொல்கிறது.

### வினாடி - வினா

1 அகிலத்தில் லெனின் முன்வைத்த தேசிய, காலனியப் பிரச்சனைகள் குறித்த ஆய்வறிக்கை எப்பொழுது விவாதிக்கப்பட்டது?

2 கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது பேராயத்தில் எந்த நாட்டுக் கட்சியின் பிரதிநிதியாக எம்.என். ராய் கலந்துகொண்டார்?

3 கம்யூனிஸ்ட் அகிலத்தின் அறிவுறுத்தல்படி மெக்சிகன் சோசலிஸ்ட் கட்சியின் பெயர் எப்படி மாற்றப்பட்டது?



எம்.என்.ராய்

4 அகிலத்தில் தேசிய, காலனியப் பிரச்சனைகள் குறித்த லெனின் ஆய்வறிக்கையுடன் வைக்கப்பட்ட மற்றோர் அறிக்கை யாருடையது?

5 கம்யூனிஸ்ட் அகிலத்தின் மூன்றாவது பேராயம் எந்த ஆண்டு, எங்கு நடைபெற்றது?

6 போல்ஷ்விக் புரட்சிக்குப் பின்னர் தொடங்கப்பட்ட முதல் கம்யூனிஸ்ட் கட்சி எது?

விடைகள் 12 ஆம் பக்கம்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 87 இதழ் 43

# கொக்கரிக்கும் ட்ரம்ப், கும்பிடும் மோடி!

இரண்டு அமெரிக்க அதிபர்களிடையே என்ன வித்தியாசம் என்று பிடல் காஸ்ட்ரோவிடம் கேட்டபோது, ஒரு மனிதனின் இரண்டு காலணிகளிடையே என்ன வேறுபாடு இருக்க முடியும் என்று பதிலளித்தார்.

ஜனவரி 20ஆம் தேதி புதிய அமெரிக்க அதிபராக டொனால்ட் ட்ரம்ப் இரண்டாவது முறையாக பதவியேற்றார்.

“அமெரிக்காவை மீண்டும் மாபெரும் நாடாக்குவேன்; அமெரிக்கா மற்றும் அமெரிக்க மக்களின் நலனே முதன்மையானது” என்று பேசியிருக்கிறார்.

அவரது நாட்டு மக்களைக் காப்பதற்கான கடமை அவருக்கு இருக்கிறது. அதற்காக உலகத்தில் மற்ற நாடுகளை எல்லாம் மொட்டையடிப்பேன் என்று சொல்வதற்கான உரிமை அவருக்கில்லை. ஆனால், அதைத்தான் செய்யப் போவதாகப் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்.

சுற்றுச்சூழல் சம்பந்தமான பாரிஸ் உடன்பாட்டில் இருந்து விலகுவதாக அறிவித்தார். கரியமில வாயு வெளியேற்றத்தால் உலகின் சுற்றுச்சூழல் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. பருவநிலை மாறி, காலம் தவறி மழை பெய்கிறது, உலக வெப்பநிலை உயர்கிறது, துருவப் பனி மலைகள் உருகுகின்றன, கடல் நீர்மட்டம் உயர்வதால் உலகின் தாழ்வான பகுதிகள் கடலுக்குள் மூழ்குகின்றன.

உலக உஷ்ணம் 1.5 சென்டிகிரேடுக்கும் அதிகமாக உயராமல் இருக்க அந்த உடன்பாடு வழி செய்கிறது. அமெரிக்கா உலகத்தில் மிகப்பெரிய பொருளாதார நாடு, மிக அதிகமாகச் சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் நாடு. உலகின் மற்ற நாடுகள் வெளியேற்றும் மாசுகளின் அளவு குறைவு. ஆனால், அமெரிக்கா மாசுபடுத்துவதால் ஏற்படும் விளைவை அத்தனை நாட்டு மக்களும் அனுபவிக்க வேண்டும்!

உலகச் சுகாதார அமைப்பிலிருந்தும் அமெரிக்கா விலகுகிறது. அதன் வழிகாட்டலை அமெரிக்கா ஏற்காது. அந்த அமைப்புக்கான நிதிப் பங்களிப்பையும் வழங்காது சீர்குலைக்கும்.

அமெரிக்காவின் உள்நாட்டு உற்பத்தியைப் பாதுகாப்பதற்காக, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு வரியை அதிகரிக்கப் போகிறாராம். கனடா, மெக்ஸிகோ, பனாமா உள்ளிட்ட நாடுகளிலிருந்து வரும் பொருட்களுக்கு இறக்குமதி வரி 25 சதவீதம் அதிகரிக்குமாம்.

உலக வணிகம் கருதி, மற்ற நாடுகள் டாலரைச் சம்பாதித்துத் தீர வேண்டும். அதற்கு அமெரிக்காவில் தமது பொருட்களை விற்க வேண்டும். இறக்குமதி வரியை அமெரிக்கா உயர்த்துவதால், அவற்றின் விற்பனை குறையும். டாலர் விலை அதிகரிக்கும். மற்ற நாடுகளில் நாணய மதிப்பு வீழ்ச்சியடையும். இதனால் வளர்முக நாடுகளில் விலைவாசி கட்டுக்கடங்காமல் உயரும். பொருளாதார நெருக்கடி ஏற்படும்.

ஆனால் உலக வர்த்தகக் கழகத்தின் மூலம் உலகின் மற்ற நாடுகள் எல்லாம் இறக்குமதி வரியைக் குறைக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறார்கள். அதிலும் இந்தியாவில் அமெரிக்கப் பொருட்களுக்கான இறக்குமதி வரி அதிகமாக இருக்கிறது. இதனால் அமெரிக்க வணிகம் பாதிக்கப்படுகிறது. இதனை அனுமதிக்க முடியாது என்று வெளிப்படையாக மிரட்டுகிறார் ட்ரம்ப்! வணிகத்தை ஆயுதமாகப் பயன்படுத்தி மற்ற நாடுகளைக் காலடியில் வீழ்த்தக் கருதுகிறார்.

புலம்பெயர்ந்த மக்களைத் துரத்துகிறார். இனி அமெரிக்காவில் பிறக்கும் வேற்று நாட்டினரின் குழந்தைகளுக்குக் குடியுரிமை இல்லை எனது உத்தரவிட்டுள்ளார். உடனடியாக 18,000 இந்தியர்கள் வெளியேற்றப்படுவதை இந்திய அரசும் ஏற்கிறது. இன்னும் 2,20,000 இந்தியர்கள், அங்கீகாரமின்றித் தங்கி இருப்பதாக அமெரிக்கக் கணக்கீடு கூறுகிறது.

பதவியேற்பு விழாவில் இந்திய அரசு சார்பில் வெளியுறவுத்துறை அமைச்சர் சென்றிருக்கிறார். ஆத்ம நண்பரான மோடி போகவில்லை. ஆனால் அவரது நண்பரான முகேஷ் அம்பானி மனைவியோடு சென்றிருந்தார்.

ஐந்து லட்சம் விருந்தினர்கள் பங்கேற்றனர். விழாவில் பங்கேற்க, விருந்தில் அமர, உடனிருந்து புகைப்படம் எடுக்கத் தனித்தனியாக டிக்கெட் போட்டு, பல்லாயிரம் கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது. சரியான தொகை தெரியவில்லை!

அதே நாளில், இந்தியப் பங்குச் சந்தை மூலதன மதிப்பு 7லட்சம் கோடி ரூபாய் வீழ்ச்சி அடைந்துள்ளது. இந்தியாவுக்கு எதிரானவர் டிரம்ப் என்ற அச்சமே காரணம்.

ட்ரம்புக்கு வாழ்த்துகளைக் கூறிய பிரதமர் மோடி, “இந்தியா அமெரிக்க மூலோபாயக் கூட்டாண்மையை வலுப்படுத்த அவருடன் இணைந்து பணியாற்றுவதை நான் எதிர்நோக்குகிறேன்” என ட்வீட் செய்து இருக்கிறார். என்ன மூலோபாயமோ!

மாறிவரும் அமெரிக்கக் கொள்கைகளை எதிர்கொள்ளும்போது இந்தியா, அதன் உள்நாட்டு முன்னுரிமைகளைச் சமரசம் செய்யாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

அமெரிக்க அழுத்தத்திற்கு இந்திய அரசு அடிபணியாமல் தடுக்கவும், ஏகாதிபத்திய எதிர்ப்பு ஒற்றுமை இயக்கத்தை வலுப்படுத்தவும் இந்திய மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

வாரியங்களால் வலுவான இறுதித் தேர்வுகள் மூலம் மாணவர்களின் கல்வித்திறன் ஏற்கெனவே முறையாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆதலால் மாணவர் சேர்க்கைக்கு நுழைவுத் தேர்வை அறிமுகப்படுத்துவது என்பது தேவையற்றதும், சுமையாகவும் அமைந்துவிடும்.

நுழைவுத் தேர்வுகள் கட்டாயமாக்கப்பட்டால், பள்ளிகள் நுழைவுத் தேர்வுகளுக்கான பயிற்சியில் கவனம் செலுத்தக்கூடும், இது பள்ளிக்கல்வியின் செயல்பாட்டிற்கு இடையூறு ஏற்படுத்தும். தமிழ்நாட்டின் உயர்கல்வி சேர்க்கை விகிதம் (GER 47%) ஏற்கனவே நாட்டிலேயே முதன்மையாக உள்ளது எனவே, நுழைவுத் தேர்வுகள் நிச்சயமாக பின்தங்கிய மாணவர்களின் உயர்கல்விக்கான சேர்க்கையைக் குறைத்துவிடும்.

- நாட்டிலுள்ள மாறுபட்ட கல்வி முறைகள் மற்றும் அமைப்புகளைக் கருத்தில்கொண்டு நாடு முழுவதும் ஒரே விதமான நுழைவுத் தேர்வு என்பது நடைமுறைக்கு ஒவ்வாது என்பதுடன், இது மாநில சுயாட்சியை குறைத்து மதிப்பிடும் வகையில் அமைந்துள்ளது.
- மாணவர்கள் தங்கள் மேல்நிலைப்பள்ளி பாடப்பிரிவைப் பொருட்படுத்தாமல் எந்தவொரு பட்டப்படிப்பையும் தொடர அனுமதிக்கும் முறை என்பது போதுமான அடிப்படை பாட அறிவு இல்லாமல் உயர்கல்விக்குச் செல்லும் மாணவர்களுக்குத் தேவையற்ற கல்வி அழுத்தத்தை உருவாக்கும். எனவே, மேற்கூறிய காரணங்களுக்காக, இளங்கலை, முதுகலை சேர்க்கைகள் தனி நுழைவுத் தேர்வைவிட பள்ளி இறுதித் தேர்ச்சி மற்றும் இளங்கலை மதிப்பெண்களின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

### 2. நான்கு ஆண்டு (கலை/அறிவியல்) பட்டம் பெற்றவர்கள் எம்.டெக்/எம்.இ பட்டப்படிப்பில் சேர்க்கை பெறத் தகுதி

நான்கு ஆண்டு கலை, அறிவியல் இளங்கலை பட்டம் பெற்ற மாணவர்களை எம்.டெக் அல்லது எம்.இ., படிப்புகளைத் தொடர அனுமதிப்பது கவலையளிக்கிறது. அடிப்படை பொறியியல் குறித்த அடித்தளம் இல்லாமல், மாணவர்கள் முதுகலை பொறியியல் படிப்புகளில் சிரமப்படலாம், மேலும் இதுபோன்ற புதிய ஏற்பாட்டிற்கான தேவையைக் குறித்து கவனமாக மறு ஆய்வு செய்ய வேண்டும்.

### 3. பல நுழைவு மற்றும் பல வெளியேறும் அமைப்பு

பல நுழைவு மற்றும் பல வெளியேறும் அமைப்பு (Multiple Entrance Multiple Exit - MEME) பல சிக்கல்களை எழுப்புகிறது. குறிப்பாக:

- கற்றல் தொடர்ச்சியில் சீர்குலைவு: தற்போதைய அமைப்பு கற்றலின் ஓட்டத்தை உறுதி செய்கிறது, அதனை பல நுழைவு பல வெளியேறும் அமைப்பு சீர்குலைக்கிறது.
- செயல்படுத்தலில் உள்ள சவால்கள்: பாடத்திட்டத்தில் அவ்வப்போது புதுப்பிப்புகள் ஒரு இடைவெளிக்குப் பிறகு மீண்டும் நுழையும் மாணவர்களுக்கு கடினமாக்கும்.
- இடைநிற்றலை இயல்பாக்குதல்: பல நுழைவு மற்றும் பல வெளியேறும் அமைப்பு முறை இடைநிற்றலை சட்டப்பூர்வமாக்குவதுடன், உயர்கல்வி சேர்க்கையை அதிகரிக்கும் முயற்சிகளை குறைக்கும்.
- கல்வி அமைப்பில் நிலையற்ற தன்மை: பல நுழைவு மற்றும் பல வெளியேறும் அமைப்பு மாதிரி கல்வி திட்டமிடல் மற்றும் வள ஒதுக்கீட்டை சிக்கலாக்குவதன் மூலம் கல்வி நிறுவனங்களை சீர்குலைக்கக்கூடும்.

வரைவு யு.ஜி.சி. (பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களை நியமித்தல் மற்றும் பதவி உயர்வு பெறுவதற்கான குறைந்தபட்ச தகுதிகள் மற்றும் உயர்கல்வியின் தரங்களை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள்) நெறிமுறைகள் 2025ஐப் பொருத்தவரை பின்வருபவை ஏற்புடையதாக இல்லை:

### 1. கல்வியாளர்கள் அல்லாதவர்களை துணைவேந்தர்களாக நியமித்தல் (பிரிவு 10.1)

துணைவேந்தர்களை நியமிப்பதற்கான முன்மொழியப்பட்ட அளவுகோல்கள், தொழில்துறை, பொது நிர்வாகம் அல்லது பொதுக் கொள்கையில் அனுபவம் வாய்ந்த நபர்களை உள்ளடக்கியது மிகுந்த கவலைகளை எழுப்புகிறது. கல்வித்துறைக்கு வெளியே தலைமைப் பதவிகளில் அனுபவம் மிக்கவர்களாக இருப்பினும், துணைவேந்தர் பதவிக்கு ஆழ்ந்த கல்வி நிபுணத்துவம் மற்றும் உயர் கல்வி முறை பற்றிய புரிதல் தேவைப்படுகிறது.

## பாஜகவின் தேசிய கல்விக் கொள்கையை திணிக்கும் முயற்சி

### இரா.முத்தரசன் கண்டனம்



“பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் (யுஜிசி) வரைவு நெறிமுறைகள், மாநில அரசுகளின் உரிமையைப் பறிப்பதுடன் உயர் கல்வியை கடுமையாகப் பாதிக்கக் கூடியது. இதனால் துணைவேந்தர்கள் நியமனம் மட்டுமல்ல, கல்லூரிகளில் ஆசிரியர் நியமனம், கல்விப் பணியாளர்கள் நியமனம், பதவி உயர்வு உட்பட அனைத்தும் பெரும் பாதிப்புக்குள்ளாகும். யுஜிசியின் இந்த வரைவு நெறிமுறைகள் மூலம் மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிக்கும் ஒன்றிய பாஜக அரசு, அரசியல் அமைப்பு சட்டத்தின் கூட்டாட்சி தத்துவம் மீது தாக்குதலைத் தொடுத்துள்ளது. சமூகநீதிக் கோட்பாட்டையும் இளைஞர்களின் எதிர்காலத்தையும் சீரழிக்கிறது. தமது தேசிய கல்விக் கொள்கையை மாநிலங்கள் மீது திணிக்கும் ஒன்றிய பாஜக அரசின் வரைவு நெறிமுறைகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாக கண்டிக்கிறது” கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தற்போது முன்மொழியப்பட்டுள்ள அளவுகோல்கள் பல்கலைக்கழகங்களை திறம்பட வழிநடத்த தேவையான கல்வி மற்றும் நிர்வாக அனுபவம் இல்லாத நபர்களை நியமிக்க வழிவகுக்கும் என்று அஞ்சுகிறோம். கல்வி மற்றும் பல்கலைக்கழக நிர்வாகத்தில் அனுபவம் கொண்ட நபர்களுக்கு முன்னுரிமை அளிக்க அளவுகோல்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

### 2. துணைவேந்தர் தேடல் குழுவில் மாநில அரசை நீக்குதல் (பிரிவு 10.1.வீஸ்)

மாநில பல்கலைக்கழகங்களின் உள்கட்டமைப்பை மாநில அரசுகள் முழுமையாக ஏற்படுத்தியுள்ளன. இப்பல்கலைக்கழகங்கள் மாநில அரசுகளால் முழுமையாக நிதியுதவி அளிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. மாநிலத்தின் உண்மையான விருப்பங்கள், உள்ளூர் மாணவர்களின் கல்வித் தேவைகள், மாநில கொள்கைகள் ஆகியவை உரிய முறையில் பின்பற்றி உறுதி செய்வதற்கு, துணைவேந்தர்களை தேர்வு செய்யும் நடைமுறையில் மாநில அரசின் பங்கேற்பு மிகவும் முக்கியமானது.

### 3. மாறுபட்ட பாடப்பிரிவு ஆசிரியர்கள் (Cross Disciplinary Teachers) (பிரிவு 3.2 மற்றும் 3.3).

இளங்கலை அல்லது முதுகலை தகுதியிலிருந்து வேறுபட்ட ஒரு துறையில் பி.எச்.டி பெற்ற ஒரு விண்ணப்பதாரர் அல்லது அவர்களின் கல்விப் பின்னணியில் இருந்து வேறுபட்ட பாடத்தில் ஸ்லெட்/நெட் தேர்ச்சி பெற்ற ஒருவர் அந்தத் துறையில் கற்பிக்கத் தகுதியுடையவர் என்று வரைவு விதிமுறைகள் முன்மொழிகின்றன. சரியான அடிப்படை பாடப்பிரிவு அறிவு இல்லாமல் பாடங்களை கற்பிக்க தனி நபர்களை அனுமதிப்பது மாணவர்களுக்கு, குறிப்பாக இளங்கலை மற்றும் முதுகலை மட்டங்களில் கற்றல் விளைவுகளுக்கு எதிர்மறையாக அமைந்துவிடும்.

வரைவு விதிமுறைகளில் இதுபோன்ற பல விதிகள் மாநில பல்கலைக்கழகங்களின் கல்வி ஒருமைப்பாடு, தன்னாட்சி மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு கடுமையான சவால்களை ஏற்படுத்தக்கூடும் என்று நம்புகிறோம். எனவே, கல்வி அமைச்சகம் விவாதத்தில் உள்ள வரைவு மசோதாக்களை திரும்பப் பெறவும், இந்தியாவில் உள்ள மாறுபட்ட உயர்கல்வி தேவைகளுடன் சிறப்பாக ஒத்துப்போகும் வகையில் வரைவு விதிகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்” என்றும் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார். எனவே, வரைவு நெறிமுறைகள் திரும்பப்பெறப்பட்டு, மாநிலங்களின், குறிப்பாக தமிழ்நாட்டின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்படுவதை உறுதி செய்வதற்கு ஒன்றிய கல்வி அமைச்சரின் ஆதரவை தாம் எதிர்பார்ப்பதாகவும் கடிதத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

இளமதி


மே.து.ரா

**தமிழ்நாட்டின் ஆளுநராகத் தற்போது அமர்ந்திருக்கும் ஆர்.என். ரவி அனைத்து எல்லைகளையும் மீறிக்கொண்டிருக்கிறார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.**



## உரையை உதறித் தள்ளி வெளியேற உரிமையில்லை!

# அரசமைப்புக்கு ஆளுநர் அடிபணிய வேண்டும்!

திருவள்ளுவருக்குக் காவி வண்ணம் பூசுவது, வள்ளலாரைச் சனாதனச் சிமிழுக்குள் அடைப்பது, தமிழக அரசின் அடிப்படைக் கொள்கையான திராவிடக் கருத்தமைவை மறுப்பது, பெரியார் கொள்கைகளை இழிவு செய்வது, மாநில அரசின் திட்டங்களைக் குறை கூறுவது, விடுதலைக்கு எதிராக இருந்த, தமிழகம் ஏற்காத பா.ச.க. முன்னோடிகளை முன்னிறுத்துவது என மாநில மக்களின் உணர்வுகளை மதிக்காது செயல்படுவதை வழக்கமாக்கிக் கொண்டுவிட்டார்.

அவர் ஆளுநராகப் பொறுப்பேற்று முதன்முறையாக 2023இல் சட்டப்பேரவையில் உரையாற்றியபோது, பெரியார், அண்ணா, கலைஞர், திராவிடம் போன்ற பெயர்களைக் குறிப்பிட மனமின்றி மறுத்தார். அடுத்த ஆண்டு 2024இல் ஆளுநர் உரையின் முதல் பத்தியையும் இறுதிப் பத்தியையும் மட்டும் படித்துவிட்டு நிகழ்வை நிறைவுசெய்யாமலேயே வெளியேறினார். இந்த ஆண்டு உரையை முழுமையாகப் புறக்கணித்து எதிர்க்கட்சி உறுப்பினர் போல வெளிநடப்புச் செய்திருக்கிறார்.

இத்தகைய செயல்பாடுகளை மேற்கொள்ள ஆளுநர் என்ற முறையில் தனக்கு உரிமை இருப்பதாகவே அவர் கருதுவதாகத் தெரிகிறது. ஆளுநரின் போக்குகள் பல்வேறு பகுதியினரால் கண்டிக்கப்பட்டாலும், அவருடைய செயல்பாடுகள் யாவும் அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானவை என்ற புரிதல் அரசியல் தலைவர்கள் பலருக்கும் ஊடகங்களுக்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆளுநர் என்ற முறையில் அவர் கலந்துகொள்ளும் சட்டப்பேரவைக் கூட்டத்தின் தொடக்கத்தில் தேசிய கீதம் இசைக்கப்படவில்லை என்பதுதான் அவருடைய தற்போதைய குறைபாடாகும்.

தமிழகச் சட்டப்பேரவையிலும் அரசு விழாக்களிலும் நிகழ்வுகளிலும் சில முறைமைகள் நடைமுறையில் உள்ளன. தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுவதும், நிறைவில் தேசியக் கீதம் பாடல் இசைப்பதும் மரபாக இருந்து வருகிறது. இது அரசாணையாகவும் அறிவிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஆனால், 2023, 2024ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டங்களின் தொடக்கத்தில் இதே ஆளுநர் உரையாற்ற வந்தபோது, பின்பற்றப்பட்ட நடைமுறைதான் இந்த ஆண்டும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. அப்போது வாய்மூடியிருந்த ஆளுநர், இப்போது குற்றமாக்குகிறார். 1991ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையிலிருக்கும் இதனை முன்னிருந்த எந்த ஆளுநரும் தவறாக எடுத்துக்கொள்ளவில்லை. செயலலிதா அரசோடு முற்றிலும் முரண்பட்டிருந்த சென்னா ரெட்டி தமிழக ஆளுநராக இருந்தபோதும் சட்டப்பேரவையின் மாண்புகளுக்கு மதிப்பளிக்க அவர் தயங்கவில்லை.

மாநிலச் சட்டப்பேரவைகள் அனைத்தும் தங்களுக்கான நிகழ்வுச் செயல்முறைகளையும் விதிகளையும் வகுத்துக்கொள்ள அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 208 வாய்ப்புத் தந்திருக்கிறது. இதனை மாநிலச் சட்டப்பேரவையின் உறுப்பினராக இல்லாவிட்டாலும் (பிரிவு 158), அதன் ஒரு பகுதியாக இருக்கும் ஆளுநர் (பிரிவு 168) அறியாமல் இருக்க இயலாது. சட்டப்பேரவையின் ஒரு பகுதியாக இருக்கும் ஆளுநர், சட்டப்பேரவையின் மரபுகளுக்கும் மாண்புகளுக்கும் முறைமைகளுக்கும் முழுமையாகக் கட்டுப்பட்டவராகவே இருந்தாகவேண்டும். தனிப்பட்ட முறையில் ஆளுநருக்கெனக் கருத்துக்கள் இருந்தாலும், சட்டப்பேரவையின் நடைமுறைகளை மாற்றவும் மறுக்கவும் அவருக்கு உரிமைகள் எந்த வகையிலும் அரசமைப்புச் சட்டத்தில் தரப்படவில்லை.

உண்மையிலேயே சட்டப்பேரவையின் தொடக்கக் கூட்டத்தில் ஆளுநர் உரையாற்ற வரும்போது, தமிழ்த்தாய் வாழ்த்துக்கு முன்னர் தேசியப் பாடல் இசைக்கவேண்டும் என்ற நிலைப்பாடு அவருக்கு இருந்திருக்குமென்றால், கடந்த ஆண்டுகளிலேயே அவர் சுட்டிக்காட்டியிருக்கவேண்டும். அவ்வாறு செய்யாமல், அப்போதெல்லாம் அந்த முறைமையினை அவர் ஏற்றுக்கொண்டுதான் செயல்பட்டார். தனது புறக்கணிக்கும் தற்போதைய முடிவுக்கு ஆளுநர் ரவிக்கு ஏதேனுமொரு சாக்கு வேண்டப்பட்டது. அதனாலேயே, புதிய கண்டுபிடிப்பாகத் தமிழ்த்தாய் வாழ்த்துக்கு முன்னர் தேசியப் பாடல் இசைக்கவில்லை என்பதை முன்னிறுத்தித் தப்பிக்க முனைகிறார்.

முன்னர் தோன்றாமல் இப்போதுதான் தோற்றியது என்று எடுத்துக்கொண்டாலும், இந்தச் சிக்கலைத் தீர்க்க ஆளுநருக்கு வேறு வழிகள் இல்லாமல் இல்லை.

பேரவைத் தலைவருக்கு இது குறித்து ஆளுநர் மடல் எழுதியதாகவும், அதற்கு தக்கதொரு மறுமடலினைப் பேரவைத் தலைவர் தந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. பேரவையின் நிகழ்வுச் செயல்முறைகளையும் விதிகளையும் பேரவைத் தலைவர் உருவாக்குவதில்லை. இவற்றைப் பேரவைதான் வகுத்துத் தந்துள்ளது. இதனைத் தன்விருப்பில் பேரவைத் தலைவர்கூட மாற்றிவிட முடியாது.

ஆயினும், இது குறித்துத் தனது நிலைபாடுகளை எடுத்துக்கூற ஆளுநருக்கு வேறு வாய்ப்புகளை அரசமைப்புச் சட்டம் தந்திருக்கிறது.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 175(2)இன் அடிப்படையில், சட்டப்பேரவைக்குச் செய்தி அல்லது தகவல் தர ஆளுநருக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இத்தகைய செய்தி அல்லது தகவலினைத் தந்தால், அதனைச் சட்டப்பேரவை ஆய்வு செய்தாகவேண்டும். ஆளுநரின் நிலைப்பாட்டினையோ, கருத்தையோ ஆய்வு செய்த பின்னர், சட்டப்பேரவை ஏற்கலாம் அல்லது மறுக்கலாம். இந்த அரசமைப்புச் சட்ட உரிமையை ஆளுநர் இப்போது பயன்படுத்த முனையவில்லை.

பேரவைத் தலைவருக்கு மடல் எழுதுதற்கு மாறாக, சட்டப் பேரவையில் பெரும்பான்மை பெற்றுள்ள தமிழ்நாட்டு முதலமைச்சரின் பார்வைக்கு இதனை ஆளுநர் எடுத்துச் சென்றிருக்கலாம்.

இவற்றில் எதையும் செய்யாமல், அரசமைப்புத் தந்துள்ள கடமைகளை முற்றிலும் உதறித்தள்ளவும் புறக்கணிக்கவும் ஆளுநருக்கு உரிமை இல்லவேயில்லை.

வெளிநடப்பு என்பதோடு நிலைமை நின்றுவிடவில்லை. நிகழ்வின் தொடக்கத்தில் தேசியக் கீதம் இசைக்கவேண்டும் என்று எதிர்பார்த்த ஆளுநர், நிகழ்வின் நிறைவிலும் அது ஒலிக்கப்படவேண்டும் என்பதைப் பொருட்படுத்தாமல், அதனை மீறி, அதற்கு முன்னரே வெளியேறியிருக்கிறார். இதுவும் தேசியக் கீதத்தை மதிக்காத போக்குதான் என்பதை ஆளுநர் மறந்துவிட்டார். தமிழர்களை மட்டும் அவர் மதிக்காமல் இருக்கவில்லை; ஒன்றியத்தின் வழிகாட்டுதல்களையும் அவர் தூக்கி எறிந்துவிட்டார்.

பலரும் கருதுவது போன்று, ஆளுநருக்கு எந்த வகையான தனித் தேர்வும் அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்படவில்லை. சட்டப் பேரவை நிறைவேற்றிய சட்டங்களுக்கான ஒப்புதல் தருதல், சில கோப்புகளில் ஒப்பமிடல் என்பன போன்ற நடைமுறைகளில் மட்டுமல்லாது, ஆளுநரின் அனைத்து அசைவுகளும் மாநில அமைச்சரவையில் அறிவுறுத்தலின் அடிப்படையில் மட்டுமே இருந்தாகவேண்டும்.

அதாவது, அமைச்சரவையின் உதவி மற்றும் அறிவுறுத்தல் அடிப்படையில் மட்டுமே ஆளுநரின் அனைத்துச் செயல்பாடுகளும் இருந்தாகவேண்டும் என்பதுதான் அரசமைப்பின் பிரிவு 163 தரும் தெளிவான – வெளிப்படையான கட்டளையாகும் (There shall be a Council of Ministers with the Chief Minister at the head to aid and advise the Governor in the exercise of his function….). இதில் குழப்பமோ அய்யமோ ஏற்பட வாய்ப்புகள் ஏதுமில்லை.

அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 163 பயன்படுத்தியுள்ள செயல்பாடு (function) என்ற ஒரு சொல் பலருடைய பார்வையில் படாமல் இருப்பது புதிராக இருக்கிறது. நீதிமன்றங்களும் இந்தச் சொல்லின் முழுமையான பொருளையும் உணர்வையும் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. செயல்பாடு என்ற சொல் தெளிவான பொருளைத் தருவதாகவே இடம்பெற்றுள்ளது.

அமைச்சரவையின் அறிவுறுத்தல் இல்லையென்றால், ஆளுநர் உரையினைப் புறக்கணிக்க வழியின்றி, உரை படிக்கப்பட்டாகவேண்டும். அமைச்சரவையின் அறிவுரை இல்லாமல், வெளிநடப்புச் செய்ய வாய்ப்பேயில்லை..

எனவே, ஆளுநர் உரை அவரால் படிக்கப்படாததும், பேரவையிலிருந்து வெளியேறியதும் அரசமைப்பு ஏற்காத, அமைச்சரவை ஏற்காத ஆளுநரின் தன்விருப்பப் போக்காகும். உறுதிமொழி எடுத்துத் தமிழ்நாட்டின் தலைமைப் பொறுப்பேற்றிருக்கும் ஆளுநர் ரவி, தனது அரசமைப்புக் கடமைகளை மீறியிருக்கிறார் என்பதில் மாற்றில்லை.

இவையன்றி, காவி வள்ளுவரைக் காட்சிப்படுத்துவதையும், வள்ளலாரைச் சனாதனச் சான்று காட்டுவதையும், தமிழக மக்களின் உணர்வுகளை வேறுபடுத்திக் கட்டமைப்பதையும் தொடர்ந்து செய்து வரும் ஆளுநரை, அமைச்சரவையின் அறிவுறுத்தலின் அடிப்படையில் தடை செய்ய முடியும். ஆளுநர் என்ற முறையிலான ஒவ்வொரு அசைவும், மாநில அமைச்சரவையின் உதவிக்கும் அறிவுறுத்தலுக்கும் கட்டுப்பட்டது என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

அரசமைப்புச் சட்டத்தை மீளாய்வு செய்து, ஆளுநர்களை அடிபணியச் செய்யவேண்டுவது இன்றைய வேண்டலாக இருக்கிறது. இதற்கு, நீதிமன்றங்களும் ஒத்துழைக்கவேண்டும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

தொடர்புக்கு 9444075561

## மாநில அமைச்சரவையின் அறிவுறுத்தலுக்கு அடிபணிய வேண்டும்

இந்திய ஒன்றியத்தில் உள்ள மாநிலத்தின் ஆளுநர் அனைத்துச் செயல்பாடுகளிலும் மாநில அமைச்சரவையின் அறிவுறுத்தலுக்கு அடிபணியவேண்டும் என்றுதான் அரசமைப்புச் சட்டம் வரையறுத்து வழிகாட்டியுள்ளது.

ஆளுநரைப் பொறுப்பில் அமர்த்துவதும் அவர் நீடித்திருப்பதும் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இதனால், ஒன்றியத்தின் ஆளும் கட்சி சார்ந்தோர் மட்டுமே மாநில ஆளுநர்களாக அமர முடியும் என்ற நிலை விடுதலைக்குப் பின்னர் நிலைப்பட்டுவிட்டது. மாற்றுக் கட்சியினர் மாநிலத்தில் ஆளும் பொறுப்பில் இருக்கும்போது, அவர்களுக்குக் கட்டுப்படாமல், ஒன்றிய அரசின் ஆளும் கட்சியினரின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்து, எதிர்ப்பு அரசியல் செய்வதாகவே ஆளுநர் மாளிகையின் செயல்பாடுகள் குறுகிவிட்டன.

சட்டப்பேரவையில் ஆளுநர் உரையினைப் புறக்கணிப்பதில் தொடங்கி, உரையின் உள்ளடக்கத்தினை மறைப்பது, பேரவை நிறைவேற்றிய சட்டங்களுக்கு ஒப்புதல் தர மறுப்பது அல்லது கிடப்பில் போடுவது, ஆளுநர் ஒப்பளிக்கவேண்டிய கோப்புகளை நிறுத்தி வைப்பது, மாநில அரசை வெளிப்படையாகக் கண்டிப்பது, மாநில மக்களின் உணர்வுகளுக்குப் புறம்பாகச் செயல்படுவது, மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்களைத் தங்கள் பிடியில் உள்ள நிறுவனங்களாக மாற்றுவது, துணைவேந்தர்களையும் பிற பல்கலைக்கழக அலுவலர்களையும் தம் விருப்பப்படி அமர்த்தி ஆட்டுவிப்பது போன்றவை உள்ளிட்ட அனைத்து வகையான ஆளுநரின் செயல்பாடுகளும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அமைச்சரவையினைச் சிறிதும் பொருட்படுத்தாதனவாகவே மாறிவருகின்றன.

# மக்களைக் காக்கும் கலையில் தோற்றுப்போகும் அமெரிக்கப் பி(ரமா)ண்டம்



களந்தை பீர்முகமது


**அமெரிக்காவின் லாஸ் ஏஞ்செல்ஸ் நகரம் காட்டுத் தீயினால் சாம்பல் மேடாகி வருகிறது. அந்தக் காட்சித் தொகுப்புகளைப் பார்க்கும்போது, அவையெல்லாம் ஏதோவொரு ஹாலிவுட் சினிமாவில் வரும் அபத்தமான காட்சியென்றே நினைத்திருந்தேன். பின்னர் BBC News தொலைக்காட்சியில் அதே காட்சிகளைத் திரும்பப் பார்த்துத்தான் என் மனத்தைத் திருத்திக்கொண்டேன்.**

போன தேர்தலில் ட்ரம்ப்பை நிராகரித்து பைடனின் வெற்றியைக் காண உலகம் ஆர்வப்பட்டதில் முக்கியமான ஒரு விசயம் உண்டு. அவர் துணை அதிபராக இருந்த காலத்தில் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வழிமுறைகளை அதற்கான சர்வதேச மாநாட்டில் பேசியிருந்தார்; அதுவும் போதாதென்று அவர் எழுதிய சுற்றுச்சூழல் குறித்த நூல் மிகவும் கவனம்பெற்றது. ஆகவே அவர் அதிபரானால் உலக சுற்றுச்சூழல் நடவடிக்கைகளுக்கு ஆதரவாய் இருப்பாரென்று அமெரிக்கர்களும் நம்பி வாக்களித்தார்கள். என்ன செய்வது? அமெரிக்க அரச பீடம் தன் நாற்காலியில் அமரும் எல்லோரையும் சர்வதேசப் பயங்கரவாதியாக மாற்றிவிடும் தன்மைகொண்டதல்லவா? அதன் விதிக்கேற்ப பைடனாலும் நற்பயன்கள் எவையும் நிகழவில்லை.

மாறாக, உக்ரைன்மீது படையெடுக்கும் நிர்ப்பந்தத்தை ரஷ்யாவுக்கு அளித்தார்; அப்பாவி பலஸ்தீன மக்களை இனப்படுகொலை செய்ய இஸ்ரேலை நிதியுதவியாலும் ஆயுத உதவியாலும் தூண்டிவிட்டார் ஐ.நா. அவையில் தான்தோன்றித் தனமான ஆதரவும் கொடுத்து மானுடப் பேரழிவுக்குத் துணையிருந்தார். அதன்பொருட்டாக உலக சுற்றுச்சூழலுக்குப் பெரும் கேட்டை உருவாக்கியவராக பைடன் தன் கடைசி நாட்களில் நிற்கிறார். பலஸ்தீனத்தை மீண்டும் கட்டியெழுப்புவதாயிருந்தால் இரண்டு தலைமுறைக் காலம் நமக்குத் தேவைப்படுகிறது. பைடனால்தான் இரண்டு போர்க்களங்களும் நிகழ்வதாக ட்ரம்ப்பே குற்றம்சாட்டும் அளவுக்குக் கேலிப்பொருளானார் பைடன்.

லாஸ்ஏஞ்செல்ஸ் சேதாரமாகப் பதினைந்தாயிரம் கோடி டாலரை நிர்ணயம்செய்துள்ளார்கள் நிபுணர்கள். பலஸ்தீன இனப்படுகொலைக்கு பைடன் வழங்கியிருக்கும் தொகை இதைவிட அதிகம். அதனால் அதிபர் பைடன் இப்போது செலவழிக்க நிதியில்லாமல் தத்தளிக்கிறார். இதனால் பைடனைச் சுண்டக்காய்ச்சுகிறார்கள் அமெரிக்கர்கள், “பலஸ்தீன இனப் படுகொலைக்குத் துணையாயிருந்து எம்மை அழியவிட்டீரே,” என்று!

நிலைமை இப்படியிருக்கையில் பலஸ்தீனப் போராளிகள் பிணைக்கைதிகளை விடுதலை செய்யவில்லையென்றால் மொத்த அரபுலகையும் நரகமாக்கிவிடுவேன் என்று கொக்கரிக்கிறார் ட்ரம்ப். அவருக்கு லாஸ் ஏஞ்சல்ஸ் நரகமாகிவரும் அவலமே தெரியவில்லை. இதனாலும் ட்ரம்ப் மீதும் பாய்கிறார்கள் குடிமக்கள். “ஐயா உம்முடைய கொக்கரிப்பெல்லாம் போதும்; லாஸ் ஏஞ்செல்ஸ் வாரும்,” என்று சாட்டையை விளாசியதும் அந்த அடி தாளாத ட்ரம்ப் லாஸ்ஏஞ்சல்ஸின் நரக மேட்டை நோக்கிப் பயந்தோடியிருக்கிறார். மத்திய கிழக்கு நரகமானால் அது எப்படியிருக்கும் என்ற காட்சியைத்தன்



சொந்தமண்ணிலே கண்டு களிமண் பொம்மையாக நிற்கிறார்.

ஆக அமெரிக்காவின் பி(ரமா)ண்டம் இப்படி நடுத்தெருப் பிணமாகக் கிடக்கிறது. ஆனால் நமக்கு அமெரிக்காவின் ஹாலிவுட் படங்கள் போதித்ததென்ன? சூரியனில் ஓட்டை விழுந்தாலும் இரண்டு அமெரிக்க ஜாம்பவான்கள் அங்கே பறந்துபோய் சூரியனின் ஓட்டையை செல்லோ டேப்பினால் ஒட்டி, ஓட்டையை அடைத்துவிட்டதாகச் சொல்வார்கள்; அப்படிச் சொல்லியதும் போதாதென்று, இந்தப்பூவுலகையே அமெரிக்கா காப்பாற்றி விட்டதாக ஜம்பம் வேறு அடிப்பார்கள்.

அமெரிக்க அதிபராக இரண்டாம் புஷ் இருந்தபோது, அமெரிக்காவைத் தாக்கிய பெரும்புயலால் நாட்டின் ஒரு பகுதி சின்னாபின்னமாகிக் கிடந்தது. அந்தப் பகுதிக்குச் சென்று தம் மக்களை ஆற்றுப்படுத்த வக்கில்லாமல் புஷ் நிர்வாகம் கைபிசைந்து நின்றது. அமெரிக்க மருத்துவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சிகிச்சையளிக்கவும் தயாரா யில்லை. அன்று அமெரிக்க மக்களைக் காப்பாற்றுவதற்காக அந்த நாட்டுக்கு நானூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவர்களை அனுப்பி அவர்களைக் காப்பாற்றியவர் யாரென்றால், அமெரிக்காவின் முழு எதிரியான கியூபாவின் ஃபிடல் காஸ்ட்ரோதான். அப்படியாக ஒரு பெரும் அவமானத்தை அமெரிக்காவுக்குப் பரிசளித்தார் காஸ்ட்ரோ.

ஏன் அமெரிக்கா தன் மக்களைக் காப்பாற்ற முடியாமல் பரிதவிக்கிறது? பெரிய நிர்வாகக் கட்டுக்கோப்பும் சாலை வசதிகளோடு போக்குவரத்துச் சாதனங்களும் நிரம்பியுள்ள நாடு பரிதவிப்பதன் காரணமென்ன? யோசித்தால் மூன்று காரணங்களைச் சொல்ல முடியும்.

1) அமெரிக்காவுக்கு எல்லாமே வணிகம்தான் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை. அதாவது அமெரிக்கக் கல்விமுறை சேவை மனப்பான்மையில் உருவாக்கப்பட்டதன்று.

2) அமெரிக்காவுக்குப் பாரம்பரிய விழுமியங்கள் கிடையாது. நம்நாட்டைப் போலவோ ஏனைய நாடுகளைப் போலவோ அவற்றின் குடிமக்கள் இணைந்தும் பிணைந்தும் வாழ்ந்திட வகையற்றுப் போனவர்கள். அதன் வரலாறு நானூறு ஆண்டுகளுக்குள் அடங்கிநிற்பது. அமெரிக்கக் கண்டத்தின் பூர்வகுடிகளான செவ்விந்தியர்களை முழுமையாக அழித்தொழித்துவிட்டுக் குடியேறிய ஐரோப்பிய வம்சாவளியினரே இன்றைய அமெரிக்கர்கள். எனவே பண்பாட்டு வேர் கிடையாது. அதன் ஆதித் தோற்றத்திலேயே வன்முறையும் பேராசையும் ஒருசேர இணைந்துவிட்டன. இப் பண்புதான் அமெரிக்கர்களாக அவர்களை வடிவமைத்தது. மேலும் அமெரிக்க நிலப்பரப்பு இந்தியாவைப்போல நான்கு மடங்கு விரிவுகொண்டது. அதனால் விரிந்துபரவிய ஐரோப்பியர்கள் ஒன்றிணைந்து வாழும் வாய்ப்பைப் பெறாமல் போய்விட்டார்கள்.

3) தாம் வளர்ச்சியடையும் நோக்கில் பிற நாடுகளின் வளங்களைக் கொள்ளையடிக்க பலப்பல நாடுகளில் புகுந்து போர் நடத்தியவர்கள் அவர்கள். அதனால் ஏற்பட்ட வேகமானது அந்நாடுகளையும் அந்நாட்டு மக்களையும் முழுமையாகக் கொன்றொழிக்கவும் தயங்காத மனப்பான்மையை அவர்களிடம் உருவாக்கியிருக்கிறது.

இத்துடன் அவ்வளவு பெரிய தீசூழ் நகரில் 24பேர்தான் பலியானார்கள் என்ற செய்தியை அந்நாடு வெளியிட்டுள்ளது. இந்தப் பலி எண்ணிக்கை நம்பும்படியாகவா இருக்கிறது?

அமெரிக்காவின் இந்தச் சீரழிவுகளையும் பலிகளின் எண்ணிக்கையையும் அங்குள்ள ஊடகவுலகம் அவ்வளவு துல்லியமாகச் சொல்ல முயற்சி செய்வதில்லை. உலக ஆதிபத்திய சக்தியாக அமெரிக்காவை நிறுவியவை இந்த ஊடகவுலகம்தான். பின் தாம் செய்த வேலையை அவை தாமே சீர்குலைக்க முயற்சி செய்யாதல்லவா? அமெரிக்கப் பி(ரமா)ண்டத்தைத் தாமே சிதையவிட்டால், இன்னொரு பெரிய நஷ்டமும் உண்டாகும்.

அது முதலாளித்துவப் பொருளாதாரம் பற்றி உலகுக்குப் போதித்துவைத்த பாடங்கள். அவை பொய்யானவை என்ற கருத்தும் பரவிட, அதனால் தம் சுயநலமான வாழ்க்கையுடன் வந்துசேர்ந்த அனைத்தும் தகர்ந்துபோய்விடும் அபாயம் இருக்கிறது.

இப்படியாக நாம் ஏமாந்தோம்; உலகமும் ஏமாந்தது. ஆனால் லாஸஏஞ்செல்ஸ் மக்கள் தம் படோடாபங்கள் கருகிப்போக பலஸ்தீன மக்களைப் போல கஞ்சித் தொட்டிக்குக் காத்துக்கிடக்கிறார்கள். இந்தக் காட்சி அதன் வரலாற்றுச் சித்திரமாக மாறப்போவதை எந்தவொரு சக்தியாலும் தகர்க்க முடியாது.

வரலாற்றில் அமெரிக்காவும் மண்டியிட்டுக் கிடக்கும் ஒரு சிற்றெறும்புதான்.

## இளைஞர் பெருமன்றம் சார்பில் பொங்கல் விளையாட்டு விழா



**கீழையூர்:** அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில், நாகை மாவட்டம் கீழையூர் ஒன்றியம் வாழக்கரையில் 28 ஆம் ஆண்டு பொங்கல் விளையாட்டு விழாவை முன்னிட்டு, நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் பரிசுப் பொருட்களை வழங்கினார்.

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில், நாகை மாவட்டம் கீழையூர் ஒன்றியம் வாழக்கரை கடைத்தெரு பகுதியில் பொங்கலை முன்னிட்டு நடத்தப்பட்ட 28 ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிக்கான பரிசளிப்பு விழா, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியக் குழு உறுப்பினர் ஜி.சங்கர் தலைமையில் நடைபெற்றது. இளைஞர் பெருமன்ற ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.தினேஷ் வரவேற்றார். கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் டி.செல்வம், மாவட்ட ஊராட்சிக் குழு துணைத் தலைவர் கௌசல்யா இளம்பரிதி, விவசாயச் சங்க மாவட்டச் செயலாளரும், மாவட்ட கவுன்சிலருமான வீ.சரபோஜி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் பங்கேற்றுப் பரிசுப் பொருட்கள் வழங்கி வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில் சிபிஐ ஒன்றிய துணைச் செயலாளர் வீ.எஸ்.மாசேத்துங், இளைஞர் பெருமன்ற மாவட்ட துணைத் தலைவர் எஸ்.ரமேஷ், ஆசிரியர் ஏ.ஆர்.கணபதிசுந்தரம் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் எம்.ராஜேஸ் நன்றி கூறினார்.

**உறையூர்:** அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மேற்குப் பகுதி குழு சார்பில், சவேரியார் கோவில் தெருவில் சமத்துவப் பொங்கல் விழா. மேற்குப் பகுதிச் செயலாளர் கி.தர்மராஜன் தலைமையில் கொண்டாடப்பட்டது. 23வது வார்டு மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ் அனைவருக்கும் பொங்கல் வழங்கினார். கட்சியின் மாநகர் மாவட்டச் செயலாளர் எஸ்.சிவா, மாணவர் பெருமன்றம் மாநிலத் தலைவர் க.இப்ராஹிம், கட்சியின் பகுதிச் செயலாளர் இரா.சுரேஷ்முத்துசாமி, மாதர் சம்மேளனம் மேற்குப் பகுதி தலைவர் க.ஆயிஷா, செயலாளர் சுமதி, இளைஞர் பெருமன்றம் மேற்குப் பகுதி தலைவர் பாட்ஷா, அ.ஆண்ட்ருஸ், அ.ஜோயல், பி.அப்துல்லா மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கலை இலக்கியப் பூங்கா

“ஓட்டன் இல்லைன்னா நாசுவனா மம்மட்டி எடுத்துக் குழி வெட்டுவான். அவனுக்கு மம்மட்டி எடுத்துப் பழக்கம் இருக்குதா, குழிவெட்டிப் பழக்கமிருக்குதா? மம்மட்டி எடுத்து வெட்ற குடியானவன்தான் குழிவெட்டணும்” என்று காளியப்ப கவுண்டன் சொன்னான்.



ஆ.சிவசுப்பிரமணியன்

# வகைமாதிரிப் பாத்திரமும் மரபு மீறிய பாத்திரமும்

செத்து மடிவதிலும் சேர்ந்து பிறப்பதிலும்
இவ்வுலக மக்களிலே என்ன பேதங்கண்டாய்?
– பாரதிதாசன்

சிறுகதை, நாவல், நாடகம் ஆகிய படைப்பிலக்கியங்களில் இடம்பெறும் கதை மாந்தர்களில் (பாத்திரங்களில்) சில கதைமாந்தர்கள் அவர்களின், பொருளியல் நிலை, கல்வி, பார்க்கும் வேலை, சாதி, சமயம், வர்க்கம் என்பனவற்றைச் சார்ந்து அதற்கேற்ற குண இயல்புகளை வெளிப்படுத்தி நிற்கும். இவற்றை வகை மாதிரிப் பாத்திரம் (Typical Character) என்பர். இதற்கு நேர்மாறாகச் சில பாத்திரங்கள் தமக்கான மரபுகளை மீறிச் செயல்படும். அத்துடன் மேட்டிமையோர் உருவாக்கி நடைமுறைப்படுத்தும் விதிமுறைகளை, குறிப்பாக அடித்தள மக்களை ஒடுக்கும் வகையிலான விதிமுறைகளுக்குக்கு எதிராகக் குரல் எழுப்பவதுடன் போராடவும் செய்யும். இவ்வகைப் பாத்திரங்களை மரபு மீறிய பாத்திரம் என்பர். இது தொடர்பாக மீரியம் வெப்ஸ்டர் அகராதி கூறும் வரையறை வருமாறு:

ஒரு சமூகக்குழு அல்லது ஒரு வர்க்கத்திற்கே இருப்பதாகக் கூறப்படும் பண்புகளைக் கொண்ட ஒரு கதைமாந்தரே வகைமாதிரிப் பாத்திரமாகும். இத்தகைய பண்புகளை அல்லது செயல்பாடுகளை மீறும் கதைமாந்தரே மரபு மீறும் பாத்திரமாகும்.

இங்கு அறிமுகமாகும் இரு சிறுகதைகளிலும் இடம் பெறும் மூன்று கதை மாந்தர்கள் தமிழ்நாட்டுச் சூழலில் இடைநிலைச் சாதியினர் என்ற பிரிவுக்குள் அடங்குவர். இவர்களின் சாதியப் படிநிலைப்படி சில சாதியினரின் மங்கல அமங்கலச் சடங்குகளில் வெறும் பார்வையாளர்களாகப் பங்கேற்பதே அரிதான செயல். ஆனால் இக்கதைகளில் இடம்பெறும் கதைமாந்தரகள் மூவர் பார்வையாளர்களாகத் தம்மைக் குறுக்கிக் கொள்ளாது பங்கேற்பாளர் நிலையையும் கடந்து மனிதநேய உணர்வுடன் செயல்பட்டுள்ளார்கள். இவ்வகையில் இக்கதைமாந்தர்கள் மரபு மீறிய கதை மாந்தர்களாக விளங்குகின்றனர்.

## முதல் கதை

இக்கதையின் தலைப்பு “புதைகுழி” என்பதாகும். இக்கதை சனவரி 1970 தாமரை இதழில் வெளியாகியுள்ளது. பின்னர் இதன் ஆசிரியரது சிறுகதைத் தொகுப்பிலும் இடம் பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் முனைவர் மே.து.இராசுகுமார் நீண்டகால இடைவெளிக்குப் பின் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் மீண்டும் செயல்படத் தொடங்கியபோது அதன் மாநிலச் செயலாளராகவும் அதன் வெளியீடான “மாணவர் முழக்கம்” இதழின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். ‘மக்கள் வெளியீடு’ என்ற பதிப்பகத்தை நடத்தி அதன்வழி தரமான ஆய்வு நூல்களை வெளியிட்டவர்.

பாரதியார் பல்கலைக்கழகத்தில் துணைப் பதிவாளராகவும் செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தில் ‘ஆய்வறிஞர்’ ஆகவும் பணியாற்றியுள்ளார். ‘ஜனசக்தி’ வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர். சங்க இலக்கியம், தமிழ்க் கல்வெட்டுக்கள் இரண்டிலும் புலமையும் மார்க்சியக் கண்ணோட்டத்தில் அவற்றை ஆய்வு செய்யும் திறனும் கொண்டவர் என்பதைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருபவர். முனைவர் பட்ட ஆய்வு மாணவராக இருந்தபோது ஈரோடு நகருக்கு அருகில்





உள்ள தம் பூர்வீக ஊர்ப்பகுதியை மையமாகக் கொண்டு இக்கதையை எழுதியுள்ளார். இனி கதைக்கு வருவோம்:

கவுண்டர் சமூகம் மிகுதியாக வாழும் ஊர் காட்டுப்பாளையம் கிராமமாகும். இவர்கள் நில உரிமையாளர்கள். அவர்களுக்குக் குடிஊழியம் செய்து வாழ்ந்துவருபவர் அறுபது வயதான குப்பன். முடிதிருத்தும் தொழில்தவிர வேறு சில பணிகளும் அவருக்குண்டு. இத்துடன் “யாராவது எங்காவது போகவேண்டுமென்றால் வண்டி ஓட்டிச் செல்வது, சொன்ன இடத்துக்குப் போய்வருவது, விழாக்களின்போது அழைப்புச் சொல்வது, திருமண வேலைகளில் பங்கெடுத்து முன்நின்று இயங்குவது, எடுபிடி வேலைகள் செய்வது ஆகிய பல வேலைகளும் நாவிதனுக்கு உண்டு”. குடிஊழியக் காரர்களை ‘கட்டுக்கன்னி’ என்ற பொதுப் பெயரில் அழைப்பதும் வழக்கமாக இருந்தது. இது போன்ற ஊழியம் செய்து வாழும் முறையை ‘ஜஜ்மானிய முறை’ என்று இந்தியச் சமூகவியலர் குறிப்பர்.

காட்டுப்பாளையம் கிராமத்தில் செல்வாக்குள்ளவராக வாழும் பொங்கியண்ணக் கவுண்டருடன் மொடக்குறிச்சிக்கு வண்டியோட்டிச் சென்று திரும்பிய பின்னர் காய்ச்சலில் படுத்த குப்பன் அடுத்த இரண்டு நாட்களில் இறந்து போனார். மரபுப்படி புதைகுழி வெட்டி அவரைப் புதைக்க வேண்டும். நாவிதருக்குப் புதைகுழி வெட்டும் கடமை ஒட்டர் என்ற, சாதியினருக்குரியது. அன்று ஒட்டர்கள் விருந்துணவு சாப்பிட்டுவிட்டு வெளியூர் சென்றுவிட்டமையால் அப்பணி தடைபட்டுவிட்டது. இதனால் குப்பனின் பிண அடக்கம் நடைபெறாத நிலை உருவாகிவிட்டது. இதனால் அவருடைய பிண அடக்கம் அவரது குடும்பப்பிரச்சினை என்ற நிலையைக் கடந்து ஊரவரின் பிரச்சினையாக உருவெடுத்துக்கொண்டிருந்தது. ‘நல்ல மனுஷன்,’ ‘அவனாட்டம் உழைக்க இனிமேல் யாரும் கிடையாதுங்க‘. ‘மரியாதைன்னாலும் குப்பன்தான்’ என்று இறந்த குப்பனுக்கு நற்சான்றிதழ் வழங்கியவர்கள் மௌனசாமியாராகிப் போனார்கள்.

‘கட்டுக்கன்னி செத்துப் போய்ட்டா எவன் வந்து குழிவெட்டுவான்னு இந்த ஒட்டனுக நெனச்சிக்கிட்டானுக’ என்று பொங்கியண்ணக் கவுண்டர் குமுறினார். ‘கட்டுக்கன்னி செத்தா குடியானவன் குழிவெட்டுவான்னு ஒட்டனுக நெனச்சிப் போயிட்டானுகஞ் எல்லாம் இப்பத் திமிர் ஏறித் திரியரானுக. நாலு வச்சுக் கேக்கறதுக்கு ஆள் இல்லைன்னா இப்படித்தான்’ என்ற வீர உரைகளும் ஒலித்தன. மொத்தத்தில் தீர்வு எதுவும் காணப்படவில்லை. இச்சூழலில் காளியப்ப கவுண்டன், ஆறுமுகக் கவுண்டன் என்ற இருவரும் புதைகுழி வெட்டிக் கொடுத்துவிட்டுத் தோளில் மண்வெட்டியைச் சுமந்தவாறு அமைதியாகத் திரும்பி வந்துகொண்டிருந்தார்கள். வரும் வழியில் ஆலமரத்தடியில் கூடியிருந்த கூட்டத்தினர். ‘நாசுவனுக்குக் குடியானவனா குழிவெட்டப் போனீங்க’ என்ற கேள்வியைத் தம் பார்வையாலேயே எழுப்ப, ஒருவன் சற்றுத் துணிச்சலாக இருவரையும் பார்த்து அதை வாய்விட்டுக் கேட்டுவிட்டான். இதற்கான பதில் இருவரிடமும் இருந்து இப்படி வந்ததாக ஆசிரியர் கூறிக் கதையை இவ்வாறு முடித்துள்ளார்:

“ஒட்டன் இல்லைன்னா நாசுவனா மம்மட்டி எடுத்துக் குழி வெட்டுவான். அவனுக்கு மம்மட்டி எடுத்துப் பழக்கம் இருக்குதா, குழிவெட்டிப் பழக்கமிருக்குதா? மம்மட்டி எடுத்து வெட்ற குடியானவன்தான் குழிவெட்டணும்” என்று காளியப்ப கவுண்டன் சொன்னான்.

“யாரும் குழி வெட்டலைன்னா நாசுவன் பொணத்தைக் கொண்டு போயி காட்டுலெ எறிஞ்சிட்டா வருவான்” என்றான் ஆறுமுகக் கவுண்டன்.

“அவனவனுக்குத் தெரிஞ்ச வேலையைச் செய்யறதிலே ஒண்ணுங் குறைஞ்சு போவாது. குடியானவன் குழி வெட்டறதுக்குப் பயப்பட முடியுமா? அதை யாருக்குன்னு செஞ்சா என்ன? குடியானவன் வேறே, கட்டுக்கன்னி வேறேயா?” என்று கூறி ஆறுமுகக் கவுண்டன் புறப்பட்டான்.”

“ஒருத்தனாலே செய்ய முடியாததை தெரிஞ்சவன்தானே செய்யணும்” என்று கூறிவிட்டு, ஆறுமுகக் கவுண்டனைப் பின்தொடர்ந்து நடத்தான் காளியப்பக் கவுண்டன்”

“ஆலமரத்தடியில் மறுபடியும் வாதப் பிரதிவாதங்கள் தொடர்ந்து நடந்தன.”

## இரண்டாவது கதை

மேலே வாசித்த முதற்கதை அரை நூற்றாண்டுக் காலத்துக்கு முன் (1970) எழுதப்பட்ட கதை என்றால் இரண்டாவதாக அறிமுகப்படுத்தும் கதை மிகவும் அண்மைக் காலத்தது. ‘காக்கைச் சிறகினிலே’ இதழ் இந்த ஆண்டு (2025) சனவரியில் வெளியிட்ட தமிழர் திருநாள் சிறப்பிதழில் “வட்டாரத்துக் கோடி” என்ற தலைப்பில் இது வெளியாகியுள்ளது. இக்கதையின் ஆசிரியர் புலியூர் முருகேசன் திண்டுக்கல் மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர் என்றாலும் நான்கு வயதிலேயே கரூர் மாவட்டத்திலுள்ள புலியூருக்கு இடம் பெயர்ந்து புலியூர் என்ற அடைமொழிக்கு உரியவரானார். இந்திய ஆயுள் காப்பீடு நிறுவனத்தின் முகவராகப் பணியாற்றியவாறே தம் படைப்பிலக்கியப் பணியையும் மேற்கொண்டு வருகிறாா். இவற்றின் உள்ளடக்கத்தால் பல்வேறு இன்னல்களை விருதுகளாகப் பெற்றவர். காவல்துறையின் அடக்குமுறைக்கும் ஆளானவர். சிறிது காலம் புதுக்கோட்டைப் பகுதியில் வாழ்ந்தபோதும் இது போன்ற அனுபவம் இவரது குறுநாவலால் நிகழ்ந்தது. இருப்பினும் மனம் தளராது “எனக்கு இலக்கியம் என்பது ரசித்து இன்புறுவதற்கான பண்டம் இல்லை. சமத்துவத்தை நோக்கிப் பேசுவதுதான் எனக்கு இலக்கியம்” என்று நேர்காணல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு அறிமுகமாகும் ‘வட்டாரத்துக் கோடி’ என்ற அவரது சிறுகதை இடைநிலைச் சாதியைச் சேர்ந்த தூங்காச் செட்டியார் என்பவருக்கும் சங்கப் பள்ளர் என்றழைக்கப்பட்ட சங்கரப் பள்ளர் என்ற தேவேந்திரகுல வேளாளர் சமூகத்தைச் சேர்ந்தவருக்கும் இடையில் நிலவிய ஆழமான சாதி கடந்த நட்பை மையமாகக் கொண்டது. இது எந்த அளவுக்கு என்றால் தூங்காச் செட்டியார் தனது ஐந்து மகன்களின் திருமணத்திற்கும் பெண் பார்த்தபோது சங்கப் பள்ளரைக் கலந்துதான் முடிவெடுத்தார். சங்கப் பள்ளர் வீட்டில் ஆண்டுதோறும் நிகழும் பொங்கல் கொண்டாட்டத்தில் தூங்காச் செட்டியார் வந்தபின்தான் பொங்கல் வைப்பார்கள்.

மீதி அடுத்த இதழில்

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

பதிவு செய்துள்ள அனைத்துக் கட்டட, கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் புதுச்சேரி மாநிலத்தில் வழங்குவது போல் தீபாவளி போனஸ் ரூபாய் 5000 வழங்க வேண்டும்.

கட்டுமான மதிப்பீட்டில் வசூலிக்கப்படும் நலவரியை 1% விருந்து 5% ஆக உயர்த்த வேண்டும். தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரியச் செயல்பாடு குறித்து விவாதிப்பதற்காகக் கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் சிறப்புக் கூட்டத்தை உடனடியாகக் கூட்ட வேண்டும்.

சொந்த வீடு இல்லாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஆண்டுக்குப் பத்தாயிரம் வீடுகள் அடுக்குமாடிக் குடியிருப்பு அல்லது வீடு கட்ட ரூபாய் 4 லட்சம் உதவி வழங்கப்படும் திட்ட விண்ணப்பிப்பதில் ஏராளமான இடையூறுகளை அதிகாரிகள் விதிப்பதால் நான்கு ஆண்டுகளில் 300 வீடுகள் கூட வழங்கப்படவில்லை. எனவே, முதலமைச்சர் தலையிட்டு அறிவிக்கப்பட்டபடி வீடுகள் வழங்கப்பட வேண்டும்.

புதிய தொழிலாளர் சட்டங்களை ரத்து செய்ய வலியுறுத்தி, நாடாளுமன்ற முற்றுகைப் போராட்டத்திற்கு ஏஐடியுசி தேசியத் தலைமை அழைப்பு விடுத்துள்ளது. இதனை ஏற்று தமிழ்நாட்டில் இருந்து ஐந்தாயிரம் கட்டுமானத் தொழிலாளர்கள் பங்கேற்பது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்க சிறப்புப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

புள்ளிவிவரங்களை பகிர்வதுதான் ஜனநாயகத்திற்கு அழகு

## தயக்கம் தகாது!

பட்ஜெட் கூட்டத்தொடருக்கான அறிவிப்பு வெளியாகியிருக்கிறது. ஊடகங்களும், துறைசார் வல்லுநர்களும் தாக்கல் செய்யப்பட இருக்கும் நிதிநிலை அறிக்கை குறித்த தங்களது கருத்துகளையும், தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும் பதிவு செய்து வருகிறார்கள்.

அண்மையில் புள்ளியியல் அமைச்சகம் தகவல்களை வெளியிட் டது. இரண்டாவது காலாண்டில் ஜிடிபி வளர்ச்சி 5,496 என்பது எதிர் பார்த்ததைவிடக் குறைவு. அது குறித்து குளிர்கால கூட்டத் தொடர் விவாதித்திருக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கைகலப்பில் இருக்கும் வேகம், விவாதத்தில் இல்லை என்பதைக் கூட்டத் தொடர் உணர்த்தியது.

டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சியை எட்டியிருக்கிறது; விலைவாசி உயர்வு கட்டுக்குள் இல்லை என்பதை அன்றாட உணவுப் பொருள்களின் விலைகள் உணர்த்துகின்றன; வேளாண் துறை ஆரோக்கியமாக இல்லை என்பதை வெளிப்படுத்துகிறது. பஞ்சாப்ஹரியாணா எல்லையில் தொடரும் விவசாயிகள் போராட்டமும், ஜக்ஜீத் சிங் தலேவாலின் உண்ணாவிரதமும்; வேலை நேரம் குறித்த சாச்சை ஒருபுறம் என்றால், வேலைவாய்ப்பின்மை இன்னொருபுறம் விஸ்வரூபம் எடுத்திருக்கிறது. இந்தப் பின்னணியில்தான் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 202526 நிதியாண்டுக்கான பொது பட்ஜெட்டைத் தாக்கல் செய்ய இருக்கிறார்.

வேலைவாய்ப்பின்மை குறித்த அரசின் முனைப்பு எந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது என்பது இருக்கட்டும். அரசுத் துறைகளில் காலியாக இருக்கும் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கிறதா? என்பது குறித்து மத்திய அரசும் சரி, மாநில அரசுகளும் சரி தெளிவான விவரங்களை வெளியிடுவதில்லை. தனிநபருக்குத் தன்மறைப்பு (ப்ரை வசி) உரிமை தேவை என்பது சரி; அதுவே ஜனநாயக அரசுக்கு எப்படிப் பொருந்தும்? பாதுகாப்பு முக்கியத்துவம் உள்ள அரசு ரகசியங் கள்போல, பணியிடங்களை நிரப்புவது தொடர்பான தகவல்களும் மக்களிடமிருந்து மறைக்கப்படுவது என்ன நியாயம்?

* நடந்து முடிந்த குளிர்கால கூட்டத் தொடரில் மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களிலும், துறைகளிலும் காலியாக இருக்கும் பணியிடங்களை நிரப்புவது குறித்த கேள்விகள் அனைத்துக் கட்சி உறுப்பினர்களாலும் எழுப்பப்பட்டன. எல்லாவற்றுக்கும் அரசுத் தரப்பு தந்த பதில் "ஒதுக்கீட்டுப் பிரிவைச் சேர்ந்த பணியிடங்கள் உள்பட பல்வேறு அமைச்சகங்களிலும், துறைகளிலும், அரசுத் துறை நிறுவனங்களிலும் உருவாகும் காலிப் பணியிடங்களை நிரப்புவது தொடர்ந்து நடைபெறும் செயல்பாடு. அது குறித்த புள்ளி விவரங்களைத் தொடர்புடைய அமைச்சகங்களும், துறைகளும், பொதுத் துறை நிறுவனங்களும் வைத்திருக்கின்றன."

இதற்கு முன்பும் இதேபோன்ற கேள்விகள் எழுப்பப்பட்டபோது பதில்கள் தாக்கல் செய்யப்பட்டன. 2023 பிப்ரவரியில் மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட புள்ளிவிவரப்படி நான்கில் ஒரு காலிப் பணியிடம், அதாவது 9,79 லட்சம் காலிப் பணியிடங்கள், மத்திய அரசின் பல்வேறு தளங்களில் நிரப்பப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இப்போது அதுபோன்ற தெளிவான பதில் வரவில்லை. ஏனைய துறைகளிலும் இதே நிலைதான் காணப்படுகிறது.

ஆகஸ்ட் 2023இல் ரயில்வே அமைச்சகத்தில் 2.6 லட்சம் காலிப் பணியிடங்கள் இருப்பதாக ரயில்வே அமைச்சர் தெரிவித்தார். டிசம்பர் 2024 இல் அதே கேள்வி எழுப்பப்பட்டபோது, காலிப் பணியிடங்களை நிரப்புவது தொடர்ந்து நடைபெறும் செயல்பாடு என்று கூறி முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். அப்படியானால் 2.6 லட்சம் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டனவா, இல்லை நிர்வாகச் சீர்திருத்தம் காரணமாகக் குறைக்கப்பட்டனவா என்பது குறித்த தெளிவான பதில் இல்லை.

ரயில்வே துறையைப் போலவே கல்வித்துறையிலும் இதே நிலைதான். இதே பதில்தான். 2023 ஆகஸ்ட் மாதம் மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்வியில் இந்தியாவில் உள்ள அரசுப் பள்ளிகளில் 48.1 லட்சம் ஆசிரியர் பணியிடங்களில் 7.47 லட்சம் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதாகத் தகவல்கள் தரப்பட்டன. டிசம்பர் 2024இல் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களும், நிரப்பப்படாத பணியிடங்களும் தொடக்கப் பள்ளிகளில் எத்தனை என்கிற கேள்வி எழுப்பப்பட்டபோது அதற்கு அரசு அளித்த பதில் "பொதுப்பட்டியலில் (கன்கரண்ட்) கல்வி இருப்பதால் இது குறித்த புள்ளிவிவரங்கள் அந்தந்த மாநில அரசிடம்தான் இருக்கின்றன."

நீதித் துறையின் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதைச் சாமானியர்களுக்கு நீதி தாமதப்படுகிறது என்கிற அளவில் மட்டுமே பார்க்கக் கூடாது. அதன் தொடர் பாதிப்பு தொழில்துறை வளர்ச்சி, அந்நிய முதலீடு, சட்டம் ஒழுங்கு என்று எல்லாவற்றிலும் வியாபிக்கும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

2025 ஜனவரி புள்ளிவிவரப்படி உச்சநீதிமன்றம் (82,881), உயர் நீதிமன்றங்கள் (65 லட்சம்), கீழமை நீதிமன்றங்கள் (4.5 கோடி) என்று மொத்தம் 5.16 கோடி வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. உயர்நீதிமன்றங்களில் 1,122 நீதிபதி பணியிடங்களில் மூன்றில் ஒன்று அதாவது 371 இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. கீழமை நீதிமன்றங்களில் 25,741 பணியிடங்களில் 5,262 பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். கீழமை நீதிமன்றங்களின் பணியிடங்களை நிரப்புவது உயர்நீதிமன்றங்களும், மாநில அரசுகளும் இணைந்து முடிவு செய்ய வேண்டும்.

புதிதாக வேலைவாய்ப்புகளை உருவாக்குவது எந்த அளவுக்கு முக்கியமானதோ, காலிப் பணியிடங்களை நிரப்புவது அதைவிட அவசரமானது. எல்லாவற்றுக்கும் மேலாக, இது குறித்த புள்ளிவிவரங்களைப் பொதுமக்களுடன் பகிர்ந்துகொள்வதுதான் ஜனநாயக ஆட்சி முறைக்கு அழகு!

**தினமணி தலையங்கம்** (18.1.2025)

# பாஜகவின்
# 'அனுமன்' சீ



வ.மணிமாறன்

**பெரியாரையும் திராவிட அரசியலையும் அவதூறுகளின் மூலமே எதிர்கொண்டு விடலாம் என சீமான் நினைக்கிறார். அதற்கான நடைமுறையிலும் இறங்கியுள்ளார். இதனால், மொழி, இனங்களை அழித்துவ், இந்துத்துவ தேசியத்தை கட்டமைக்கத் துடிக்கும் ஆர்எஸ்எஸ், பாஜக, தங்களின் நோக்கம் நிறைவேறுவதாக நினைத்து மகிழ்கின்றன.**

நாம் தமிழர் கட்சியின் ஆலோசனைக் கூட்டம் கடலூரில் நடைபெற்றது. பின்னர், அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது "உனக்கு உடல் இச்சை வந்தால், பெற்ற தாயோ மகளோ அக்காவோ தங்கச்சியோ அவரோடு உறவு வைத்துக் கொண்டு சந்தோஷமாக இரு என்று பெரியார் சொன்னது பெண்ணிய உரிமையா?" என்று சீமான் கேட்டார்.

அவருடைய இந்தப் பேச்சு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. பல்வேறு கட்சிகளும் அமைப்புகளும் கண்டனம் தெரிவித்தன. பெரியார் பேசியதற்கான ஆதாரங்களை வெளியிடுமாறு வலியுறுத்தின.

இதனை அடுத்து புதுச்சேரியில் பேசிய சீமானிடம், இது குறித்து செய்தியாளர்கள் கேள்விகளை எழுப்பினர். அப்போது, "எல்லா ஆதாரங்களையும் முடக்கி வைத்துக் கொண்டு என்னிடம் ஆதாரம் கேட்டால் எப்படி? எவ்வளவு பேர் எடுத்து காணொளிகளாகப் போடுகிறோம். பொய் என்றால் எப்படி? பெரியாரின் நூல்களை அரசுடைமையாக்கிவிட்டு சான்று கேளுங்கள், தருகிறேன். வெளியிட்ட புத்தகங்களை எல்லாம் முடக்கிவைத்து விட்டு என்னிடம் ஆதாரம் கேட்டால் எப்படி?" என்று சீமான் அங்கலாய்த்தார்.

புதுவையிலும் சீமானின் பேச்சு சர்ச்சையையும் எதிர்ப்புகளையும் மேலும் வலுப்படுத்தின.

சீமானின் அவதூறுப் பேச்சுக்கு எதிராக தமிழ்நாட்டின் பல்வேறு காவல் நிலையங்களில் 60க்கும் மேற்பட்ட புகார்கள் அளிக்கப்பட்டுள்ளன. சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டது. அதனை விசாரித்த உயர்நீதிமன்றம், "பெரியார் குறித்த சீமானின் பேச்சு சமூகத்தில் பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. எனவே அவர் மீதான புகாரின் அடிப்படையில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அது குறித்து ஜனவரி 20ஆம் தேதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்" என்று உத்தரவிட்டது.



### பெரியார் பேசியது உண்மையா?

சீமான் கூறியது போல், பெரியார் பேசியதாகக் கூறப்படுவது இது முதல் முறையல்ல. சனாதனிகளும் சங்கிகளும் நீண்ட காலமாகப் பரப்பி வரும் அவதூறுகளில் ஒன்றாகும். பெரியார் சிலையை அவமதிப்பது, சேதப்படுத்துவது என்பதுடன் அவதூறுகளையும் சங்கிகள் பரப்பி வந்தனர்.

இந்த அவதூறை 2017ல் சங்கிகள் சிலர் தங்களின் முகநூலில் (ஃபேஸ்புக்) பகிர்ந்தனர். அதில், திராவிடர் கழகம் நடத்தி வரும் 'விடுதலை' பத்திரிகையில் 1953 ஆம் ஆண்டு மே 11 ஆம் தேதி வெளிவந்தது என்று குறிப்பிட்டிருந்தனர். அதனை வாட்ஸ்அப் போன்றவற்றிலும் பரப்பி வருகின்றனர்.

உண்மையில் அப்படியொரு செய்தி 11.05.1953 அன்று வெளியான 'விடுதலை'யில் இடம்பெறவில்லை. அப்படி பெரியார் பேசவும் இல்லை. அன்றைய விடுதலையின் நான்கு பக்கங்களையும் வெளியிட்டு, திராவிடர் கழகத்தினரும் பெரியார் அன்பர்களும் அம்பலப்படுத்தினர். அதன் பிறகும் அவதூறு பரப்பிய பட்டுக்கோட்டையை சேர்ந்த ஒருவர், 2020 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

ஆனால், சங்கிகள் அந்த அவதூறை மீண்டும் மீண்டும் வாட்ஸ்அப்பில் சுற்றுக்கு விடுகின்றனர். அந்தப் பொய்யை படித்துத்தான் திருவாளர் சீமானும் வாந்தி எடுத்திருக்கிறார்.

செய்திகளின் துல்லியம், உண்மைத் தன்மை குறித்த கவலையின்றி, அவதூறுகளை அடுத்தடுத்து பரப்பிக் கொண்டே இருப்பதற்கான பல்கலைக்கழகம் தான் வாட்சாப் (whatsapp). இந்த வாட்சாப் பல்கலைக்கழகத்தால் வளர்க்கப்பட்டவர்கள், பட்டம் பெற்றவர்கள் இப்படித்தான் பேசுவார்கள். அவர்களில் ஒருவர் தான் சீமான்.

இதனால்தான் "பெரியார் வெளியிட்ட புத்தகங்களை எல்லாம் முடக்கிவைத்து விட்டு என்னிடம் ஆதாரம்

### சீமான் கருத்தியல் கூட்டாளி: தமிழிசை



தமிழக பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் பேசியது வருமாறு:

"சகோதரர் சீமான் எங்கள் வழியில் வந்துள்ளார். நாங்கள் இத்தனை காலமாக எந்தக் கருத்தியலை சொல்லிக் கொண்டிருந்தோமோ அதனையே சீமான் இன்று சொல்லத் தொடங்கி இருக்கிறார். எங்கள் கருத்தியலுக்கு சீமானின் பேச்சு பலம் தருகிறது. பாஜகவின் கருத்தியலுக்கு வெற்றி.

உதாரணமாக, இது அண்ணா வளர்த்த தமிழ் அல்ல; ஆண்டாள் வளர்த்த தமிழ். இது பெரியார் வளர்த்த தமிழ் அல்ல; பெரியாழ்வார் வளர்த்த தமிழ் என்று நான் பேசும்போது அடிக்கடி சொல்வதுண்டு

தற்போது, பெரியபுராணம் படிக்கும்போது உங்களுக்குப் பிடிக்கவில்லை; பெரியார் புராணம் படிக்கும் போது பிடிக்கிறதா என்று சீமான் பேசியிருக்கிறார்.

நாங்கள் என்ன சொன்னோமோ அதை சீமான் தொடர்வது எங்களுக்கு மகிழ்ச்சி. சீமான் எங்களுடைய தீம் பார்ட்னர் (கருத்தியல் கூட்டாளி)" என்று தமிழிசை சவுந்தர்ராஜன் கூறினார்.

### சீமானிடம் வேறு எதனை



"திரிபுராவில் லெனின் சிலை தகர்க்கப்பட்டது போல் தமிழ்நாட்டில் பெரியார் சிலைகள் தகர்க்கப்படும்" என்கிறார் சீமான். அவர் சங்கிகளுக்கு சேவகம் புரியும் அனுமான் என்பதை அம்பலப்படுத்துவதில் இதுவும் ஒன்றாகும்.

லெனின் பாட்டாளி வர்க்கத்தின் அதிகாரத்தை நிறுவியவர். சுரண்டல் கொள்ளை முதலாளிய அமைப்பை ஒழித்துக் கட்டி சோசலிச சமூகத்தை கட்டமைக்க முடியும் என்பதை நிரூபித்தவர்.

திரிபுராவில் அவருடைய சிலையை தகர்த்தது யார்? மக்கள் அல்ல. அங்கு ஆட்சிக்கு வந்த ஆர்எஸ்எஸ், பாஜக. சங்கிகளுக்கு லெனினும் பிடிக்காது.

# கருத்தியல் கூட்டாளி
# ானின் அவதூறுகள்



கேட்டால் எப்படி? அவருடைய நூல்களை அரசுடமையாக்கிவிட்டு சான்று கேளுங்கள், தருகிறேன்'' என்கிறார் சீமான். அப்படியானால் ஆதாரமே இல்லாமல் விமர்சித்தது சரியா? இதற்குப் பெயர் தானே அவதூறு, அண்டப்புளுகு, ஆகாசப்புளுகு.

சீமான் அவர்களே! உங்களின் விளக்கம் சட்டப் படியோ அறத்தின் படியோ செல்லத்தக்கதா? அவதூறுகளால் தமிழ் தேசியத்தை உருவாக்க முடியுமா?

ஒன்றிய பாஜக அரசு, அதிகாரங்கள் அனைத்தையும் மத்தியில் குவித்துக் கொண்டிருக்கிறது. மொழி வாரி மாநிலங்களை ஏற்காததுடன், அவற்றின் பெயரளவிலான அதிகாரங்களையும் பறித்து வருகிறது.

ஒரே நாடு ஒரே ரேஷன் அட்டை முதல், ஒரே நாடு ஒரே தேர்தல் வரை மோடி அரசு செயல்படுத்திய, செயல்படுத்தத் துடிக்கும் திட்டங்கள் அனைத்தும் மாநில அரசுகளை மாநகராட்சிக்கும் கீழான அதிகாரம் கொண்டதாக மாற்றக்கூடியது.

ஒரே நாடு ஒற்றை அதிகாரம் என்பதை செயல்படுத்தி வரும் இந்த ஆர்எஸ்எஸ், பாஜகவை அதிகாரத்திலிருந்து அகற்றாமல், தமிழ் தேசியமோ கூட்டாட்சியோ அல்ல, மாநில சுயாட்சியைக்கூட பெற முடியாது.

இந்த ஒற்றை அதிகாரத்திற்கு எதிராக துரும்பைக்கூட அசைக்காத சீமான், "பெரியாரே எனக்கு வேண்டாம். திராவிடம் பேசுபவர்களை ஒழிப்பதுதான் எனது கொள்கை'' என்று முழங்குகிறார்.

## ஆதாரங்கள் இருக்கின்றன: - அண்ணாமலை



பாஜக மாநில தலைவர் அண்ணாமலை பேசியது வருமாறு: "பெரியார் பேசியதற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. அதைப் பொதுவெளியில் வெளியிட வேண்டிய அவசியம் இல்லை என்பது என்னுடைய கருத்து. பெரியார் பேசிய எத்தனையோ புத்தகங்களை அழித்து விட்டார்கள் அந்த அளவுக்கு பெரியார் பேசியிருக்கிறார். அவற்றை பொது வெளியில் பேச முடியாது. ஏனென்றால் பெண்கள், குழந்தைகள் எல்லாம் பார்த்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அருவருப்பாக இருக்கும். அது போன்ற வார்த்தைகள் அதில் இருக்கின்றன.

ஆனால், சீமான் பேசியதை நான் சரியென்று சொல்ல விரும்பவில்லை. ஒரு கருத்தை அவர் வைத்திருக்கிறார். அதை ஏன் பேசினார் என்பதை சீமான் தான் சொல்ல வேண்டும்.

சீமான் கூறியிருப்பது போன்று, பெரியார் பேசியது எந்தப் புத்தகத்தில் இருக்கிறது என்பதற்கான ஆதாரத்தைக் கொடுக்கிறேன். சீமான் வீட்டிற்கு வரும் போலீஸ்காரர்களிடம் அந்தப் புத்தகத்தைக் கொடுத்தால் போதும்" இவ்வாறு அண்ணாமலை கூறினார்.

## ன எதிர்பார்க்க முடியும்?



பெரியாரும் பிடிக்காது. பெரியார் சிலையை அகற்றுவது குறித்து நீண்ட நாட்களாக சங்கிகள் பேசிக் கொண்டுதான் இருக்கின்றனர். அதனையே திருவாளர் சீமானும் பேசி, தான் யார் என்பதை வெளிப்படுத்தி இருக்கிறார்.

"சங்கி என்றால் சக தோழன், நண்பன் என்று அர்த்தம்" என்று கூறிய சீமானிடம் வேறு எதனை எதிர்பார்க்க முடியும்?

பெரியாருடன் இணைந்தும் விமர்சித்தும் வந்தவர்கள் கம்யூனிஸ்டுகள். ஈரோட்டுப் பாதை சரியா? என சமர் புரிந்தவர் தோழர் ஜீவானந்தம். அவையெல்லாம் அவதூறு பொழியும் சீமான் போன்ற அனுமன்களுக்குப் புரியாது.

## எப்படிப் பேசுபொருள் ஆவது?

பெரியாரை தன் அரசியலுக்கான கொள்கைத் தலைவர் என நடிகர் விஜய் அறிவித்ததில் இருந்து சீமான் அடைந்திருக்கும் பதற்றம் அதிகம். ஏனென்றால் சீமானின் வாக்கு வங்கியாக இருப்பவர்கள் பெரும்பாலும் இளைஞர்கள். நடிகர் விஜயின் அரசியல் வருகையால் சீமானின் வாக்கு வங்கி பெருமளவில் சரிந்து விடும். இதனை ஈடுகட்ட இரண்டு வழிகளில் சீமான் செல்கிறார்.

ஒன்று, எப்படியேனும் தமிழ்நாட்டில் பேசுபொருள் ஆவது (எதிர்மறை விளம்பரம் உட்பட). இன்னொன்று பாஜகவின் சேவகனாக, அனுமனாக மாறுவது.

நடிகர் ரஜினியை சந்தித்தது, சங்கி என்றால் இனிய நண்பன் என்று கூறியது முதல் பெரியாரை விமர்சித்தது வரையிலான நிகழ்வுகளை தொகுப்பாகப் பார்த்தால் இவை தெளிவாகும்.

சீமானின் இந்தப் பேச்சுகளால் ஆர்.எஸ்.எஸ், பாஜக மனம் குளிர்ந்து மகிழ்ந்திருக்கிறது. இதற்கு தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் போன்றவர்களின் கருத்துக்களே எடுத்துக்காட்டாகும்.

"நாங்கள் இத்தனை காலமாக எந்தக் கருத்தியலை சொல்லிக் கொண்டிருந்தோமோ அதனையே சீமான் இன்று சொல்லத் தொடங்கி இருக்கிறார். எங்கள் கருத்தியலுக்கு சீமானின் பேச்சு பலம் தருகிறது. பாஜகவின் கருத்தியலுக்கு வெற்றி. சீமான் எங்களின் தீம் பார்ட்னர் (கருத்தியல் கூட்டாளி)'' என்று தமிழிசை சவுந்தரராஜன் புளகாங்கிதத்துடன் கூறியிருக்கிறார். இதே போன்று எச்.ராஜா, அண்ணாமலை போன்றவர்களும் பேசியிருக்கின்றனர்.

தமிழ் தேசியம் பேசுவார்

மாநில சுயாட்சி,

தன்னுரிமை,

சுயநிர்ணய உரிமை அடிப்படையில் கூட்டாட்சி,

தனிநாடு போன்ற பல்வேறு வழிமுறைகளை வலியுறுத்தி வருகின்றனர்.

இவற்றில் எதைப் பற்றியும் பேசாத சீமான், முதலமைச்சர் கனவை வெளிப்படுத்தியும் விதைத்தும் வருகிறார். இதனை அடைவதற்கு பாஜகவின் பாராட்டுச் சான்றிதழே போதுமானது, பாஜகவிற்கு அனுமனாக இருப்பதே உதவும் என நினைத்து விட்டார் போலும். இதற்கெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் ஏமாந்து விட மாட்டார்கள்.

தொடர்புக்கு: 9500001224

## கோமியம் மருத்துவக் குணமிக்கது என்ற
## ஐஐடி இயக்குனரின் கருத்துக்கு டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் கண்டனம்

கோமியம் மருத்துவக் குணமிக்கது என்ற ஐஐடி இயக்குனர் காமகோடியின் கருத்து கண்டனத்திற்குரியது என்று டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் தெரிவித்துள்ளார்.

சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் சென்னை ஊடகவியலாளர் சந்திப்பில் கூறியதாவது.

சென்னையில் இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சியில் பேசிய சென்னை ஐஐடியின் இயக்குநர் காமகோடி, "என் தந்தை ஜுரத்தில் இருந்தபோது, சன்னியாசி ஒருவர் வந்தார். கோமூத்திரம் (கோமியம்) குடிக்கச் சொன்னார். என் தந்தை குடித்ததும் 15 நிமிடத்தில் காய்ச்சல் குணமாகிவிட்டது. கோமூத்திரத்தில் கிருமி நாசினிகள், ஜீரண மண்டலத்துக்குத் தேவையான பல நன்மை பயக்கும் பாக்டீரியாக்கள் உள்ளிட்ட மருத்துவக் குணம் நிறைந்துள்ளது' என்றும் கூறியுள்ளார்.

அறிவியலுக்குப் புறம்பான அவரது இக்கருத்து கடும் கண்டனத்திற்குரியது.

அவரது கருத்து பல மோசமான விளைவுகளை உருவாக்கும். மக்களின் நலவாழ்வுக்கும், பொதுச் சுகாதாரத் துறைக்கும் கேடு பயப்பதாகும்.

பல்வேறு வகை காய்ச்சல்களால் பாதிக்கப்படும் மக்களை, அறிவியல் ரீதியான சிகிச்சை வழங்கி குணப்படுத்துவதில் எதிர்மறை விளைவுகளை உருவாக்கும்.

ஒரு மிகப்பெரிய அறிவியல் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தின் தலைவர் கூறும் அறிவியலற்ற கருத்தை நம்பி காய்ச்சல் வந்த மக்கள், கோமியத்தைக் குடித்து விட்டு காய்ச்சல் குணமாகி விடும் எனத் தவறாக நம்பிக்கை கொண்டு இருந்தால், அதனால் இறப்புகள் கூட ஏற்பட்டுவிடும் நிலை உருவாகலாம்.

இன்றைய காலத்தில், டெங்கு, கொரோனா, பன்றிக்காய்ச்சல், எலிக்காய்ச்சல், டைபாய்டு, மலேரியா, மூளைக்காய்ச்சல் போன்ற பல உயிருக்கு ஆபத்தை உருவாக்கும் காய்ச்சல்கள் ஏற்படுகின்றன.



உரிய பரிசோதனைகள் மூலம் என்ன காய்ச்சல் என்பதை உறுதி செய்து, உரிய சரியான சிகிச்சைகளை உடனடியாக குறித்த நேரத்தில் வழங்காவிட்டால் உயிரிழப்பு ஏற்பட்டுவிடும்.

எந்தக் காய்ச்சலாக இருந்தாலும், உடனடியாக மருத்துமனைகளுக்குச் செல்ல வேண்டும், மருத்துவர்களை நாட வேண்டும், அறிவியல் ரீதியாக சிகிச்சைகள் பெற வேண்டும் என மருத்துவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த ஆபத்தை உணராமல், ஐஐடி இயக்குனர் கோமியத்தின் மருத்துவத் திறன் பற்றிப் பேசியிருப்பதும், அதற்கு ஆதாரம் இருக்கிறது என்பதும் பொறுப்பற்ற செயலாகும்.

மக்களின் நலவாழ்விற்கும், பொதுச் சுகாதாரத்திற்கும் எதிரானதாகும்.

காய்ச்சல் வந்தால் உரிய சரியான சிகிச்சைகளைப் பெற வேண்டும் என்ற விழிப்புணர்வை மழுங்கடிக்கும் செயலாகும்.

மக்களுக்கு அறிவியல் மனப்பான்மையை உருவாக்க வேண்டும் என்ற இந்திய அரசியல் சட்டத்தின் நோக்கங்களுக்கு எதிரானதாகும்.

மக்களின் நலன்களுக்கும், பொதுச் சுகாதாரத்திற்கும், அரசியல் சட்டத்திற்கும் எதிரானதாகும்.

கோமியம் மூலம் பல்வேறு நுண்ணுயிரி தொற்றுகள் ஏற்படலாம். எலிக்காய்ச்சல், வயிற்றுப் போக்கு ஏற்படலாம்.

பசுமாட்டுச் சாணம் மூலம் ஜியார்டியாசிஸ் என்ற வயிற்றுப் போக்கு, நாடாப்புழு பாதிப்பு, மேட் கவ் டிசீஸ், (mad cow disease) என்ற மோசமான மூளையைப் பஞ்சுபோல் மாற்றும் நோய், கறுப்புப் பூஞ்சை தொற்று, ரைனோ ஸ்பொரிடியோசிஸ் போன்ற பல நோய்கள் ஏற்படலாம். காய்ச்சாத அல்லது நுண்ணுயிரி நீக்கம் செய்யப்படாத பால் மூலம் டைஃபாய்டு, காசநோய் போன்றவை ஏற்படலாம். பஞ்சகவ்யம் மூலமும் மேற்கண்ட தொற்றுகள் மற்றும் நோய்கள் ஏற்படலாம்.

எனவே, திரு.காமகோடி அவர்கள் சொல்வது போல் கோமியம் நோய்களைக் குணப்படுத்தாது, மாறாக அது பல மோசமான நோய்களையே உருவாக்கும். இதை இந்தியக் கால்நடை ஆராய்ச்சி மையத்தின் ஆய்வுகள் உட்பட பல ஆய்வுகள் இதை உறுதி செய்துள்ளன. ஆகவே, அவரது கருத்துகளைப் புறக்கணிக்க வேண்டும் எனப் பொதுமக்களைச் சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

இன்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத், செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# போர் நிறுத்தத்தை மீறுகிறது இஸ்ரேல்



மு.வீரபாண்டியன்

**ஏறத்தாழ 460 நாட்களாக நடைபெற்று வரும் காசா, இஸ்ரேல் போர் தற்போது முடிவுக்கு வருகிறது. இதற்கான ஒப்பந்தத்தில் இஸ்ரேல் ஹமாஸ்கையெழுத்திட்டது. இருதரப்பிலும் மக்களுக்குப் பெரும் மகிழ்ச்சி.**

காசா நிலப்பரப்பில் மட்டும், இஸ்ரேல் நடத்திய போர் வெறியாட்டத்தில் 68 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டு விட்டனர்.

4 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் படுகாயம், வீடு, வாசல் இழந்து அனைவரும் அகதி முகாமில், ஏறத்தாழ காசா மயான பூமியாகத்தான் காட்சி தருகிறது.

முதியோர், குழந்தைகள், நோய்வாய்ப்பட்டோர் என அனைவரின் விருப்பமும் அமைதிதான்.

அந்த அமைதியை காஸா மக்கள் கொண்டாடுகிறார்கள். இஸ்ரேல் தரப்பில் ஏறத்தாழ 80 சத மக்கள் அமைதியை விரும்புகிறார்கள்.

இஸ்ரேலில் அமைதியை விரும்பாத ஒரே கட்சி, தற்போது பாதுகாப்புத் தறை அமைச்சராக உள்ளவரின் அரசியல் கட்சிதான்.

இந்தக் கட்சி மட்டும்தான் ஹமாஸ் இஸ்ரேல் போர் நிறுத்தத்தை எதிர்க்கிறது.

இதன் ஆதரவில்தான் நெதன்யாகு ஆட்சி நடக்கிறது. இப்போது இந்தக் கட்சி ஆதரவை வாபஸ் பெற்று விட்டது. கடிதமும் கொடுத்துவிட்டது. இஸ்ரேல் ஆளும் கட்சி தற்போது தடுமாறுகிறது. ஆட்சிக் கவிப்பு ஏற்படலாம் எனத் தெரிகிறது.



தற்போது இஸ்ரேல் ஒப்பந்தத்தை மீறிப் போர் தொடரும் என அறிவிக்கிறது. உலகில் பல நாடுகள் இதனைக் கண்டிக்கின்றன.

போர் நிறுத்தத்தில் முதல் ஒப்பந்தமே பிணையாக உள்ள கைதிகள் விடுவிக்க வேண்டும்.

ஒரு இஸ்ரேல் பிணைக் கைதியை விடுவித்தால், 10 அல்லது 5 பாலஸ்தீனக் கைதிகளை விடுவிக்க வேண்டும்.

தற்போது மூன்று இஸ்ரேல் இளம் பெண்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இஸ்ரேலில் இருந்து 90 பாலஸ்தீன மக்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

காசாவில் ஹமாஸ் பிடித்துள்ள இஸ்ரேல் பிணைக் கைதிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 300க்குள் தான். இதனை ஹமாஸ் அறிவித்து விட்டது.

ஆனால் இஸ்ரேல் பிடித்து வைத்துள்ள அப்பாவி பாலஸ்தீனப் பொதுமக்கள் பல ஆயிரம். ஆனால், இஸ்ரேல் இந்த எண்ணிக்கையை வெளியிட மறுக்கிறது. இஸ்ரேலில் நேர்மையற்ற அரசு இருப்பதன் அடையாளம் இது.

**தற்போது இஸ்ரேல் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டதன் காரணம்.**

1. ஐநா கண்டனத் தீர்மானங்கள்.
2. உலக நீதிமன்றம் அறிவித்துள்ள போர்க் குற்றவாளி, இஸ்ரேல் என்பது. (நெதன்யாகு)
3. கத்தார், எகிப்து இதர அரபு நாடுகளின் நிர்பந்தம்.
4. ஐரோப்பிய நாடுகளின் நிர்பந்தம்.
5. அமெரிக்காவில் மக்கள் போராட்டம்.
6. மிகக் குறிப்பாக இஸ்ரேல் மக்கள் நடத்திய போர் எதிர்ப்புப் போராட்டம்.

இவையாவுமாகச் சேர்ந்து, இஸ்ரேல் அரை மனதோடு ஒப்புக்கொண்டது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தைத் தற்போது இஸ்ரேல் மீறுவதன் காரணம்.

1. ஹமாஸ் விடுதலை போராளிகளை அழிக்க முடியவில்லை.
2. பிணைக் கைதிகளை விடுவிக்க மனமில்லை.
3. அமைச்சரவையில் முழு ஒப்புதல் இல்லை.
4. இஸ்ரேல் ராணுவத்தின் தோல்வி மனப்பான்மை.

அமெரிக்கா கூட இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்க வேண்டும் என நிர்பந்திப்பதின் நோக்கம்.

அமெரிக்காதான் இஸ்ரேலுக்கு இராணுவம், ஆயுதங்களை வழங்கியது.

இஸ்ரேலுக்கு ஆதரவாகக் கப்பற்படையை நிறுத்தி உள்ளது.

மறுபுறம் வான் வழியாக காசா மக்களுக்கு உணவுப் பொட்டலம், உடைகளை பாரா சூட் மூலம் போடுகிறது.

எப்போதும் போல் இரட்டை வேடம்.

எனினும் உலகம் முழுதும் ஏற்பட்டுள்ள கண்டனம்.

இஸ்ரேல் மீதான கெட்ட பெயர்

தன்மீதும் படிகிறது என்ற பயம் அமெரிக்காவிற்கு.

அமெரிக்கா எதிர்பார்க்காத அளவிற்கு, அமெரிக்க மக்கள், ஐரோப்பிய மக்களின் போர் எதிர்ப்பு.

பாலஸ்தீன ஆதரவு அலை, இதுதான் அமெரிக்காவை சிந்திக்க வைத்துள்ளது.

இஸ்ரேலைத் தடுத்து நிறுத்துகிறது.

கோடிக்கணக்கான மக்கள் திரண்டு நின்றால் போர் தோற்றுப் போகும்.

அமைதி தான் நீடித்து வென்று நிற்கும்.

இஸ்ரேல் போர் வெறி ஒழிக!

சுதந்திரப் பாலஸ்தீனம் வெல்க!!

## நூல் நயம்

### சாதிய ஒடுக்குமுறையும் சமத்துவப் போராட்டமும்




இந்திய நாட்டின் விடுதலைப் போராட்ட வீரர், பொதுவுடமை இயக்கத்தில் என்பது ஆண்டுகளுக்கு மேலாகக் களப்பணி ஆற்றி வரும் புரட்சி வீரர். தமிழக அரசால் தகைசால் தமிழர் என்று விருதளித்து, போற்றப்பட்ட மாமனிதர் இரா.நல்லகண்ணு அவர்கள் ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட எளிய மக்களின் சமத்துவத்திற்கான போராட்டத்தில் தனது நூறாவது வயதிலும் சலிப்பின்றிப் போராடி வரும் மகத்தான மனிதர்.

அந்தப் போர்க்களத்தில் அவர் பேசிய பேச்சுக்கள், எழுதிய எழுத்துகள், சிந்தித்த சிந்தனைகளின் சிறு தொகுப்புதான் சாதிய ஒடுக்குமுறையும், சமத்துவப் போராட்டமும் என்கின்ற இந்நூல். கீழைத் தஞ்சை மாவட்டத்தில், வெண்மணி கிராமத்தில் கால் படி நெல் கூலி உயர்வு கேட்டதற்காக, 44 உயிர்களைப் பலி கொடுத்த ஏழை விவசாயத் தொழிலாளர்கள் பற்றி, உழவுச் செல்வம் இதழில் அவர் எழுதிய கட்டுரையில் இறந்தவர்கள், காவல்துறையினர், அவர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள், நில உடமையாளர்களின் ஆணவம் என அனைத்து விவரங்களும் மிகத் தெளிவாக எழுதப்பட்டுள்ளன. “பாவிகள் வைத்த நெருப்பு, உடலைக் கருக்கிய போதும், பெற்றெடுத்த தங்கத்தைக் கைவிடவில்லை, பாசத்தால் பற்றியும் தாய்” என்ற அவரது கவிதையில். பச்சிளம் குழந்தையைக் கூட, தீ வைத்த கொடியவர்கள் விட்டுவிடவில்லை என்பதை நெக்குருக எழுதியுள்ளார்.

தூத்துக்குடி நெல்லை மாவட்ட சாதிக் கலவரங்கள் பற்றியும், அந்தக் கலவரத்தைப் பற்றி ஆராய்வதற்கு அமைக்கப்பட்ட கோமதிநாயகம் ஆணையம் வழங்கிய சில பரிந்துரைகள் ஏற்புடையதல்ல என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். “நமது நாட்டில் வர்க்கம் மற்றும் சாதிப் பிரச்சனைகள், சமூக யதார்த்தத்தில் இரு அம்சங்களாகும். இந்த இரண்டில் எதைப் பார்க்கத் தவறுவதும் தவறாகும். சுரண்டல்களுக்கு எதிரான, சுரண்டப்பட்ட வர்க்கங்களின் போராட்டமானது வேறு எங்கும் போலவே, அதே அளவு இந்தியாவிலும், சமூக மாற்றத்தின் உந்து சக்தியாகும் என்பதை இந்நூல் வலியுறுத்துகிறது.

– சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | ஆர்.நல்லகண்ணு |
| பக்கம் | : | 62 விலை : 100 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 50 |

## ஐஐடி இயக்குநரின் பொறுப்பற்ற பேச்சுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

சென்னை ஐஐடி இயக்குநர் காமகோடி, தனது தந்தைக்கு ஏற்பட்ட காய்ச்சல் கோமியம் குடித்ததால் குணமானது என்ற பொறுப்பற்ற பேச்சுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் இரா.முத்தரசன் கண்டனம்.

சென்னையில் நடைபெற்ற மாட்டுப் பொங்கல் விழாவில் பேசிய ஐஐடி இயக்குநர் காமகோடி. தனது தந்தைக்கு ஏற்பட்ட காய்ச்சல் கோமியம் (மாட்டு மூத்திரம்) குடித்ததால் குணமானது என்றது பொறுப்பற்ற பேச்சாகும். கோமியத்தின் மருத்துவப் பண்புகள் குறித்து அறிவியல் பூர்வமாக இதுவரை உறுதி செய்யப்படவில்லை. நவீன விஞ்ஞானம் மருத்துவத்தில் வியக்கத்தக்க கண்டுபிடிப்புகளை நடைமுறைக்கு தந்திருக்கும் நிலையில், புகழ்பெற்ற ஆராய்ச்சி மையமாக திகழும் சென்னை ஐஐடி இயக்குநர் பொறுப்பில் இருக்கும் காமகோடி, பல நூற்றாண்டு காலம் பின்னோக்கி கிடக்கும் அனுபவ தகவலுக்கு, அறிவியல் தரச்சான்று வழங்கி பேசியிருப்பது பொறுப்பற்ற பேச்சாகும்.

மனித உழைப்புக்கு உதவிய, உற்பத்தி ஆற்றலை பெருக்கிய கால்நடைகளின் உழைப்பை போற்றும் மாட்டுப் பொங்கலில், கால்நடைகளின் உழைப்பின் முக்கியத்துவத்தை பாராட்ட வேண்டிய இடத்தில், ஐஐடி இயக்குநர் அதன் கழிவை பயன்படுத்தும் பரப்புரையில் ஈடுபட்டதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது என்று

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### நெற்கதிர்கள் மழை நீரில் மூழ்கி நாசம்

## பாசனப் பகுதி விவசாயிகளுக்கு உதவ வேண்டும்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை

அண்மையில் பெய்த மழையினாலும், பலத்த காற்றினாலும் காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அறுவடைக்குத் தயார் நிலையில் இருந்த, விளைந்த பயிர்கள் காற்றில் சாய்ந்து, சரிந்து, தரையில் விழுந்து கிடக்கின்றன. தொடர் மழையால் வயல்களில் தேங்கிய தண்ணீர் வடியாத நிலையில் அறுவடை செய்ய முடியாதபடி நெருக்கடியில் விவசாயிகள் சிக்கி தவித்து வருகின்றனர். தவிர்க்க முடியாத சேதாரங்கள் ஏற்பட்டு வருகின்றது. இதுகுறித்து வேளாண்மைத் துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கொண்ட குழு அமைத்துப் பாதிப்புகளை நேரடியாகப் பார்வையிட்டுக் கணக்கெடுத்து, பாதிப்புக்குத் தக்கபடி இழப்பீடு வழங்க வேண்டும். மற்ற மாவட்டங்களில் உள்ள அறுவடை எந்திரங்களை காவிரி பாசனப் பகுதிக்குக் கொண்டு சென்று, விரைந்து அறுவடை செய்ய உதவ வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு, தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்வதுடன், கொள்முதல் நிலையங்களின் ஈரப்பதத்தை 22 சதவீதம் தளர்த்தி, மாநில அரசு முன் அனுமதி வழங்கி விவசாயிகள் கொண்டு வரும் நெல்லை முழுவதும் கொள்முதல் செய்ய வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தலைவர் எஸ்.குணசேகரன் முன்னாள் எம்எல்ஏ, பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி ஆகியோர் கூட்டாக விடுத்த அறிக்கை:

கடந்த சில நாட்களில் பொழிந்த தொடர் மழை மற்றும் காற்றால் கதிர்களின் எடை தாங்காமல் சாய்ந்துள்ளது. காவிரி டெல்டாவில் சுமார் 40 சதம் பயிர்கள் இப்படியான பாதிப்பில் உள்ளது. மழை பாதிப்பில் இருந்து தப்பிக்க அறுவடை செய்யலாம் என்று விவசாயிகள் இருந்த நிலையில், தொழிலாளர்கள் பற்றாக்குறையால், அரசின் வேளாண் பொறியியல் துறையில் சில அறுவடை இயந்திரங்கள் மட்டுமே உள்ளதால், விவசாயிகளின் இழப்பு கூடுதலாகி விட்டது.

எனவே, தமிழ்நாடு அரசு உடனடியாக, வட்டார அளவிலான குழுக்கள் அமைத்து, இந்தப் பாதிப்புகளை உடனடியாக ஆய்வு செய்து பாதிப்பிற்கு ஏற்ப உரிய நிவாரணம் வழங்கிட வேண்டும்.

எனவே, ஒன்றிய அரசின் அனுமதிக்குக் காத்திராமல், 22 சதம் ஈரப்பதம் நிர்ணயித்துக் கொள்முதல் செய்திட தமிழக அரசு அவசர நடவடிக்கை எடுத்திட வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம் என்று தங்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.

# நீதியரசர் வி.ஆர்.கிருஷ்ணய்யர் சொன்ன சொல்!



ஆர்.ராமானுஜம்

**நண்பர்களே! சான்றோரே! அமரர் வி.ஆர்.கே எழுதியுள்ள வீடற்ற, வாழும் நிலை மறுக்கப்பட்ட சமூகத்தில் பல நேரங்களில் நகரை அழகுபடுத்த அவர்கள் தங்களின் கிழிந்த கூரை வீடுகளிலிருந்தும் வெளியேற்ற, இந்த சட்டபூர்வ அரசுகள் எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி வெதும்பி எழுதியுள்ள அவரின் நூலிலிருந்து பதிவுகள் சில தரப்பட்டுள்ளன. சமூக நீதி பால் நாம் உறுதியுடன் நிற்க அவரின் இந்தச் சொற்கள் துணை நிற்கும் என்ற கருத்தில் இந்த முயற்சி.**

- கோடிக்கணக்கான நம் சகோதர உறவுகள் தலை சாய்ப்பதற்க்குக் கூட ஒரு சிறு இடமில்லாத பூவுலகுக் குடிகளாய் வாழும் குற்றம் புரிந்தவராய் நாம் இருக்கிறோம்.
- என் ஆஃப்கன் விஜயத்தில் கண்டது. அந்த நாட்டில் குறைவான வளர்ச்சி நிலை, குறைந்த அளவு வேலை வாய்ப்பு, தொடர் போர்களினால் சிதைவு, எல்லாம் வல்ல டாலரால் அணி நிறுத்தப்பட்டுத் தங்களுக்குள் மோதிக் கொள்ளும் போர்க் குழுக்கள், பாகிஸ்தானால் நிழல் யுத்தம் நடந்தேறும் காட்சி இவை இத்தனை இருந்தும், அந்த நாட்டரசு குறைந்தபட்சம் எல்லோருக்கும் மண் (களிமண்) வீடாவது கட்டித்தர முயன்றுள்ளது.
- ஒரு கட்டத்திற்கு அப்பால், நீதிமன்றங்கள் மீதும், சமூக நீதி பற்றியும் அதிகம் கற்பனைகள் கொள்ள வேண்டாம்
- இந்த (நமது) நாட்டின் "வீடு கட்டித் தரும் திட்டங்கள்" எல்லாம் சாதாரண, மலிவான சீர்திருத்த நடவடிக்கைகளே! ஆனால் அவைகள் மிக மிகவும் ஆடம்பரமாய் விளம்பரப் படுத்தப் பட்டுள்ளன
- சாமான்யனின் (மண்) குடிசைகளை விட வானை முட்டும் ஐந்து நட்சத்திரக் கட்டிடங்களுக்கே முன்னுரிமை தரப்படுவதாவது (அரசியல் சட்டத்தில் சொல்லப் பட்டுள்ள) "சோஷலிஸக் குடியரசு" என்பதைக் கேள்விக்குள்ளாக்குகிறது.
- நமது நகராட்சிகள் உட்பட்ட எல்லா நிர்வாக அமைப்புக்களும் உழைக்கும் மக்களின் "வாழ்வதற்கான உரிமை "மீதும், நாட்டின் அனைத்து நிலங்கள் மீதும் உரிமை செலுத்துகின்றன.

**இங்கே சட்டம் எல்லோருக்கும் சமம்!!!!**

- நம் சட்டம் ஏழை, பணக்காரன் இருவரையுமே பாலங்களுக்கடியில் வாழ்வதைத் தடுக்கிறது.

  நம் சட்டம் இருவரையுமே சாலையில் நின்று பிச்சையெடுப்பதைத் தடுக்கிறது.

  நம் சட்டம் இருவரையுமே ரொட்டி திருடுவதைத் தடுக்கிறது

  நம் சட்டம் இருவரையுமே சமமாகப் பாவிக்கிறது.
- சீனாவைப் பாருங்கள். நம் நாட்டை விடப் பல துறைகளில் அது பின் தங்கிய நாடுதான். எனினும், "எல்லோருக்கும் வீடு" என்பது அங்கே சமூக யதார்த்தம். உணவும், உடையும் கூட அப்படித்தான். மிகவும் பிற்பட்ட ஆஃப்கானை எடுத்துக் கொள்ளுங்கள். வாட்டும் குளிரில் வாழ்வதற்கான ஒரு உறைவிடம் தரப்பட்டுள்ளது. வியட்நாம், கம்போடிய நாடுகளிலும் எல்லோருக்கும் வீடு கட்டித் தரும் செயல்பாடு நடைபெற்று வருகிறது.
- "சட்ட உதவி மையம்" ஒன்றைத் துவங்கிவைக்க நாங்கள் ஹைதராபாத் சென்றோம். அங்கே, நடுவழியில், சாமானிய மக்கள், அடித்தட்டு மக்கள் பலரும் எங்களை வழிமறித்துக் கோஷமிட்டனர். கோபமுடன் அவர்கள் எங்களிடம் தெரிவித்த செய்தியின் சாரம் இதுதான்: "எங்களுக்கு சட்ட உதவி ஒன்றும் வேண்டாம். வாழும் உரிமை உள்ளவருக்குத்தானே சட்டம், நீதி. எங்களுக்கு முதலில் "கூரை" ஒன்று வேண்டும். நாங்கள் நிலை குலைந்து போனோம். அருகில் இருந்த அது சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடம் இது பற்றிக் கேட்டதற்கு, "சார், இத் திட்டத்திற்கு வர வேண்டிய சிமெண்ட் வரத்து பாதியிலே நின்று போய் விட்டது." ஆனால் அங்கிருந்த கள நிலவரம் சில நட்சத்திர விடுதிகளின் கட்டுமான வேலை தடையின்றித் துரிதமாக நடைபெற்றதென்ற செய்தி.
- நம் நாட்டில் பெருந்திரளான மக்கள் தம் தலைக் கூரையாக வானத்தையே கொண்டு வாழ்கிறார்கள்.
- "நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம்" மூலம் நடவடிக்கை எதுவுமே நடக்கவில்லை. அச் சட்டத்தின் மூலம் கண்டுகொள்ளப்பட்ட மீதி / உபரி இடங்கள் பலம் வாய்ந்த நில அபகரிப்புக் கும்பலால் கையாடப் பட்டது. ஆயினும், காவல்துறை, சட்டம் இவை நடைபாதை வாழ்வோரை மட்டும் சட்ட மீறுவோர் எனக் கூறிப் பலவந்தமாய் அப்புறப் படுத்தின.
- சட்டம் என்பது ஒரு தனிக் கருத்துச் சொல்லாடல் அல்ல. அது பொருளாதார உறவு, சமூக அரசியல் யதார்த்தங்கள், எதிர்காலம் சார்ந்த இயக்கங்கள், எதிர்ப்பு சக்திகள், மக்களின் அடிப்படை எதிர்பார்ப்புக்கள் மற்றும் பண்பாட்டு அடிப்படைகள் இவற்றின் மீது கட்டி எழுப்பப்பட்ட கட்டுமானக் கருத்தாடலே!!
- சட்டத்தின் ஆட்சி என்பது வாழ்க்கையின் விதிகளிடமிருந்தே உயிர் பெறுகிறது.



சட்டமும், வாழ்வும் வேறுபட்டவையல்ல. அவை இரண்டும் ஒன்றோடொன்று சார்ந்த செயல்பாடுடையவை.

- (பிரிட்டிஷ்) காலனியாதிக்க வாழ்வின் மிதப்புத் தொடர்ச்சியே நம் நாட்டில் பரந்து பட்டு நிற்கும் ஏழ்மை. அது முடிவுறும் காட்சி தென்படுவதாயில்லை
- நள்ளிரவில் சுதந்திரம் பெற்று உயிர்த்த / விழித்த இந்தியாவின் எதிர்காலச் சவால் என்பது இந்தியர் ஒவ்வொருவர் கண்ணிலிருந்தும் வழியும் கண்ணீரைத் துடைப்பதே! "சமத்துவமின்மை" என்பது ஒரு அரசு கையாள வேண்டிய வாழ்வு நிலை
- நமது பழைய விதிகள், விதிமுறைகள் இறப்புக்குப் பிந்தைய மீள்வாழ்வைச் சொல்பவை ; ஆனால் நம் சட்டம், புது விதி (வாழ்வு) முறைக்கானது. சட்டம் வாழ்க்கைக்கான சேவை புரியும் கருவி.
- நடைமுறையில் அரசியல் சட்டதிட்டங்களின் வழிகாட்டுதல்களும், தனி நபர் நலனுக்கான சட்ட திருத்தங்களும் சேர்ந்து, 'நிழல் சண்டை போல, காகித அட்டையைக் கூர்மைப் படுத்துதல் போலச் செயலாற்றி மக்களை ஏமாற்றுகின்றன. (எ.கா) சொத்து என்பது அடிப்படை உரிமை என்பதை நீக்கி விட்டு, கூடுதல் நிவாரணம் தருவதற்கென்று நிலக் கையகப்படுத்தும் திருத்தம் கொண்டு வரப் பட்டது.
- சமூகநீதிக்கான தேவை, சமத்துவத்தின் தேவை உச்சத்தில் உள்ள வறியவர் சமுதாயம் அளிக்கும் வாக்குச்சீட்டு ஜனனாயகம் மூலம் கொழுத்துப்போன அரசு எந்திரம், அரசியல் தரகர்கள், கூர்மையான 'பணத்தின் ஆட்சி' இவை சேர்ந்து பிரதினிதித்துவ அரசு என்பதற்கு அஞ்சலி செய்து விட்டது.
- இன்றைய அதிகாரிகள் பரிவு/இரக்கம் ஆகியவை தொற்றாமலிக்க தடுப்பூசி மருந்து செலுத்தப் பட்டவர்களாகவும், சட்டப்படியான நடவடிக்கைகளுக்கு எதிராக வடிவமைக்கப் பட்டவர்களாகவும் உள்ளனர்.
- அட்லீ (இங்கிலாந்து) சொன்னான் : ஒரு சுதந்திரச் சமூகம் பெரும்பாலான ஏழைகளைக் காப்பாற்ற இயலாததெனில், அச் சமூகத்தால் ஓரளவே உள்ள செல்வந்தர்களையும் காக்க இயலாது.
- படித்த இந்தியர்கள் மேலை நாடுகளுகளுக்கு வேலை தேடிப் பறப்பதை நாம் யாரும் வசை பாடுவதில்லை. சமூக ரீதியாக முன்னேறிய பிரிவினர், வாழ்க்கை வசதிகள் கூடுதலாய்ப் பெற நகர்ப்புறம் செல்வதைப் பற்றி வசைச் சொல் கூறுவதில்லை.. அங்கே சென்றபின் அவர்களின் (சந்தேகத்தன்மையுள்ள) செயல்கள் பற்றியும் பேசுவதில்லை
- ஆனால், "சாவைத் தள்ளிப் போடும் முயற்சியாக, சின்னஞ் சிறுசுகளைக் கையில், மடியில் ஏந்தி நகர்ப்புறம் வந்தால், அவர்களை நாம், "நகர்ப்புறத்தை அழுக்கேற்றுகிறார்கள்" எனத் திட்டுகிறோம்.

தொடர்புக்கு: 9449826636

### நீதியரசர் வி.ஆர். கிருஷ்ணய்யருடன் பணியாற்றிய நீதிபதி ஏ.ஆர்.தேசாய் அவர்களின் குறிப்புக்களிலிருந்து :

- செல்வந்தர்கள் தங்கள் வீட்டிற்கு அருகிலேயே கைதட்டி அழைத்தால் ஓடி வந்து எல்லா விதமான வேலைகளையும் குறைந்த கூலியில் செய்து முடிக்கும் வறிய சூழ்நிலை மக்களை அழைத்ததால்தான் இம் மக்கள் நகர்ப்புறத்துக்குப் பெரும் எண்ணிக்கையில் பெயர்ந்து வந்துள்ளனர்.
- கொத்தனார், முடி திருத்துவோர், செருப்பு தைப்பவர், சுடுகாட்டு வெட்டியான், வீடு வேலை செய்பவர்கள், நகர சுத்தித் (இரு பாலார்) தொழிலாளர்கள், கழிவு நீர் சுத்திகரிப்பாளர் என்ற மிகவும் தேவைப்படும் உழைப்பாளிகள், அதிலும் வறுமையில் உழன்று கொண்டிருப்போர், அழைத்தால் வருபவர்கள்.
- செல்வமும், லாபமும் கூடிட மலிவான கூலிக்கு உழைப்பாளர் கிட்டுவதனாலேயேதான்..
- மும்பையிலிருக்கும் எல்லாச் செல்வந்தர்களுமே, தங்கள் பகுதியில் இருக்கும் குடிசைப் பகுதி வாழ் எல்லாக் கூலியாட்களும் அங்கிருந்து காலி செய்யப்பட வேண்டுமென்று விரும்புவதில்லை. மிகச் சொற்பச் செலவில் அழைத்த குரலுக்கு ஓடி வரும் குடிசைவாசிகள் அவர்களுக்கு தேவை.
- (1974-75 ) நெருக்கடி காலத்தில் டில்லி துர்க்மேன் கேட் பகுதியில் நிகழ்த்தப்பட்ட (குடிசை அகற்றல்) நிகழ்ச்சிகளை எந்த சட்டப்படியும் ஏற்க முடியாது; மனித உரிமைக் கண்ணோட்டத்திலும் ஏற்க முடியாது.
- மாற்றத்திற்கான ஒரு சிறந்த ஆயுதம் நம்மிடம் இருக்கின்ற நம் அரசியல் சட்டம் என்பதும் அதற்கான போராட்டம் தொடர்கிறது என்பதும் உண்மை.
- தங்களின் வாழ்வாதாரத்தைத் தொடருமளவு ஒரு சாதாரண உறைவிடம் கூடக் கிடைக்க முடியா நிலையில், இந்த சாமானியர்களை அவர்கள் வாழும் இடங்களிலிருந்து அப்புறப்படுத்தி, குடிநீர், மின்வசதி போன்ற தேவைகளைத் துண்டித்து ' வழியற்ற நிலைக்கு ' அவர்களைத் தள்ளுவது மிக மிக மிருகத் தனமானது. பட்ட காயத்தின் மேல் வெந்நீர் தெளிப்பது போல, இந்த சாமானியர்கள் (மனிதர்களின் சேர்க்க மாட்டாதவர்) சட்ட முறைமை, மனித நாகரீகம், நீதி இவற்றிற்குப் புறம்பான முறையிலே, "தான்தோன்றித்" தனமாக அப்புறப் படுத்தப் படுகின்றனர்.
- "உயர்ந்த மனிதர்களின் தேவையான" நகரை அழகாக்கும் முயற்சியின் பெயராலேயே இது நிகழ்கிறது.
- இவர்களின் கூற்றுப்படி, "சட்டபூர்வமானதென்பதின் கருத்துப்படி ஏழ்மை ஒரு குற்றம்; வீடற்றோர், அட்டைப்பெட்டிக் குடிசைக்குள் வாழ்வோரின் இருப்பும் குற்றபூர்வமான இருத்தலாகும் "
- நகராட்சி/அரசின் சொத்து என்பது, பொதுச் சொத்து.. அந்த பொதுச் சொத்து ஜடம் போல் எங்காவது கிடந்து, உறங்கி வாழும் வீடற்ற, அபலைகளையும், நிலமற்றவர்களையும் உள்ளடக்கிய திரளையும் உள்ளடக்கியதாகும்.



- அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள நமது 'அடிப்படை உரிமைகள் ' அவற்றின் ஆதாரம், மூலம், வேர் என்பது நம் சுதந்திரப் போராட்டத்தில் ஆழமாய்ப் பதிந்து வந்ததாகும்.
- சமத்துவம் என்பது ஒரு காத்திரமான கருத்தியல். அதற்குப் பல அம்சங்கள் உண்டு. அதைப் பழைய சம்பிரதாயங்களின், பழைய வழிமுறைகளின் வரம்பிற்குள் கைது செய்து அடைக்க முடியாது.
- மனுதாரர்களைக் (குடியிருப்பிலிருந்து) அப்புறப்படுத்தல் என்பது சட்டத்தின் கூற்றுப்படி நோக்கினால், அது அவர்களைத் தங்களின் வாழ்வாதாரத்திலிருந்து அப்புறப் படுத்துதற்கும், விளைவாக அவர்களின் வாழ்விலிருந்தெ அப்புறப் படுத்துவதற்கும் சமமாகும்.
- சட்டத்தை மீறிக் குடியிருப்போரை அப்புறப் படுத்த வேண்டியிருந்தாலும், அதற்குப் பயன்படுத்தும் வேகம், சக்தி ஓரளவு ஏற்புடையதாகவும், அங்குள்ள சூழ்நிலைக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். மிக முக்கியமாக, அப்படி "அப்புறப் படுத்தப் படுவோரை " எச்சரிப்பது வேண்டும்; அவர்கள் ஏற்கும் படியான ஒரு வாய்ப்பும் கொடுக்கப் பட்டாக வேண்டும்.
- "வாழும் உரிமை" என்பது மனிதருக்கான மிகவும் மகத்தானதொன்று; அதை இல்லாமல் செய்வது மிகவும் அரிதிலும் அரிதான காரணங்களுக்கு மட்டுமே நிகழ்த்தப் படுதல் வேண்டும். "அப்புறப் படுத்தல்" செயலிலும், முறையிலும் கூட இந்த அரிதிலும் அரிதான காரணம் பிரதிபலித்தாக வேண்டும்.

# ஆட்டோ செயலியை உருவாக்கு! ஓய்வூதியம் ரூ.6000 வழங்கு

# ஆட்டோ தொழிலாளர்கள் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்

**தமிழ்நாடு ஆட்டோ மற்றும் போக்குவரத்துத் தொழிலாளர் சம்மேளனத்தின் சார்பில், ஆட்டோ ஓட்டுநர் நலவாரியம் மூலம் புதிய ஆட்டோ செயலியை உடனே துவங்கு, நல வாரியத்தில் பதிவு செய்த ஓட்டுநர்களுக்கு ரூபாய் 6000 ஓய்வூதியம் வழங்கு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, நல வாரிய அலுவலகங்கள் முன்பு 08.01.2025 அன்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வாரிய அலுவலர்களிடம் மனு கொடுக்கப்பட்டது.**





மேலும் பொங்கல் போனஸ் ரூபாய் 5000 வழங்கு, வீடில்லாத ஆட்டோ தொழிலாளர்களுக்கு வீடு வழங்கு அல்லது 4 லட்சம் நிதி வழங்கு, நலவாரியம் மூலம் இஎஸ்ஐ மருத்துவக் காப்பீடு, பிஎஃப் வசதி அமல்படுத்து, தொழிலாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை உள்ளிட்ட நல நிதியை உயர்த்தி வழங்கு, இயற்கை மரணத்திற்கு ரூபாய் 2 லட்சம், விபத்து மரணத்திற்கு ரூபா 5 லட்சம் உயர்த்தி வழங்கு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தப்பட்டது.

**சென்னை:** சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு, பொதுச்செயலாளர் ப.மாரியப்பன் தலைமையில், ஏஐடியுசி மாநிலத் தலைவர் எஸ்.காசி.விசுவநாதன் சிறப்புரையாற்றினார். இதில் மத்திய சென்னை மாவட்ட தலைவர் மு.சம்பத், ஏஐடியுசி வடசென்னை மாவட்ட பொதுச் செயலாளர் ஏ.அருள், தென் சென்னை மாவட்ட பொதுச் செயலாளர் அழகேசன், கட்டட சங்க மாநிலப் பொதுச் செயலாளர் கோவை என்.செல்வராஜ், மாநிலச் செயலாளர் இரா.துரைசாமி, பொருளாளர் முருகன், ஆட்டோ சங்க நிர்வாகிகள் வி.ரவி, செல்வகுமார், தர்மலிங்கம் உள்ளிட்ட ஆட்டோ தொழிலாளர்கள் திரளாகப் பங்கேற்றனர்.

**திருவள்ளூர் :** திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் ஆட்டோ பட் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பொதுச் செயலாளர் மாரியப்பன், திருவள்ளூர் மாவட்ட ஏஐயுசி பொதுச் செயலாளர் மயில்வாகனன், இம்தியாஸ் பாட்ஷா, தேவேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.






**இராமநாதபுரம் :** இராமநாதபுரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சண்முகராஜன் தலைமை தாங்கினார். மாவட்ட ஏஐடியூசி பொதுச் செயலாளர் என்.கே.ராஜன் சிறப்புரையாற்றினார். கட்டடச் சங்க மாவட்டச் செயலாளர் தர்மராஜ் உள்ளிட்ட தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

**தர்மபுரி :** தர்மபுரியில் மாவட்டச் செயலாளர் கந்தசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏஐடியுசி மாநிலத் துணைத் தலைவர் கே.மணி சிறப்புரையாற்றினார்.

**சேலம் :** சேலத்தில் லோகநாதன் தலைமையில், ஏஐடியுசி மாவட்ட தலைவர் பரமசிவம், ஆட்டோ சங்க மாவட்ட தலைவர் மோகன் ஆகியோர் விளக்கவுரை ஆற்றினார்கள்.

**கடலூர் :** கடலூர் மாவட்டம் திட்டக்குடி பேருந்து நிலையம் அருகில் சிவப்பிரகாஷ் தலைமையில், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் எஸ்.குணசேகரன், செயலாளர் ஆர்.சுப்பிரமணியன், விதொச செயலாளர் முருகையன், சிபிஐ நிதி உலகநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**புதுக்கோட்டை :** புதுக்கோட்டை மாவட்ட தலைவர் பெரியசாமி, செயலாளர் பாண்டியராஜன் தலைமையில் வாரிய அலுவலரிடம் மனு கொடுக்கப்பட்டது.

**விருதுநகர் :** விருதுநகர் மாவட்டம் சிவகாசியில், ஏஐடியுசி தலைவர் சமுத்திரம் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார். ஆட்டோ தொழிலாளர்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

**திருச்சி :** திருச்சியில் மாவட்டச் செயலாளர் சுப்பிரமணி தலைமையில், மாவட்டத் தலைவர் த.இந்திரஜித், ஏஐடியுசி மாவட்டப் பொதுச்செயலாளர் க.சுரேஷ், எம்.சி. நடராஜா, எம்.ஆர்.முருகன், ஜனசக்தி உசேன், அப்துல் ஷரீஃப், முருகேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர் .

**வேலூர் :** வேலூரில் சங்கர் தலைமையில், பாபு முன்னிலையில், ஏஐடியுசி மாநிலத் துணைத் தலைவர் எஸ்.ஆர்.தேவதாஸ், கட்டடச் சங்க மாநிலத் துணைத் தலைவர் ஏ,எஸ்.சங்கர் மேஸ்திரி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

**சிவகங்கை :** சிவகங்கையில் சகாயம் தலைமையில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.குணசேகரன், ஆட்டோ சங்கம் மாநிலத் துணைத் தலைவர் ராஜா, ஏஜடியுசி மாநிலத் துணைத் தலைவர் மீனாள் சேதுராமன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

**திருவாரூர் :** திருவாரூரில் மாவட்ட தலைவர் மணி தலைமையில், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் சந்திரசேகர் ஆசாத், குணசேகரன், கலைச்செல்வன், புலிகேசி ஆகியோர் உரையாற்றினார்கள்.

## நெடுநல்வாடை கூடுகையின் 3 வது அரங்கம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நூற்றாண்டை முன்னிட்டு, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், குமரி மாவட்டக் குழு ஒருங்கிணைத்து வரும் நெடுநல்வாடை கூடுகையின் 3 வது அரங்கம் காருபாறையில் நடைபெற்றது.

இந்த அரங்கில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கட்சியின் வரலாறு குறித்த அறிமுகத்தை, கட்சியின் முன்னாள் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் த.முருகன், மற்றும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலத் தலைவர் எஸ்.கே.கங்கா, மனிதி அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் செல்விமனோ ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். தோழர்களின் கருத்தீடுகளும் சிறப்பாக இருந்தன.

## வினாடி – வினா விடைகள்

1. 1920 ஜூலை 17, 19 ஆகஸ்ட் 7 தேதிகளில்.
2. மெக்சிகோ சோசலிஸ்ட் கட்சி
3. மெக்சிகன் கம்யூனிஸ்ட் கட்சி
4. எம்.என்.ராய் முன்வைத்த அறிக்கை
5. 1921 ஆம் ஆண்டு மாஸ்கோவில்.
6. மெக்சிகன் கம்யூனிஸ்ட் கட்சி

## வழக்கமான நடைமுறையின்படியே பல்கலை. துணைவேந்தர்களை நியமிக்க வேண்டும்

### தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் வலியுறுத்தல்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் புதுக்கோட்டையில் மாநிலத் தலைவர் எஸ்.கே.கங்கா தலைமையில் நடைபெற்றது. இதில் அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சம்மேளனத்தின் தேசியத் தலைவர், சாகித்திய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் லெட்சுமி நாராயணா, பெருமன்றத்தின் மாநிலப் பொதுச் செயலர் த.அறம், மாநிலப் பொருளாளர் ப.பா.ரமணி, சம்மேளனத்தின் தேசியச் செயலர் டி.எஸ்.நடராஜன், ஆந்திர மாநிலப் பொதுச்செயலர் சிவப்பிரசாத், துணைத் தலைவர்கள் ம.செல்வராஜ், கண்மணி ராசா, துணைச் செயலாளர்கள் பிரபாகரன், சசிகலா, கணபதி இளங்கோ உள்ளிட்டோரும் கலந்து கொண்டு பேசினர்.



பொதுவுடைமை இயக்க நூற்றாண்டு விழாவை திருச்சியிலும், தோழர் ஆர். நல்லகண்ணு நூற்றாண்டு விழாவை கோவில்பட்டியிலும், குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழாவை திருப்பூரிலும், எழுத்தாளர் திகசியின் நூற்றாண்டு விழாவை நெல்லையிலும், எழுத்தாளர் ராஜம்கிருஷ்ணன் நூற்றாண்டு விழாவை திருவாரூரிலும், சிந்துவெளி நூற்றாண்டு விழாவை மதுரையிலும் மாநில மையம் சார்பில் நடத்திட முடிவு செய்யப்பட்டது.

தெலுங்கில் பிரபலமான எழுத்தாளர் சாரதா நடராஜனின் நூற்றாண்டு கொண்டாடப்பட்டு வரும் நிலையில், அவர் பிறந்த புதுக்கோட்டை மாநகரில் ஒரு தெரு அல்லது அரசுப் பள்ளி அல்லது நூலகத்துக்கு அவரது பெயரைச் சூட்ட வேண்டும் என தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறது.

பல்கலைக்கழகங்களின் நிர்வாக அச்சாக இருக்கும் துணைவேந்தர்கள் இல்லாமல் பல்கலைக்கழகம் செயல்படுவது உயர்கல்வி வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது. ஏற்கெனவே நடைமுறையில் உள்ளபடி, பல்கலைக்கழகப் பிரதிநிதி, மாநில அரசுப் பிரதிநிதி மற்றும் ஆளுநர் பிரதிநிதி என்ற 3 உறுப்பினர்களைக் கொண்டே தேடுதல் குழுக்களை அமைக்க வேண்டும். பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் பிரதிநிதி தேவையில்லை. இந்த நடைமுறையின்படியே தேடுதல் குழுக்களை அமைத்து, துணைவேந்தர்களை விரைந்து நியமிக்க வேண்டும்.

பல்லுயிர் மற்றும் பண்பாட்டு வள ஆதாரங்களைக் கொண்ட மதுரை அரிட்டாபட்டியில் எவ்விதமான கனிம சுரங்க ஆய்வுகளையும் மேற்கொள்ள மத்திய அரசு முயற்சிக்கக் கூடாது. அந்தத் திட்டத்தை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## குடியிருப்பு மனை கிடைக்காதவர்களுக்காகப் போராட்டங்களை முன்னெடுப்போம்

### ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் தீர்மானம்



தஞ்சை தெற்கு மாவட்டம் ஒரத்தநாடு ஒன்றிய கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்டக் குழு கூட்டத்திற்கு, மாவட்ட தலைவர் அழகு தியாகராஜன் தலைமை வகித்தார். மாநிலக் குழு உறுப்பினர் சி.பக்கிரிசாமி வழிகாட்டினார். மத்திய மண்டலப் பொறுப்பாளர் வீ.கல்யாணசுந்தரம் அமைப்பின் அவசியம் குறித்துப் பேசினார். மாவட்டச் செயலாளர் இள.குமணன் தேசிய மாநாட்டு முடிவுகள், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கிப் பேசினார். குடியிருப்பு மனை கேட்டு இதுவரை கிடைக்காதவர்களுக்காக, தஞ்சை தெற்கு மாவட்ட ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பாகப் போராட்டங்களை முன்னெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

## திருவாரூரில் சட்டக்கல்லூரி துவங்கிட வேண்டும்

### இளைஞர் பெருமன்ற மாவட்ட மாநாடு வலியுறுத்தல்

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் திருவாரூர் மாவட்ட 19வது மாநாடு முத்துப்பேட்டையில், மாவட்டத் தலைவர் சு.பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் க.பாரதி மாநாட்டினை துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் துரை.அருள்ராஜன் அறிக்கையினை முன்மொழிந்தார். மாநாட்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர். பிரதிநிதிகள் ஊர்வலம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாநாட்டில் கட்சியின் முன்னணித் தலைவர் கோ.பழனிச்சாமி எக்ஸ் எம்எல்ஏ, நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், கட்சியின் மாவட்ட பொறுப்புச் செயலாளர் எஸ்.கேசவராஜ், கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் க.மாரிமுத்து எம்எல்ஏ., மாநிலக்குழு உறுப்பினர்கள் கே.உலகநாதன் எக்ஸ் எம்எல்ஏ, அ.பாஸ்கர், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கே.ஆர்.ஜோசப், ஆர்.சந்திரசேகர ஆசாத், கே.ராஜா, பு.முருகையன், பெ.முருகேஷ் மற்றும் கலை. அஸ்வினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட தலைவராக எஸ்.பாலமுருகன், செயலாளராக கோ. சரவணன், பொருளாளராக எம்.எஸ்.ஷேக் தாவூத், துணைத் தலைவர்களாக அ.பழனிவேல், பி.சிவப்பிரசாத், கே.சி.ஸ்ரீதரன், துணைச் செயலாளர்களாக பி.பாக்கியராஜ், கே. பாலமுருகன், பி.வி.சி.கார்த்தி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இறுதியாக கட்சியின் முத்துப்பேட்டை ஒன்றியச் செயலாளர் உமேஷ் பாபு நன்றி கூறினார்.

## தொப்பூர் மலைச் சாலையைச் சீரமைக்க ஏஐஒய்எப் வட்டாரப் பேரவை வலியுறுத்தல்

அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற நல்லம்பள்ளி வட்டாரப் பேரவைக் கூட்டம் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. பிரதாப் முன்னிலையில், உபக்குழு தலைவர் நவீன்குமார் பேரவைக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார். ஏஐஒய்எப் மாநிலத் துணைத் தலைவர் கே.மணி கூட்டத்தை நிறைவு செய்து பேசினார். இதில் வட்டாரத் தலைவராக எம்.பிரதாப், செயலாளராக பி.லோகேஷ்குமார், பொருளாளராக தமிழ்செல்வன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

இதில் மிட்டாரெட்டி அள்ளியிலிருந்து கோம்பேரி வழியாக, பொம்மிடி இணைப்புச் சாலை திட்டப் பணியை விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விபத்து ஏற்படும் தொப்பூர் மலைச் சாலையைச் சீரமைத்து விபத்துகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் வலியுறுத்தபட்டன. இறுதியில் இன்ஜீனியர் சங்கர் நன்றி கூறினார்.

## பழங்குடி மக்களின் வன உரிமையைப் பாதுகாக்க வேண்டும்

### ஏஐஒய்எப் ஏரியூர் வட்டாரப் பேரவை வலியுறுத்தல்

தருமபுரி மாவட்டம், ஏரியூரில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற ஏரியூர் வட்டாரப் பேரவைக் கூட்டம் நிர்வாகி கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.ஏ.காதர் துவக்கி வைத்தார். பழங்குடி மக்கள் சங்க மாநில கவுரவ தலைவர் ந.நஞ்சப்பன், கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.தேவராசன் சிறப்புரையாற்றினர். இதில் மாவட்ட துணைச் செயலாளர் எம்.மாதேஸ்வரன், மாவட்டப் பொருளாளர் வழக்கறிஞர் சி.மாதையன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் காதர், விடுதலைவிரும்பி, ஏரியூர் வட்டாரச் செயலாளர் விஸ்வநாதன், ஏஐஒய்எப் மாவட்டப் பொறுப்பாளர் கதிரவன் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

தருமபுரி, சேலத்தை இணைக்கும் காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டத்தை விரைந்து முடிக்க வேண்டும். பழங்குடி மக்களின் வன உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் வட்டாரத் தலைவராக கந்தசாமி, செயலாளராக திம்மராயன், பொருளாளராக லோகேஷ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## நிதிநிலை அறிக்கையைக் கிழித்து பிப்.6ல் தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம்

பணிநிரந்தரம், நிர்ணயிக்கப்பட்ட ஊதியம், போனஸ் பணிக்கொடை வருங்கால வைப்பு நிதி ஓய்வூதியம் உள்ளிட்ட தொழிலாளர்கள் உரிமைகள் அனைத்தையும் பறித்து, அற்றைக் கூலிகளாக்கும் பாஜக அரசின் கொள்கைகளைக் கைவிடக் கோரி அனைத்து மத்தியச் சங்கங்களும் முன்வைத்த கோரிக்கைகளை ஒன்றிய அரசு முற்றாக மறுத்து விட்டது.

நிதிநிலை அறிக்கையில், இடம்பெற வேண்டிய தொழிலாளர் நலனுக்கான அம்சங்களைத் தொழிற்சங்கங்கள் முறையிட்டும், அரசு அலட்சியப்படுத்துகிறது. எனவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையைக் கிழித்து எரிந்து பிப்ரவரி 6 ஆர்ப்பாட்டங்களை நடத்த தமிழ்நாட்டின் அனைத்துத் தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும், தொழில் மையங்களிலும் விரிவாக இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்துமாறு அனைத்துத் தொழிற்சங்கக் கூட்டம் தமிழ்நாட்டுத் தொழிலாளர்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளது.

**2025 பிப்ரவரி 10–17 பரப்புரை வாரம்:**

கார்ப்பரேட்டுகளின் அழுத்தத்துக்கு இணங்கி, நான்கு தொழிலாளர் சட்டத்தொகுப்புகளை விரைவில் செயலாக்க மோடி அரசு முயற்சிக்கிறது. இதனை நிறைவேற்றும் வழிவகைகளை ஆய்வதற்குத் தொழிலாளர் நிலைக் குழுவிடம் அனுப்பி வைத்துள்ளது.

வழக்கமாக அனைத்து மத்தியத் தொழிற்சங்கங்களையும் ஒன்றாக அழைத்துப் பேசுவதற்குப் பதிலாக, ஒவ்வொரு சங்கமாக தனித்தனியே அழைத்துப் பேசி வருகிறார்கள்.

இந்தச் சட்டத் தொகுப்புகள் அமலானால் 150 ஆண்டு காலமாக பெற்ற உரிமைகள் அனைத்தும் தொழிலாளர்களிடமிருந்து பறிக்கப்படும். எனவே, அதுகுறித்த அறிவிக்கை வருமானால் அந்தத் தேதியிலேயே பொது வேலை நிறுத்தத்தைத் துவக்குவது என மத்தியத் தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

அதற்குத் தொழிலாளர்களை ஆயத்தப்படுத்தும் வகையில், அந்தச் சட்டங்கள் அமலானால் எத்தகைய விளைவுகள் ஏற்படும் என்பதை விளக்கி தெருமுனைக் கூட்டங்கள், தொழிலாளர் குடியிருப்புகளில் கூட்டங்கள், ஆலிவ் ஆயில் கூட்டங்கள் உள்ளிட்ட அனைத்து வடிவங்களிலும் பிப்ரவரி 10 முதல் 17ஆம் தேதி வரை தொழிற்சங்கங்கள் கூட்டாகச் சேர்ந்து பரப்புரை மேற்கொள்வது எனவும் கூட்டம் தீர்மானித்தது.

18.01.2025ல் எழும்பூரில் எச்.எம்.எஸ் மாநிலத் தலைவர் எம்.சுப்ரமணியம் தலைமையில் நடைபெற்ற அனைத்துச் சங்கக் கூட்டத்தில் கி.நடராஜன், (தொமுச) டி.எம்.மூர்த்தி, கே.நடராஜன், மு.சம்பத் (ஏஐடியுசி), ஜி.சுகுமாறன். (சிஐடியு) எம்.சுப்ரமணியபிள்ளை, (எச்எம்எஸ்) பா.சுகுமாரன் (ஐஎன்டியுசி) வி.சிவக்குமார், எஸ்.ராஜ்குமார் (ஏஐயுடியுசி) வி.அதியமான், (ஏஐசிசிடியு) எஸ்.மாயாண்டி, (டியுசிசி), இரா. அந்திரிதாஸ், (எம்எல்எப்) கே.ராம்பாபு (டபுள்யுபிடியுசி) ஏ.எஸ்.குமார் (எல்டியுசி) க.பேரறிவாளன் (எல்எல்எஃப்) உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தஞ்சை மாநகரக் கூட்டம்

தஞ்சை மாநகரக் கிளைப் பொறுப்பாளர்கள் கூட்டம் மாநகரத் தலைவர் அகிலா கிருஷ்ணமூர்த்தி தலைமையில், செயலர் சா.கிருத்திகா தீர்மானங்களை முன்மொழிந்தார்.

பூனைகளின் வாழ்க்கை மனித மனங்களோடு இணைவதையும், முரண்படுவதையும் இயக்குனர் விஜய மகேந்திரனும், திருநங்கைகளின் சமூக நலன் என்னும் பார்வையில் முனைவர் ஜெய்னம்பு பர்வீனும், மறுமணத்திற்கான புதிய கண்ணோட்டத்தை முனைவர் சா.கிருத்திகாவும், இசைக் கலைஞர் டி.எம். கிருஷ்ணாவின் மக்கள் இசை தொடர்பான கருத்துகளை அகிலா கிருஷ்ணமூர்த்தியும் கவிதைகளாகப் படைத்தனர். இயக்குனர் தமிழ் தன்னுடைய சிறுகதைகள், குறு நாவலுக்கான தளத்தைப் பகிர்ந்து கொண்டார். சமூக விமர்சகர் அந்தோணி அப்பா மற்றும் முனைவர் சந்திரசேகர் இருவரும் ஆழமான விமர்சனக் கருத்துகளை தஞ்சை மாவட்ட கௌரவத் தலைவர் மரு.பா.கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். முனைவர் பர்வீன் நன்றியுரை வழங்கினார்.

## செங்கல்பட்டில் கவிஞர் தமிழ் ஒளி நூற்றாண்டு நிறைவு விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் காஞ்சிபுரம் மாவட்டக் குழுவின் சார்பாக, கவிஞர் தமிழ் ஒளி நூற்றாண்டு நிறைவு விழா செங்கல்பட்டில், மாவட்ட துணைத் தலைவர் ஓவியக்கவி வீரமணி தலைமையில் நடைபெற்றது. கவிஞர் தமிழ் ஒளியின் படத்தினை மாவட்டத் தலைவர் ஜீவா மணிக்குமார் திறந்து வைத்தார். கவிஞர் தமிழ்ஒளி, ஜீவா உருவப்படங்களுக்கு சிவகங்கை மாவட்ட செல்வராஜ் மற்றும் திராவிடர் கழக தலைவர் சுந்தரம் மலர் மரியாதை செலுத்தினர். மாவட்டச் செயலாளர் சி.இராமலிங்கம், கூடுவாஞ்சேரி கிளைச் செயலாளர் கல்லை ஜெயராமன், வசந்தமாலா, ஆதியாக்கோபு, நா.வேணி, கவிஞர் பன்னீர்செல்வம் ஆகியோர் கவிதை வாசித்தனர். முத்து சொக்கலிங்கம், ஆசிரியை ஜா.ஆயிஷா சித்திகா, எழுத்தாளர் ஆய்வாளர் கோமதி சங்கர் சிறப்புரை ஆற்றினர், நூற்றாண்டு விழா நிறைவுரையினை அனைத்திந்திய முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கத்தின் தேசியச் செயலர் டி.எஸ்.நடராஜன் நிகழ்த்தினார். அனைவருக்கும் நினைவுப் பரிசுகளாகப் புத்தகங்கள் வழங்கி நிறைவு செய்தார்.

**தருமபுரி – மொரப்பூர்**

## ரயில் பாதை திட்டப்பணிகளை விரைவாகத் தொடங்க வேண்டும்

### இளைஞர் பெருமன்றம் வலியுறுத்தல்






அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தருமபுரி நகரம் மற்றும் ஒன்றிய பேரவைக் கூட்டம் கட்சி அலுவலகத்தில் நவின்கார்த்திக் தலைமையில் நடைபெற்றது. இதற்கு தமிழமுதன், தீனா, ஜீவா முன்னிலை வகித்தனர். பிரசாந்த் வரவேற்றார். உபக்குழு தலைவர் நவீன்குமார் கூட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசினார். ஏஐடியுசி மாநில துணைத் தலைவர் கே.மணி, நிர்வாகிகள் வள்ளுவன், சாமிநாதன், பழனி வாழ்த்திப் பேசினார்கள். அதில் தலைவராக தீனா, செயலாளராக கார்த்திக், பொருளாளராக பிரசாத் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தருமபுரி மொரப்பூர் ரயில் பாதைத் திட்டப் பணிகளை விரைவாகத் தொடங்க வேண்டும். தருமபுரி மாவட்டத்தில் சிப்காட் மற்றும் சிட்கோ திட்டப் பணிகளைத் தொடங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டன.

**ஒகேனக்கல் முதல் தர்மபுரி வரை**

## நான்கு வழிச் சாலை அமைக்க ஏஐஒய்எப் வலியுறுத்தல்

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் பென்னாகரம் வட்டாரப் பேரவைக் கூட்டம், முள்ளுவாடி பகத்சிங் நினைவரங்கத்தில் பெரியசாமி, சந்தோஷ், சார்லஸ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் மாநிலச் சிறப்புத் தலைவர் ந.நஞ்சப்பன் எக்ஸ் எம்எல்ஏ கூட்டத்தைத் துவக்கி வைத்தார்.

இதில் கட்சியின் மாவட்ட துணைச்செயலாளர் எம்.மாதேஸ்வரன், மாவட்டப் பொருளாளர் வழக்கறிஞர் சி.மாதையன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.ஏ.காதர், வழக்கறிஞர் பவானி சிவராமன், கட்சியின் பென்னாகரம் வட்டாரப் பொறுப்புச் செயலாளர் சதீஷ்குமார் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

வட்டாரத் தலைவராக சந்தோஷ், துணைத் தலைவர்களாக எம். முருகன், நாச்சானூர் ஆறுமுகம், செயலாளராக சார்லஸ், துணைச் செயலாளர்களாக நாகனூர் பெரியசாமி, கார்த்திக், பொருளாளராக பெரியசாமி ஆகியோர் ஒரு மனதாகத் தேர்வு செய்யப்பட்டனர். புதிய நிர்வாகிகளை இளைஞர் பெருமன்ற மாவட்டப் பொறுப்பாளர் என்.என்.கதிரவன் அறிமுகம் செய்தார். பென்னாகரத்தில் மகளிர் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கப்பட வேண்டும், ஒகேனக்கல் முதல் தர்மபுரி வரை நான்கு வழிச்சாலையை உடனடியாக அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# காவிரிப் படுகை தியாகிகள் 3



கோ.பழனிச்சாமி

### பிரிஞ்சுமலை தியாகி பக்கிரி:

திருத்துறைப்பூண்டி தாலுகா பிரிஞ்சுமலை கிராமத்தில் 1910இல் விவசாய குடும்பத்தில் பிறந்தவர். அது நிலக்கிழார் அடக்குமுறையால் பாதிக்கப்பட்ட குடும்பம். திருமணமாகி, ஐந்து குழந்தைகள் உண்டு. 1943ல் விவசாய சங்கத்தில் இணைகிறார். 1948ல் திருத்துறைப்பூண்டியில் சிவராமன் நடத்திய கூட்டத்தில் பேசுகிறார். அப்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்தது.

கூட்டம் கூடக் கூடாது என்பதற்காக 144ம் பிரிவு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதையும் மீறி ஆயிரத்துக்கு மேற்பட்ட தோழர்களோடு சிவராமன் ஊர்வலம் நடத்தி கூட்டத்துக்கு வருகிறார். காவல்துறையினர் இடைமறித்து கைது செய்கிறார்கள். அனைவரும் திருச்சி மத்திய சிறைக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். நான்கு வாரம் கழித்து இவருடன் சென்றவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுகிறார்கள்.

ஆனால் இவர் மட்டும் விடுதலை செய்யப்படாமல் சிறையில் இருக்கிறார். சில நாட்கள் கழித்து, சிறையில் அவர் இறந்து விட்டதாக தகவல் வருகிறது. இவரது வீடு நிலம் ஆகியவை ஜப்தி செய்யப்படுகின்றன. மன உளைச்சலுக்கு ஆளான இவரது மனைவியும் இறந்து விடுகிறார். இதனைத் தொடர்ந்து அவருடைய மூத்த பிள்ளைகள் ஒரு ஆண், ஒரு பெண் துன்பத்துக்கு ஆளாகி இறக்கிறார்கள்.

நில பிரபுக்களின் ஆதிக்கத்துக்கு அடிபணிந்த காவல்துறையின் அட்டூழியங்களுக்கு ஆளாகி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் இறந்து விடுகின்றனர். சாணிப்பால் சவுக்கடி கொடுமைகளுக்கு முடிவு கட்டப்பட்டது என்றால், இது போன்ற எண்ணற்ற தியாகிகளின் சர்வபரித் தியாகங்களே மையக் காரணிகளாகும்.

### தியாகி சிரங்குடி கிட்டு:

நன்னிலம் தாலுகா, சாத்தனூர் என்ற ஊரில் ராமன், லட்சுமி தம்பதிகளின் மகனாக 1928 ல் தோழர் கிட்டு பிறந்தார். இவரது தம்பியின் பெயர் பட்டி. இவர்கள் இருவருமே அந்தப் பகுதியில் விவசாயிகள் சங்கத்தை கட்டினார்கள். அந்தப் பகுதியின் நிலக்கிழார் ராமமூர்த்தி ஐயர். விவசாயத் தொழிலாளர்களை கொத்தடிமைகளாக நடத்தினார். கூலி தருவதில் எப்போதும் நிரந்தரமாக பிரச்சனைகள் இருந்தன. விவசாய சங்கத்தில் தலைமை தாங்கி கிட்டுவும் பட்டியும் எதிர்த்து நின்றதால் அவர்களை மிரட்டுவதற்காக ராமமூர்த்தி கலகத்தைத் தூண்டுகிறார். இதில் பண்ணை தலையாரி இறந்து விடுகிறார்.

ராமமூர்த்தி ஐயர் இதனைப் பயன்படுத்திக் கொண்டு கிட்டு அவரது தம்பி பட்டி ஆகியோர் மீது கொலை குற்றம் சாட்டுகிறார். வழக்கின் முடிவில் இருவருக்கும் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. அதன் மீது கருணை மனு தாக்கல் செய்யப்படுகிறது. இதில் தம்பி பட்டிக்கு மட்டும் தூக்கு தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்படுகிறது. கிட்டுவின் மனு நிராகரிக்கப்படுகிறது. அண்ணன் கிட்டு 1955 ஜனவரி 8ஆம் தேதி தூக்கிலிடப்பட்டார்.

### கோட்டூர் தியாகி ராசி:

1915 செப்டம்பர் 6ல் இருள் நீக்கி கிராமத்தில் வெங்கடாசலத்தின் மகனாகப் பிறந்தார். ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர். 1943 விவசாய சங்கம் துவங்கப்பட்ட போது அதில் இணைந்து தீவிரமாக பணி செய்தார். அன்றைய பெரும் நிலப்பிரபுகளில் ஒருவர் குன்னியூர் சாம்பசிவ ஐயர். அவரது நிலத்தில் வேலை செய்யும் பட்டியலினத்தைச் சேர்ந்த ஆண் பெண் விவசாய தொழிலாளர்களுக்கு தினம் அரை மரக்கால் மட்டுமே கூலியாக வழங்கப்பட்டது. மேலும் அவர்கள் அனைவரும் எந்த உரிமையுமற்ற கொத்தடிமைகளாகவே வைக்கப்பட்டிருந்தனர். இவர்களை விடுவிப்பதற்காக விவசாய சங்கம் போராடியது. ராசி அந்தப் பகுதியில் தலைமை பொறுப்பேற்று அல்லும் பகலும் பணி செய்தார். 1948ல் கட்சி தடை செய்யப்பட்டது. பகிரங்கமாக இயங்க முடியாது என்பதால் தலைமறைவாகி இயக்கப் பணியைத் தொடர்ந்தார்.

ஏதோ ஒரு நேரத்தில் நிலப்பிரபு அடியாட்களிடம் சிக்கியவரை, கொலை செய்து கோவிலுக்கு அருகில் போட்டு விட்டார்கள். உடலை எடுத்துச் சென்ற போலீஸ்காரர்கள் தப்பி ஓடும்போது துப்பாக்கியால் சுடப்பட்டார் என்று நாடகமாடினர். பிரேத பரிசோதனையில் அதுதான் நிரூபிக்கப்பட்டதாக சொன்னார்கள். உண்மையில் அது துப்பாக்கி சூடு அல்ல, தியாகி ராசி கொலை செய்யப்பட்டார் என்பதே உண்மை

### தியாகி சிலுவை முத்து:

தற்போதைய புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி, பொன்பேத்தி கிராமத்தில் விவசாய குடும்பத்தில் பிறந்தவர். நிலக்கிழர்களின் கொடுமைகளை எதிர்த்து விவசாய சங்கத்தில் சேர்ந்து போராட்டங்களில் தொடர்ந்து பங்கேற்றார். 1952ல் கட்சியில் உறுப்பினராக இணைந்தார். அவருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. நிலப்பிரபுக்கள் வெறி கொண்டு அவர் மீது வெவ்வேறு பிரிவுகளில் 22 வழக்குகளை போட்டனர். அனைத்து வழக்குகளையும் எதிர் கொண்டு அவை தவறானவை என்று நிரூபித்து வெற்றி கண்டார். வழக்குகளில் இருந்து விடுபட்ட பின்பு மீண்டும் திருமணத்துக்கு நாள் உறுதி செய்யப்பட்டது. ஆனால் திருமண நாளுக்கு முன்பாகவே நிலப்பிரபுக்களின் குண்டர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கம்யூனிஸ்டுகளை முடித்து ஒழிக்க வேண்டும் என்பதை எண்ணம் கொண்ட அரசாங்கம், எதையும் விலை கொடுத்து வாங்குவதற்கான செல்வாதாரங்கள் கொண்ட நிலப் பிரபுகள், இவர்களில் ஆதிக்கத்துக்கு கையாட்களாக செயல்படும் காவல்துறை, நீதிமன்றம், வருவாய்த்துறை எல்லாம் சேர்ந்து விடுதலை அடைந்த பின்பும் மக்களுக்கு சுதந்திரம் கிடைக்காமல் பழைய ஆதிக்க சக்திகளின் பாதங்களைப் பற்றியே அடிமைகளாக இருக்க வேண்டும் என நிலைநாட்டு முயன்றனர். அதனை உடைத்தெறிய, எங்கள் உயிரையும் உடைமைகளையும் குடும்பங்களையும் கூட பலி வருவோம்; உரிமையை மீட்டே தீருவோம் என நின்ற வழி காட்டுகிற தியாகிகளை என்றும் மறவோம்.

இன்னும் தொடரும்

# இலக்கியப் பேராசான் ப.ஜீவானந்தம் 62 வது நினைவு தினம்

**விடுதலைப் போராட்ட வீரர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தன்னிகரில்லா தலைவர், இலக்கியப் பேராசான் ப.ஜீவானந்தம் அவர்களின் 62 வது நினைவு தினம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் சார்பில் தமிழகம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டது.**

**வடசென்னை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வடசென்னை மாவட்டத்தின் சார்பாக ஜீவா அவர்களின் நினைவிடம் உள்ள காசிமேட்டில் மலரஞ்சலி செலுத்தினர். தண்டையார்பேட்டை மணிக்கூண்டு ஜீவா பூங்காவில், அமைக்கப்பட்டுள்ள ஜீவா சிலைக்கு மாலை அணிவித்து, கட்சிக் கொடியினை மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் ஏற்றினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டுமற்றும்தோழர் ஆர்.நல்லகண்ணு நூற்றாண்டு விழா, கட்சியின் மாவட்டச் செயலாளர் வெங்கடேஷ் வேம்புலி தலைமையில், மாமன்ற உறுப்பினர் மோ.ரேணுகா வரவேற்புரை ஆற்ற, கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் துவக்க உரை ஆற்றினார். கவிஞர் கே.ஜீவபாரதி சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்வின் சிறப்பு அம்சமாக ஜீவாவின் சிலையை, மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அளிக்க, வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி பெற்றுக்கொண்டு வாழ்த்துரை ஆற்றினார். இதில் காங்கிரஸ் எம்.எஸ். திரவியம், சிபிஎம் எம்.ராமகிருஷ்ணன், விசிக சி.சௌந்தர், மதிமுக அலி ஆகியோர் வாழ்த்துரைக்க, நிகழ்வில் 100 தூய்மைப் பணியாளர்களைப் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் எம்.ஜெய்சங்கர் நன்றி கூறினார்.






**திருவாரூர்:** திருத்துறைப்பூண்டியில், கட்சியின் முத்த தோழர், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கோ. பழனிச்சாமி தலைமையில், கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் எம்.வையாபுரி மாலை அணிவித்தார். கலை இலக்கியப் பெருமன்றப் பொறுப்பாளர்கள், கட்சியின் மாநில, மாவட்டப் பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

**நாகை:** நாகையில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநில துணைத் தலைவர் வை.செல்வராஜ் எம்.பி. தலைமையிலும், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மேனாள் பொதுச் செயலாளர் முனைவர் இரா. காமராசு முன்னிலையில், மன்னார்குடி ஏஐடியூசி அலுவலகத்தில் நடைபெற்றது.

● கீழையூர் கட்சி அலுவலகத்தில் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் டி.செல்வம் தலைமையில் வீரவணக்கம் செலுத்தப்பட்டது. இதில் ஒன்றிய துணைச் செயலாளர் வீ.எஸ்.மாசேத்துங், இளைஞர் பெருமன்ற மாவட்டத் துணைத் தலைவர் எஸ்.ரமேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், ஜீவா படத்திற்கு மலரஞ்சலி செய்து, வீரவணக்கம் செய்யப்பட்டது. வட்ட துணை செயலாளர் மகாலிங்கம் தலைமை வகித்தார். பேரூராட்சி தலைவர் தவமணி பெரியசாமி முன்னிலை வகித்தார். தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ பேசினார்.

**சாத்தூர்:** விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் கலை இலக்கியப் பெருமன்றத்தின் கிளைத் தலைவர் சுவாமிநாதன் தலைமையில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது. மாநிலப் பொதுச்செயலாளர் மருத்துவர் த.அறம், தஒவாஇ மாவட்டச் செயலாளர் பழனிக்குமார் ஆகியோர் பேசினார்கள். கிளைச் செயலாளர் கணேசன் பாடல்கள் பாடினார்.

**நாமக்கல்:** திருச்செங்கோடு நகரத்தில், கட்சியின் மாவட்டச் செயலாளர் க.அன்புமணி, மாலை அணிவித்தார். நகரச் செயலாளர் எஸ்.சுகுமார், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.ஜெயராமன், மாவட்டக் குழு உறுப்பினர் டி.கே.சுப்பிரமணி, ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் பி.தனசேகரன், ஏஐடிஆர்எம் தேசியக் குழு உறுப்பினர் எஸ்.ராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செங்கல்பட்டு:** தாம்பரத்தில் உள்ள ஜீவாவின் முழு உருவச்சிலைக்கு, ஜீவா குடும்பத்தினரும், கட்சியின் செங்கை காஞ்சி மாவட்டக் குழுவினரும், கலை இலக்கியப் பெருமன்றத்தினரும், மார்க்சிஸ்ட் கட்சியினரும், தி.மு.கழகத்தினரும் மலரஞ்சலி செலுத்தினர்.

**கோவை:** கோவை கிழக்கு மண்டலக் குழு, பாலன் நகர் கட்சி கிளைகளின் சார்பில், கிளைச் செயலாளர் ஆதி பாண்டியன் முன்னிலையில், விஸ்வநாதன் தலைமையில், கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் கல்யாணசுந்தரம், மூத்த தோழர் ஜி.நாராயணசாமி, இளைஞர் பெருமன்றத்தின் கிழக்கு மண்டல துணைத் தலைவர் சிவப்புச் சட்டை சுரேஷ் உள்ளிட்டோர் ஜீவா குறித்து உரையாற்றினார்கள்.

**தென்காசி:** தென்காசி மாவட்டம் சிவகிரி, புளியங்குடியில் கட்சிக் கொடி ஏற்றப்பட்டது. சிவகிரியில் ஜீவா படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

**ஈரோடு வடக்கு:** சத்தியமங்கலத்தில் ஏஐடியூசி தலைவர் இரா.ஸ்டாலின் சிவக்குமார் தலைமையில் மரியாதை செலுத்தப்பட்டது. இதில் விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் சி.கே.முருகன், ஜீவா குறித்து உரையாற்றினார்.

**தஞ்சாவூர்:** கட்சியின் மாவட்டச் செயலாளர் முத்து உத்திராபதி தலைமையில், மாவட்டப் பொருளாளர் கோ.பாஸ்கர் முன்னிலையில், உறுதி மொழி ஏற்கப்பட்டது. இதில் கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர்கள் வீரமோகன், வெ.சேவையா, பி.குணசேகரன், ஆர்.பி.முத்துக்குமரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கலை இலக்கியப் பெருமன்றம தஞ்சை மாவட்டக் குழு சார்பில், மாவட்டச் செயலர் முனைவர் அய்யாறு ச.புகழேந்தி, கவிஞர் தாஜீபால் உரை நிகழ்த்தினர்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# எஸ்.வி.காட்டே

## முதலாவது பொதுச் செயலாளர்



**சச்சிதானந்த விஷ்ணு காட்டே, 1894 டிசம்பர் 14ஆம் தேதி அன்று மங்களூரில் பிறந்தார். பம்பாயில் பிகாம் பட்டம் பெற்றார். எஸ். ஏ.டாங்கே நடத்தி வந்த சோசியலிஸ்ட் பத்திரிகையோடு தொடர்பு ஏற்பட்டு, கம்யூனிஸ்ட் ஆனார்.**

இருவரும் காங்கிரஸில் இணைந்து செயல்பட்டனர். அதற்குள்ளேயே ஒரு தீவிரக் குழுவையும் உருவாக்கினார்கள். அதிலிருந்து ஜோக்லேகர், எஸ்.எஸ். மிராஜ்கர், ஆர்.எஸ்.நிம்கர் என பல தலைவர்கள் வளர்ந்து, பம்பாயிலும் சுற்றுப்பகுதியிலும் தொழிலாளர் இயக்கத்தைக் கட்டினர்.

1925 ஆம் ஆண்டு கட்சி அமைப்பு விதிகளில் மூன்று பொதுச் செயலாளர்களுக்கு இடமிருந்தது. அதன்படி அமைப்பு மாநாட்டில் இரண்டு பொதுச் செயலாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் காட்டே, மற்றொருவர் ஜே.பி. பாகர்கட்டா. 1927ல் கட்சியின் விரிவடைந்த மத்திய நிர்வாக குழு கூட்டத்தில் ஒரு பொதுச் செயலாளர் என்றாக்கப்பட்டு, மீண்டும் காட்டே தேர்வானார்.

அன்று மும்பையில் மிகுந்த வலிமையோடு திகழ்ந்த கிர்ணி கம்கார் யூனியன் (பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம்), தொழிலாளர்கள் விவசாயிகள் கட்சி ஆகியவற்றின் தலைமை பொறுப்புகளில் அவர் இருந்தார்.

1929 இல் மீரட் சதி வழக்கில் கைது செய்யப்பட்டார். அன்றைய பம்பாய் மாகாணத்தில் கட்சியைத் தோற்றுவித்தவர்களில் அவர் ஒருவர்.

1934 மங்களூரில் கண்ணூர் பீடி தொழிலாளர் சங்கத்தை உருவாக்கினார். 1935 இல் காலனி ஆதிக்கத்தை எதிர்க்கும் எல்லோரையும் ஒன்று சேர்க்கும் போர்த்தந்திரத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கியது.

1936இல் மதராஸ் மாகாணத்திற்கு கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டுவதற்காகக் காட்டே அனுப்பப்பட்டார். சென்னையில் அவர் சிங்காரவேலர், வ.சுபையா, ஜீவா, பி.சீனிவாசராவ், கே.முருகேசன், பி. சுந்தரையா, அனந்த நம்பியார் உள்ளிட்டோரைச் சந்தித்தார். சென்னை துறைமுகத் தொழிலாளர் சங்கத்தில் இருந்து தொழிற்சங்கத்தையும் கட்சியையும் கட்டுகிற பணியினை ஒருங்கிணைத்தார்.

சென்னையில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த ‘நியூஏஜ்’ இதழின் ஆசிரியரானார்.

பின்னர் கேரளாவுக்குச் சென்ற அவர் இ.எம்.எஸ் நம்பூதிரிபாட், பி.கிருஷ்ணபிள்ளை, கே. எம்.தாமோதரன், என்.சி.சேகர் உள்ளிட்டோர் அடங்கிய முதலாவது கம்யூனிஸ்ட் கிளையை உருவாக்குவதற்கு துணை புரிந்தார்.

1944 கைது செய்யப்பட்டு தமிழ்நாட்டின் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டு, பிறகு சித்திரவதைகளுக்கு புகழ் பெற்ற தியோலி சிறைக்கு அனுப்பப்பட்டார்.

டாங்கே, அஜய் கோஷ் ஆகியோருடன் இணைந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஆவணமாக உள்ள ‘3பி கடிதம்’ எழுதினார்.

டெல்லியில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகமான அஜாய் பவனைக் கட்டி எழுப்புவதில் முக்கியப் பங்களிப்பு வழங்கியவர். கட்சியின் பொருளாளராகவும், மத்தியக் கட்டுப்பாட்டுக் குழுவிலும் அவர் பணி புரிந்துள்ளார்.

1970 நவம்பர் 28ஆம் தேதி அவர் புது டெல்லியில் காலமானார்.

14 ஆம் பக்க தொடர்ச்சி

**திண்டுக்கல்:** திண்டுக்கல்லில் கட்சியின் மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன் மரியாதை செலுத்தினார். மாநகரச் செயலாளர் பி.கிருஷ்ணசாமி வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் திண்டுக்கல் மாவட்டக் குழு உறுப்பினர் பேராசிரியர் ஆ.சேரிவாணன், கவிஞர் முராநி உரையாற்றினர். கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் சு.பிரபாகரன் நிறைவுரையாற்றினார்.

**திருச்சி:** புத்தூர் அக்ரஹாரம் பகுதியில், மேற்குப் பகுதி துணைச் செயலாளர் முருகன் தலைமையில், துரைராஜ், முருகேசன் முன்னிலையில் பொது மக்களுக்கு உணவு வழங்கப்பட்டது. மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ், மேற்குப் பகுதிச் செயலாளர் இரா.சுரேஷ்முத்துசாமி, பொருளாளர் ரவீந்திரன், சூர்யா, சுமதி ஆகியோர் பங்கு பெற்றனர்.

**திருச்சி புறநகர்:** மணப்பாறை கட்சி அலுவலகம் முன்பாக, கட்சியின் நகரச் செயலாளர் ஜனசக்தி உசேன் தலைமையில், விவசாயச் சங்க மாநில துணைச் செயலாளர் இந்திரஜித் அஞ்சலி உரை நிகழ்தினார். போக்குவரத்துக் கழக சுப்பிரமணியன், கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர்கள் ரவிச்சந்திரன், சௌக்கத் அலி ஆகியோர் பங்கேற்றனர்.

**கன்னியாகுமரி:** குமரியில் மாவட்டக் குழு உறுப்பினர் சஜேஷ் தலைமையில். நாகர்கோவில் ஜீவா சிலைக்குக் கட்சியின் மாவட்டச் செயலாளர் தா.சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் அசோகன் மற்றும் கண்ணன் மாலை அணிவித்தனர். மக்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி துவரங்காட்டில் இருந்து நடைபயணத்தை மூத்த தோழர் பூதலிங்கம் தொடங்கி வைத்தார். பூதையில் உள்ள ஜீவா சிலைக்கு, கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் தா.மகேஷ் மாலை அணிவித்தார். இறுதியாக ஆரல் பாலன் இசைக்குழுவின் செண்டைமேளம், மக்கள் இசைபாடல்களுடன் மக்கள் பாடகர் நல்லதம்பி நினைவாக வீதி விழா சாட்டு புதூரில் நடைபெற்ற வீதிவிழாவை, கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.அனில்குமார் தொடங்கிவைத்தார்.

**கள்ளக்குறிச்சி:** உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர் கெடிலத்தில் கட்சியின் மாவட்டப் பொருளாளர் மா.வெங்கடேசன் தலைமையில், ஒன்றிய நிர்வாகிகள் பாலையா, ஜானகிராமன், தாமோதரன், சுமதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**அரியலூர்:** அரியலூர் கட்சி அலுவலகத்தில், கட்சியின் முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் டி.தண்டபாணி, அரியலூர் ந.கோவிந்தசாமி, மாவட்டக் குழு உறுப்பினர் திருமானூர் ஆறுமுகம், செந்துறை கே. சிவகுமார் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சிறிய இரத்தப் பரிசோதனை நிலையங்களை மூடும் வகையில் அரசு செயல்படுவதைக் கைவிடக் கோரி ஆர்ப்பாட்டம்

## சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் அறிவிப்பு

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் மற்றும் பாரா மெடிக்கல் கல்வி மற்றும் நலச் சங்கத்தின் அகில இந்திய தலைவர் ப.காளிதாசன் தங்களது அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில், வெளியிடப்பட்டுள்ள இந்த அரசாணையில், இரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே மற்றும் மற்ற பரிசோதனை நிலையங்கள் செயல்பட தேவையான அளவு இட வசதி குறித்த நெறி முறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி நகர்புறத்தில் உள்ள இரத்தப் பரிசோதனை நிலையங்கள், ஜெனிடிக் பரிசோதனை நிலையங்கள், நோய்க்குறியியல் பரிசோதனை நிலையங்கள் மற்ற பிறவற்றிற்கும், 500 முதல் 700 சதுர அடி பரப்பளவும், கிராமப்புறத்தில் உள்ள இத்தகைய பரிசோதனை நிலையங்களுக்கு 300 சதுர அடி பரப்பளவும் இருக்க வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

மரபியல் இரத்தப் பரிசோதனை நிலையங்கள் 100 க்கும் குறைவாகவே உள்ளன. எக்ஸ்ரே போன்ற பரிசோதனைகளைச் செய்கின்ற நிலையங்கள் 15 லிருந்து 20 விழுக்காடு அளவிற்கு மட்டுமே உள்ளன. மீதமுள்ள 80 விழுக்காடு பரிசோதனை நிலையங்கள், வெறும் ரத்தப் பரிசோதனைகளை மட்டுமே செய்கின்றன. அந்தச் சிறிய இரத்தப் பரிசோதனை நிலையங்கள் மூலமாகவே தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான ஏழை, எளிய மக்கள் தங்களுடைய ரத்தப் பரிசோதனைகளை, மிகக் குறைந்த கட்டணத்தில், எளிதாக தங்கள் வாழ்விடங்களுக்கு அருகிலேயே செய்து கொள்கின்றனர்.

இந்நிலையில், இந்த அரசாணை என்பது சங்கிலித் தொடர் போல் நாடு முழுவதும் கிளினிக்கல் பரிசோதனை மையங்களைத் தொடங்கி வரும், பெரிய மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குச் சாதகமானதாக அமைந்துள்ளது. அவற்றின் வளர்ச்சிக்காக, லாப வேட்கைக்காக 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறிய இரத்தப் பரிசோதனை நிலையங்களை ஒழித்துக் கட்டுவதாக உள்ளது.

ஒன்றிய பா.ஜ.க அரசின் நலவாழ்வுக் கொள்கையால், மருத்துவத் துறையில், மக்கள் நலன்களுக்கு எதிராக உருவாகி வரும் கூட்டுப் பயனாளி முதலாளித்துவத்தின் காரணமாக மருத்துவச் சேவைகள் கார்ப்பரேட் மயமாகிவருகிறது. கார்ப்பரேட் மயமாக்கலுக்குச் சாதகமாக இந்த அரசாணை எண் 390 உள்ளது. இந்த அரசாணை மூலம் லேப் டெக்னீசியன் படிப்பை முடித்துவிட்டு, அரசு வேலை கிடைக்காததால், தனியாகச் சொந்தமாகச் சிறிய கிளினிக்கல் இரத்தப் பரிசோதனை மையங்களை வைத்துள்ள டெக்னீசியன்கள், தங்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் சூழலை தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறை ஏற்படுத்தியுள்ளது. இது அவர்களின் குடும்பங்களைக் கடுமையாகப் பாதிக்கும். கார்ப்பரேட் பரிசோதனை நிலையங்கள் ஏராளமான கிளைகளை எளிதாகத் தொடங்கிடுவதற்கு உதவுவதாக இந்த அரசாணை உதவியாக உள்ளது.

இரத்தப் பரிசோதனை நிலையங்களை ஒன்றிய அரசு, அடிப்படை (Basic), நடுத்தர (Medium) மற்றும் முன்னேறிய (Advanced) என வகைப்படுத்தி 2012 ம் ஆண்டு, மருத்துவ நிறுவனங்கள் முறைப்படுத்தும் சட்ட விதிமுறைகளின் மூலம் அறிவித்துள்ளது. அதைப் போல் தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறை வகைப்படுத்திடாமல், அனைத்துவகைப் பரிசோதனை மையங்களையும், ஒரே வகையினமாக, சமமானவையாக (Equal) வகைப்படுத்தியதின் மூலம், தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறை சிறிய இரத்தப் பரிசோதனை நிலையங்களை ஒழித்துக் கட்ட முயல்கிறது.

தமிழ்நாடு அரசு சிறிய இரத்தப் பரிசோதனை மையங்களையும், பெத்தாலஜிக்கல், ஜெனிட்டிக்கல் போன்ற பல வகைப்பட்ட பரிசோதனைகளை செய்யும், இதர பெரும் பரிசோதனை மையங்களுடன் இணைத்து ஒன்றாக வகைப்படுத்தி, இடவசதியை நிர்ணயம் செய்துள்ளது தவறான நடவடிக்கையாகும்.

எனவே, தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை 28.11.2024 அன்று வெளியிட்டுள்ள நிளி 390

அரசாணையை ரத்து செய்ய வேண்டும். எக்ஸ்ரே போன்ற பல்வேறு வேறு வகையான பரிசோசனைகளைச் செய்யாமல், ரத்தப் பரிசோதனைகளை மட்டுமே செய்கின்ற நிலையங்களுக்குக் குறைந்த இடமே தேவைப்படுகிறது. எனவே, இரத்தப் பரிசோதனைகளை மட்டுமே செய்கின்ற நிலையங்களுக்குத் தேவைப்படும் இடம் பற்றி, அரசாணையில் தனியே அரசு அறிவிக்க வேண்டும்.

நகர்புற இரத்தப் பரிசோதனை நிலையங்களுக்குக் குறைந்தபட்ச இடவசதி 150 சதுர அடி எனவும், கிராமப்புற இரத்தப் பரிசோதனை நிலையங்களுக்கு 100 சதுர அடி எனவும் நிர்ணயிக்க வேண்டும்.

இரத்தப் பரிசோதனை மையங்களை, பரிசோதனைக்கு வரும் பயனாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, செய்யப்படும் பரிசோதனைகளுக்கு ஏற்ப வகைப்படுத்திட வேண்டும். அதற்கேற்ப இட வசதிகளை, சங்க நிர்வாகிகளை அழைத்துப் பேசி நிர்ணயிக்க வேண்டும்.

ரத்தப் பரிசோதனை நிலையங்களை ஒன்றிய அரசு அறிவித்துள்ளது போல் அடிப்படை, நடுத்தர மற்றும் முன்னேறிய என வகைப்படுத்த வேண்டும் என்பதைத் தங்களது அறிக்கையில் வலியுத்தியுள்ளனர்.

**janasakthi labour Youtube சேனலில் இந்த காணொளிகளைப் பார்க்க க்யூ ஆர் கோடை ஸ்கேன் செய்யவும்.**






JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201 Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026 WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday at Egmore RMS 1 / Patrika Channel. Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

# ஐஏஎல் சார்பில் ஆர்.என்.கே இல்லத்தில் நூலகம் திறப்பு





## நீதிபதி பங்கேற்பு

விடுதலைப் போராட்ட வீரர் மூத்த பொதுவுடைமைத் தலைவர் தகைசால் தமிழர் தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களது பிறந்த நூற்றாண்டு விழா இந்திய வழக்கறிஞர்கள் சங்கம் (ஐஏஎல்) தமிழ்நாடு மாநிலக் குழு சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டடது.

19012025 அன்று மாலை 4 மணிக்கு, தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களது வீட்டில், 500 க்கு மேற்பட்ட புத்தகங்கள் அடங்கிய அலமாரி அவரிடம் வழங்கப்பட்டது.

ஓயாத படிப்பாளியான அவர், கட்சியின் சென்னை தலைமையகத்துக்கு வரவழைக்கப்பட்ட போது, அவருக்கு நூலகப் பராமரிப்பு மற்றும் தகவல் களஞ்சியம் (இன்ஃபர்மேஷன் பீரோ) பொறுப்புதான் முதன் முதலில் தரப்பட்டது. அவரே சில புத்தகங்களை எழுதியுள்ளார். மற்ற பலரின் புத்தகங்களுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரைகளைத் தொகுத்தால், சில தொகுதிகளாக அவற்றை வெளியிடமுடியும். அவருக்கு புத்தகங்கள் நிரம்பிய ஒரு அலமாரி வழங்கப்படுவது தனிச் சிறப்பானது.

நூலகத்தைத்திறந்துவைத்துசென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் என்.ஆனந்த் வெங்கடேஷ் சிறப்புரையாற்றினார்

விழாவிற்கு இந்திய வழக்கறிஞர்கள் சங்க, தமிழ்நாடு மாநிலத் தலைவர் கு.சாமித்துரை தலைமை வகித்தார்.

மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் கே.கே. சாமி வரவேற்றார்.

ஜனசக்தி ஆசிரியர் டி.எம். மூர்த்தி வாழ்த்துரை வழங்கினார்.

ஐஏஎல் சங்க நிர்வாகிகள் கோ. பாண்டியன், வி.அழகிரிசாமி, ஆர்.கிருஷ்ணகுமார், ஏ.ஆதிமூலம், பியுலா ஜான் செல்வராஜ், ப.மா. பாலமுருகன், முன்னணி பொறுப்பாளர்கள் வழக்கறிஞர்கள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

சென்னை மாவட்ட செயலாளர் முபின் நன்றியுரை கூறினார்

விழா ஏற்பாட்டினை ஐஏஎல் மாநில பொருளாளர் குடந்தை கே.ஆர். ராமமூர்த்தி, எஸ்.ஏழுமலை மற்றும் எஸ்.கே.சிவா ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# ‘தந்தை பெரியார் முன்னிலும் அதிகம் தேவைப்படுகிறார்’

## வியாசர்பாடியில் கருத்தரங்கம்

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் வடசென்னை மாவட்டக் குழு சார்பில் 20.01.2025 அன்று மாலை 6.30 மணிக்கு ‘தந்தை பெரியார் முன்னிலும் அதிகம் தேவைப்படுகிறார்’ என்ற தலைப்பில் மாவட்ட தலைவர் இரா.மோ.சந்தோஷ்குமார் தலைமையில் வியாசர்பாடி ஸ்ரீ மூகாம்பிகை திருமண மஹாலில் நடைபெற்றது.

பெரியார் படத்தை நியுசெஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் க.சந்தானம் திறந்து வைத்துக் கருத்தரங்கத்தைத் துவக்கி வைத்துப் பேசினார். திராவிடக் கழக துணைப்பொதுச் செயலாளர் பிரின்சு என்ற ராசு, ஜனசக்தி ஆசிரியர் டி.எம்.மூர்த்தி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் மு.வீரபாண்டியன் ஆகியோர் பெரியாரியத்தின் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்கள்.

முன்னதாக தமிழ்நாடு அரசு சார்பில் திரு.வி.க விருது பெற்ற மருத்துவர் ஜி.ஆர்.ரவிந்திரநாத் அவர்களுக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டு வாழ்த்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வட சென்னை மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ், முன்னாள் மாவட்டச் செயலாளர் எம்.எஸ். மூர்த்தி, தென்சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.கே. சிவா, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலச் செயலாளர் லி.உதயகுமார் செங்கல்பட்டு மாவட்ட தலைவர் கர்ணா வடசென்னை மாவட்டத் தலைவர் ஜி.சுப்பிரமணி திருவள்ளூர் மாவட்ட தலைவர் கிருஷ்ணன் தென்சென்னை ஆர்.சௌமியா இந்தியக் கம்யூனிட் கட்சியின் வடசென்னை மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆ.சுப்பிரமணி எக்ஸ்.எம்சி எம்.வசந்தகுமார் ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் ஏ.அருள் பெரம்பூர் தொகுதிச் செயலாளர் கோட்டி சுரேஷ் ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் வடசென்னை மாவட்ட நிர்வாகிகள் சுவாமிநாதன் எம்.சி.தில்குமார் சி.ஜே.ஆனந்தன் மத்திய சென்னை தலைவர் மாதவன் மற்றும் முன்னணி நிர்வாகிகள் உட்பட 200 பேர் கலந்து கொண்டனர். தோழர்கள் மூர்த்தி, சிவா ஆகியோரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. தோழர்கள் முனுசாமி, லஷ்மிஜெகநாதன் முன்னிலை வகித்தனர். நிறைவாக சரவணகுமாரி நன்றி கூறி நிகழ்ச்சி நிறைவு பெற்றது.








Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.